வறுமை துன்பங்களின் போதும் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையே நடக்கும் போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்கள் புண்ணியமானவர்கள் (அல்குர் ஆன் 2 : 177 )


# வைகறை வெளிச்சம்

ஏப்ரல் 2010 - ரபிஉல் ஆகிர் 1431

**Volume : 3 Issue 3**



ஆசிரியர்
மு. குலாம்முஹம்மது
M.A. M.Com. JMC

துணை ஆசிரியர்
கே.எம். இல்யாஸ் ரியாஜி

இணை ஆசிரியர்
எம். முஜிபுர்ரஹ்மான் உமரி



தனி இதழ் ரூ. 10/-

ஆண்டுச் சந்தா
**உள்நாடு ரூ.140/-**
**வெளிநாடு ரூ. 1000/-**

**பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்**

வைகறை வெளிச்சம்
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு : 9444239594




**VAIGARAI VELICHAM**
235, Peters Road, Royapettah, Chennai - 600 014.
**Phone: 044-45566909 Mob: 9444239594**
E-mail: darultrust@yahoo.com
Website : www.darulislam.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Private circulation to promote the Original Issue.


கவர் ஸ்டோரி



பக்கம் 42

**யார் இந்த டேவிட் கோல்மென் ஹெட்லி?**


| | |
|---|---|
| 1. தரீக்குல் குர்ஆன் | 4 |
| 2. நபிமொழி விளக்கம் | 10 |
| 3. நாம் பிரிந்துவிட வேண்டாம் | 14 |
| 4. 60 வயதுக்கு பிறகு. . . | 18 |
| 5. பாட்லா ஹவுஸ் | 20 |
| 6. துறவு அறமல்ல | 23 |
| 7. அம்பேத்கர் சந்தித்த அவமானங்கள் | 26 |
| 8. கர்கரேயை கொலை செய்தது யார்? தொடர் | 33 |
| 12. இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இலட்சிய ஓட்டத்தில் தன்னைத் தந்த மழவர்கள்! | 35 |
| 13. யார் இந்த டேவிட் கோல்மென் ஹெட்லி? கவர் ஸ்டோரி | 40 |
| 14 இஸ்லாமும் விஞ்ஞானமும் | 53 |
| 15. கம்யூட்டர் கல்வி | 57 |
| 16. பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை | 59 |

# ஒழுக்கமில்லா கல்வி தேவையா?

உண்மையில் இஃதோர் வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டம்.

இப்படி ஒரு சட்டம் வருவதற்கு அறுபத்து மூன்றாண்டுகள் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதும் காத்திருக்க வேண்டிய நிலை இருப்பதும் நாகரிக சமுதாயத்துக்கு பெரும் இழுக்கு.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் ஆகிய சட்டங்கள் மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான அரசின் சாதனைகள். இவற்றை த் தொடர்ந்து இன்னொரு சட்டத்தையும் அமல்படுத்தி சாதனை படைத்துள்ளது.

ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளும் கல்வி கற்பதை அடிப்படை உரிமையாக்கும் சட்டம் ஏப்ரல் 2010 முதல் செயல்படத் தொடங்கும் என நடுவண் அரசு அறிவித்துள்ளது.

பள்ளிக்கூடத்தின் பக்கம் தலைவைத்துக் கூடப் படுக்காத சுமார் தொன்னூற்றி இரண்டு இலட்சம் குழந்தைகள் இச்சட்டத்தின் மூலம் பயனடைவார்கள் எனக்கருதுகிறது நடுவண் அரசு. இந்த சட்டத்தை அமல்படுத்திட அடுத்த ஐந்தாண்டுகளுக்கு தேவைப்படும் பணம் எவ்வளவு தெரியுமா? சுமார் 1.71 இலட்சம் கோடி ரூபாய்.

இச்சட்டத்தை அமல்படுத்திடத் தேவைப்படும் நிதியை நடுவண் அரசு 55 சதவீதமும் மாநில அரசுகள் 45 சதவீதமும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்துள்ள நடுவண் அரசு மாநில அரசுகளுக்கு இருபத்து ஐந்தாயிரம் கோடி ரூபாயை வழங்கி உதவி செய்துள்ளது. 6முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் கல்வி கற்றிட பள்ளிக்கு செல்கிறார்களா? என்பதை மாநில அரசுகள் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்கிறது மத்திய அரசு.

இந்திய அரசியல்ச ட்டம் கொள்கை விளக்கம் நான்காம் பாகம் 45வது பிரிவு இந்திய அரசியல் சாசனம் துவக்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்குள் குழந்தைகள் அனைவரும் பதினான்கு வயது முடியும் வரையில் இலவசமாகவும் கட்டாயமாவும் கல்வி பெறுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்திட வேண்டும் என்று வழிகாட்டியுள்ளது வலியுறுத்தியுள்ளது

இதற்கான சட்டத்திருத்தம் 86வது சட்டத்திருத்தமாக 2002ம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு புதிய சட்டம் வடிவமைக்கப்பட்டு கடந்த ஆண்டு இச்சட்டம் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுள்ளது.

அரசியல் சட்டம் அமலுக்கு வந்து ஆறு பத்தாண்டுகள் கழிந்து விட்ட பின்னரே இச்சட்டம் கனிந்துள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்கள் ஏழை குழந்தைகளுக்கு கல்வி தருவதற்காக 25 சதவீத இடங்களை ஒதுக்க வேண்டும் என்பது இச்சட்டத்தின் சிறப்பு.

மத்திய அரசின் இந்த ச்சட்டம் காலங்கடந்த சட்டம் என்பதில் ஐயமில்லை எனினும் வரவேற்புக்கும் பாராட்டுக்கும் உரியது.

இந்தியா பரந்து விரிந்த பரப்பளவும் செழித்துக்கிடக்கும் மக்கள் வளமும் உள்ள நாடு இங்கே அரசே கல்வி நிறுவனங்களை நிறுவி நடத்துவது சாத்தியமில்லாத விஷயம். பொருளாதார நடைமுறை சிக்கல்களை கொண்ட பிரச்னை இது. எனவே தான் தனியார்கல்வி நிறுவனங்கள் தோன்றின. இந்த தனியார் கல்வி நிறுவனங்கள் தோன்றியிருக்காவிட்டால் கல்வியறிவில் இவ்வளவு தூரம் நாம் முன்னேறியிருப்போமா? என்பது சந்தேகமே.

ஆனால் அவை பணங்காய்க்கும் மரங்களாக ஆகும் வரை வேடிக்கைப்பார்த்து கொண்டிருப்பது அரசின் தவறே. இச்சட்டத்தின் கீழ் தனியார் கல்வி நிறுவனங்கள் மீதும் சில சதவீதப் பொறுப்புகளை தூக்கி வைத்திருப்பது நியாயமே.

பள்ளிப்படிப்பு கல்லூரிப் படிப்பு அதன் பின் வேலைவாய்ப்பு படிப்புக்கேற்ற வரதட்சணை என்று படிப்புக்கு வேறு சில சமூகப் பின் விளைவுகள் முளைத்திருப்பதும் குழந்தைகளுக்கு தரப்படும் கல்வியை ஒரு முதலீடாக பார்த்திடும் வியாபார ரீதியான பார்வையும் தான் கல்வி வணிகமானதற்குக் காரணம்.

கல்வியை அறிவு மற்றும் ஆராய்ச்சிக்கான வாசலாக பார்த்திட வேண்டும். வருமானம் ஈட்டும் கருவியாக பார்க்க கூடாது அறிவுக்கா கல்வியே தவிர வேலைக்காக அல்ல இதுவே இனிய இஸ்லாம் கூறும் கொள்கை.

கற்ற கல்வியின் மூலம் பொருளீட்டக் கூடாது என்று இஸ்லாம் கூறவில்லை. பொருளீட்டுவதே கல்வியின் இலட்சியமாக இருந்திடக் கூடாது என்கிறது இஸ்லாம். அறிவு ஆராய்ச்சி சிந்தனை இவற்றுக்கு இஸ்லாம் தரும் முன்னுரிமையை போல் வேறெந்தக் கொள்கையும் தரவில்லை எனலாம்.

பேரறிஞர் யூசுப் அல் கர்ளாவீ கூறுகின்றார் இதர வேதமாம் பழைய புதிய ஏற்பாடுகளில் கல்வி, சிந்தனை, ஆராய்ச்சி, சான்று, அறிவு, நுண்ணறிவு ஆகிய சொற்களை எங்கேயும் உங்களால் காண முடியாது. அதை படிக்கும் நீங்கள் அறிவீர்கள். ஆனால் திருக்குர்ஆனை படியுங்கள் அங்கே இல்ம் கல்வி எனும் சொல் 80 தடவை. அல்பாப் அறிவாளிகள் எனும் சொல் 16 தடவை. நுஹா அறிவாளி எனும் சொல் இரண்டு தடவை. அக்ல் அறிவு எனும் வேர்ச்சொல் மூலம் பிறந்த சொற்கள் 49 தடவை ஃபிக்ர் சிந்தனை எனும் வேர்ச்சொல்லிருந்து வந்துள்ள சொற்கள் 21 தடவை. ஹிக்மத் நுண்ணறிவு எனும் சொல் 20 தடவை புர்ஹான் சான்னு எனும் சொல் 7 தடவை இடம் பெற்றுள்ளன. இஃதன்றி உன்ழுரூ ஆராய்ச்சி செய்யுங்கள் என்று கல்வியுடன் தொடர்புடைய சொற்கள் ஏராளம் இடம் பெற்றுள்ளன (நூல் அர்ரசூலு வல் இல்மு)

எகிப்தின் புகழ் மேவிய கல்வி நிறுவனமான அல்ஜாமியுல் அஸ்ஹர் கலாசாலையில் திருக்குர்ஆன் ஆராய்ச்சிப் பிரிவு கூறுகின்றது. சிந்திக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்ற வசனங்கள் திருக்குர்ஆனில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 750 வசனங்கள் உள்ளன. (நூல் திருக்குர்ஆன் சிந்தனைகள்– ஏகே ரிபாயீ)

கல்வியைத் தேடுவது கட்டாய க் கடமை என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். (நூல் இப்னுமாஜா)

இவ்வாறு கல்வியின் அவசியத்தையும் அதன் கடமையையும் மக்களிடம் பதிய வைத்து ஒரு சமூகப் புரட்சியை இஸ்லாம் உருவாக்கிற்று. இதனால் தாம் கல்வி கற்பதை தம் சமுதாயத்துக்கு ச் செய்திடும் சேவையாக கருதினார் ஒரு முஸ்லிம். எனவே எட்டுத்திக்கிலும் இஸ்லாம் பரவிக் கொண்டிருந்தபோது சிந்தனையாளர்கள் ஆராய்ச்சியாளர்கள் தோன்றினார்கள்.

அவர்கள் பல புதிய கண்டுபிடிப்புகளை நவீன உலகத்துக்கு தந்தார்கள். நோய் தீர்க்கும் மருந்துகளை கண்டுபிடித்தார்கள். கடல் வழியாக உலகைச் சுற்றும் வழிகளை அறிந்தார்கள். அல்ஜிப்ரா கணித முறையை அறிமுகப்படுத்தி அவனிக்கோர் புதிய முன்னேற்றத்தை வழங்கினார்கள்.

மருத்துவ துறையில் அபூஅலி சீனா, இரசாயனத்தின் தந்தை அபூபக்கர் முஹம்மது பின் ராஜீ, கேமரா கண்டுபிடிக்கப்பட முன்னோடியாக இருந்த இப்னு ஹைதம், மூலிகைகளின் மருத்துவ குணங்களைக் கண்டறிந்து சொன்ன இப்னு பைத்தார் இவர்களெல்லாம் கற்ற கல்வியை வைத்து சொத்து சேர்த்தவர்களல்லர். வாழும் தலைமுறைக்கும் வாழப்போகும் தலைமுறைக்கும் சொத்துகளாகத் திகழ்ந்தார்கள்.

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் திருப்தியை நாடிக் கற்றிட வேண்டிய கல்வியை உலகத்தின் செல்வங்களை சேர்ப்பதற்காக கற்பவன் சுவனத்தின் வாடையை கூட நுகர முடியாது (அறிவிப்பாளர் அபூஹுரைரா (ரழி) அஹ்மது)

இதுபோன்ற அறவுரைகள் முஸ்லிம் கல்வியாளர்களை தன்னலமற்றவர்களைத் திகழ வைத்தது. இந்த வழிகாட்டுதல்களை ஏற்காத தலைமுறைகள் உருவான போது அதன் அறிஞர்கள் பேரழிவு ஆயுதங்களை கண்டுபிடித்திடத் தான் தம் அறிவைப் பயன்படுத்தினார்கள்.

1400 ஆண்டுகளுக்கு முன்னரே கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும் தந்த இஸ்லாம் கல்வியாளர்களை அறிவுஜீவிகளாக மட்டுமல்லாமல் சமூகச் சேவையாளர்களாகவும் உருவாக்கிற்று.

அனைவருக்கும் கல்வி என்பதை இலட்சியமாகக் கொண்டு நடுவண் அரசு தந்திருக்கும் இந்த சட்டம் அறிவாளிகளை மட்டும் உருவாக்கினால் போதாது. மனித குலத்தின் மீது அக்கறையுள்ளவர்களையும் தந்திட வேண்டும்.

அப்படித் தந்த ஒரு கொள்கை இஸ்லாம் இதில் இஸ்லாத்தின் அனுபவத்தை அறிந்திடவும் அதை ஏற்றிடவும் முன் வந்தால் இத்திட்டம் முழு வெற்றி பெறும்.

அனைவருக்கும் கல்வி எனும் இத்திட்டம் அறிவுள்ள ஷைத்தான்களை உருவாக்குவதற்கு பதிலாக சேவை மனப்பான்மையுள்ள அறிவுஜீவிகளை உருவாக்க வேண்டும்.

35 وَقُلْنَا يٰۤاٰدَمُ اسْكُنْ اَنْتَ وَزَوْجُكَ
الْجَنَّةَ وَكُلَا مِنْهَا رَغَدًا حَيْثُ
شِئْتُمَا ۖ وَلَا تَقْرَبَا هٰذِهِ الشَّجَرَةَ
فَتَكُوْنَا مِنَ الظّٰلِمِيْنَ ۝
36 فَاَزَلَّهُمَا الشَّيْطٰنُ عَنْهَا فَاَخْرَجَهُمَا
مِمَّا كَانَا فِيْهِ ۖ وَقُلْنَا اهْبِطُوْا بَعْضُكُمْ
لِبَعْضٍ عَدُوٌّ ۚ وَلَكُمْ فِى الْاَرْضِ
مُسْتَقَرٌّ وَّمَتَاعٌ اِلٰى حِيْنٍ ۝

**வசனம் - 35 - 36**

ஆதமே! நீரும் உம் மனைவியும் சுவனத்தில் குடியிருங்கள். நீங்கள் இருவரும் விரும்பியபடி தாராளமாக இதிலிருந்து உண்ணுங்கள். இந்த மரத்தை நீங்களிருவரும் நெருங்க வேண்டாம். (நெருங்கினால்) நீங்களிருவரும் அநியாயக் காரர்களிலுள்ளவர்களாவீர்கள்.

அவ்விருவரையும் அதிலிருந்து ஷைத்தான் சருகவைத்தான். அவர்கள் இருந்ததிலிருந்து வெளியேற்றினான். நாம், “நீங்கள் (அனைவரும்) இறங்குங்கள். உங்களில் சிலர் சிலருக்கு பகைவராய் இருப்பீர்கள். பூமியில் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை தங்குமிடமும் அனுபவிக்கும் பொருள்களுமுண்டு” என்று கூறினோம்.



ஆதம் நபியை தன்னு டைய பிரதி நிதியாகப் படைத்த அல்லாஹ் அவர்களுக்கு பலவகை உயர்வுகளை வழங்கி னான். அனைத்து ஞானங்களை யும் கற்றுக் கொடுத்தான். மலக்கு களை சிரம் பணிய வைத்தான் என்பதை முன்னர் கண்டோம்.

இந்த 35-வது வசனத்தில் வேறு சில உயர்வுகளை வழங்கியிருந்ததைக் கூறுகிறான். ஆதம் நபிக்குத் துணையாக மனைவியை வழங்கினான். அவர்களிருவரையும் சுவனத்தில் குடியமர்த்தினான். விரும்பியபடி விரும்பியதை உண்ணும் சுதந்திரத்தை வழங்கினான். இவை தான் அந்த அருள்கள்.

## குடியிருங்கள்

இப்லீஸ் அல்லாஹ்வின் கட்டளைக்குக் கட்டுப்பட மறுத்து மாறு புரிந்த போது அவனை அல்லாஹ் சுவனத்திலிருந்து வெளியேற்றி தூரத்தில் வைத்து விட்டான். பின்னர் ஆதம் நபியி டம் உஸ்குன் = சுவனத்தில் குடியிருப்பீராக என்று கூறினான்.

# தரீக்குல் குர்ஆன் - 27

இந்த உஸ்குன் என்ற சொல்லின் வேர்ச்சொல் சுகூன். சகன் என்பனவாகும். இதன் பொருள் அசைவற்று நிம்மதியாக இருப்பது என்பதாகும். இதிலிருந்து தான் சிக்கீன் = கத்தி, மிஸ்கீன் = ஏழை. சுக்கானுஸ்ஸஃபீனா = கப்பலை நிறுத்திடும் நங்கூரம் ஆகிய சொற்கள் வந்துள்ளன.

கத்தியால் அறுக்கப்பட்ட மிருகம் அசைவற்று அடங்கி விடுகிறது. ஏழையை ஏழ்மை அடங்க வைக்கிறது. நங்கூரம் கப்பலை அசையாமல் நிறுத்தி விடுகிறது என்பதால் அவற்றுக்கு அப்பெயர்கள் வந்துள்ளன.

குடியிருங்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். இச்சொல் கொஞ்ச நாள் தங்கியிருப்பதைக் குறிக்கும். "அந்த இடம் உங்களுக்கு உரிமையானது அல்ல" என்று அந்த வார்த்தை சுட்டிக் காட்டுவதாக ஞானிகள் கூறுகின்றனர். (நூல்:-குர்த்துபீ)

## ஸவ்ஜூக்க

இதற்கு உம்முடைய ஜோடி என்று பொருள். கணவன் மனைவி இருவருக்கும் இச்சொல் பயன்படும். இவ்விடத்தில் இச்சொல் ஆதம் நபியின் மனைவி ஹவ்வா (அலை)வைக் குறிக்கும்.

இப்னு மஸ்ஊத்(ரழி) இப்னு அப்பாஸ் (ரழி) கூறினார்கள்: ஆதம் நபியை சுவனத்தில் அல்லாஹ் குடியமர்த்திய போது அதில் அவர்கள் உற்சாகமில்லாமல் நடந்து சென்றார்கள். அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த போது அவர்களுடைய உடலின் இடது பகுதியிலுள்ள விலாவின் சிறிய எலும்பினால் ஹவ்வா (அலை) படைக்கப்பட்டார்கள். ஆதம் நபிக்கு அமைதி ஏற்படவும் அன்பு செலுத்தவும் தான் ஹவ்வா (அலை) படைக்கப்பட்டார்கள்.

உறக்கத்திலிருந்து ஆதம் நபி விழித்தெழுந்த போது அருகில் ஹவ்வா (அலை) வைக் கண்டு "நீ யார்?" என்று கேட்டார்கள். "நீங்கள் என்னிடம் அமைதியை அடைவதற்காக உங்களின் விலா எலும்பினால் படைக்கப்பட்ட பெண் நான்" என ஹவ்வா (அலை) பதிலளித்தார்கள். (நூல்: இப்னுஜரீர், இப்னு அபீ ஹாத்தம். "அல்அஸ்மாவு வஸ்சிஃபாத்" எனும் நூலில் பைஹகீயும் இந்த தகவலை பதிவு செய்துள்ளார்கள்).

"அவன் தான் உங்களை ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அதிலிருந்து அதன் ஜோடியையும் படைத்தான். அந்த ஜோடியிடம் அமைதியடைவதற்காக" (7:189) என்ற திருமறை வசனத்தின் கருத்தும் இது தான். (நூல்:- குர்த்துபீ)

## அல்ஜன்னத்

ஆதம் ஹவ்வா (அலைஹிமா) இருவரையும் அல்லாஹ் குடிய மர்த்திய சுவனம் பற்றி அறிஞர்கள் இருவேறு கருத்துக்களைக் கூறுகின்றனர்.

"நியாயத்தீர்ப்பு நாளின் விசாரணை முடிந்து நல்லவர்கள் நுழையவிருக்கின்ற சொர்க்கம் வேறு. இந்த சொர்க்கம் வேறு. மறுமையிலுள்ள அந்த சொர்க்கம் நிரந்தரமானது. அழிவற்றது. இந்த சொர்க்கம் பூமியில் படைக்கப்பட்டிருந்தது" என்று முஅதசிலா கத்ரிய்யா ஆகிய அணியினர் கருதுகின்றனர். இந்தக் கருத்தை நாம் கண்டு கொள்ளத் தேவையில்லை.

அவர்கள் தங்களின் விநோதமான இந்தக் கருத்துக்களுக்கு பின் வரும் வசனங்களை சான்றுகளாகக் காட்டுகின்றனர்.

"அங்கே வீண் இல்லை. பாவம் இல்லை" (52:23). "அங்கு அவர்கள் வீணானவற்றையும் பொய்ப்படுத்துதலையும் செவியுறமாட்டார்கள்" (78:35) "அங்கே அவர்கள் வீணானதையும் பாவம் உண்டாக்குவதையும் செவியுறமாட்டார்கள்" (56:25).

இவ்வசனங்கள் சொர்க்கத்தில் பொய் சொல்லி ஏமாற்றுதலும் பாவத்தை ஏற்படுத்துதலும் கிடையாது என்று திட்டவட்டமாகக் கூறுகின்றன. இவை மறுமையின் சொர்க்கம் பற்றிய வசனங்களாகும். ஆதம் நபியும் ஹவ்வா (அலை)யும் குடியிருந்தது மறுமையில் உள்ள சொர்க்கத்தில் தான் என்றால் அங்கு எப்படி ஷைத்தான் நுழைந்திருப்பான்? பொய் சொல்லி ஏமாற்றியிருப்பான்?

(சுவர்க்கத்திலிருந்து) அதிலிருந்து அவர்கள் வெளியேற்றப் படமாட்டார்கள் (15:48) என்று அல்லாஹ் கூறியுள்ளான். ஆதம்நபி குடியிருந்தது மறுமையில் உள்ள சொர்க்கத்தில் தான் என்றால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்க மாட்டார்களல்லவா?

எனவே ஆதம், ஹவ்வா (அலைஹிமா) குடியிருந்தது மறுமையில் நல்லோர்கள் குடியிருக்கப்போகும் அந்த சொர்க்கத்தில் அல்ல. உலகத்தில் இருந்த சொர்க்கத்தில் தான்

என்பது முஅதசிலா கத்ரிய்யா ஆகிய அணியினரின் வாதம்.

அவர்கள் ஆதாரமாகக் காட்டும் அந்த வசனங்களெல்லாம் மறுமை நாளில் சொர்க்க வாசிகளை அல்லாஹ் சொர்க்கத்துக்குள் அனுப்பிய பிறகு பொய், வீண், ஏமாற்று, பாவம் ஆகிய பாவங்கள் எதுவும் அங்கே நிகழ்ந்திடாத படி அதைப் புனித இல்லமாக ஆக்குவான் என்பதைத் தான் காட்டுகின்றன. அல்லாஹ் தான் விரும்பியவர்களை அங்கே நிரந்தரமாகத் தங்க வைப்பான். யாருக்கு அழிவு விதிக்கப்பட்டு விட்டதோ அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவான்.

அந்த வசனங்கள் கூட இந்தக் கருத்துக்கு எதிராக இல்லை. மலக்குமார்கள் சுவர்க்கவாசிகளைச் சந்திப்பதற்கு சுவர்க்கத்துக்குள் செல்கிறார்கள். பின்னர் வெளியே வருகிறார்கள். நபி-ஸல்-அவர்கள் மிஃராஜ் என்ற விண்வெளிப்பயணம் மேற்கொண்ட போது சுவர்க்கத்துக்குள் சென்று அங்கிருப்பதைப் பார்த்து விட்டு உலகத்துக்கு வந்து கூறினார்கள். அதனுள் சென்றவர்கள் வெளியே வரமாட்டார்கள் என்றால் இது எப்படி நடந்தது?

எனவே ஆதம், ஹவ்வா (அலைஹிமா) இருவரும் குடியிருந்த சொர்க்கம் பூமியிலிருந்தது தான் என்ற கருத்தை கண்டு கொள்ளத் தேவையில்லை. இந்தக் கருத்தையுடையோர் வேறொரு கேள்வியும் கேட்கின்றனர்.

ஷைத்தான் ஆதம் நபியின் மனதில் ஊசலாட்டத்தை ஏற்படுத்தி தடுக்கப்பட்ட மரத்தின் கனியை சாப்பிடவைத்தான். "ஆதமே! நிரந்தர (வாழ்வளிக்கும்) மரத்தையும் அழிவில்லாத ஆட்சியையும் உமக்கு நான் அறிவிக்கட்டுமா? என்று கேட்டு ஆதமுக்கு ஷைத்தான் ஊசலாட்டத்தை ஏற்படுத்தினான் (20:120) என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

ஆதம்நபி முழுஅறிவு பெற்றவர்கள். நிரந்தரமான சொர்க்கத்தில் இருந்து கொண்டேயிருக்கும் போது நிரந்தரம் அடைந்திட வழி கூறும் ஷைத்தானிடம் எப்படி ஏமாந்திருப்பார்கள்? என்பதே முஅதசிலாக்களின் கேள்வி.

பதில்:1. அல் ஜன்னத் = சொர்க்கம் என்றாலே அது நிரந்தரமான சொர்க்கத்தையே குறிக்கும். இதற்கு மாறான வேறொரு கருத்தைக் கூறினால் அதற்கு ஆதாரம் தேவை.

2. நபி-ஸல்- கூறினார்கள்: ஆதம், மூஸா (அலைஹிமா) இருவரும் தர்க்கம் செய்து கொண்டார்கள். மூஸா (நபி) யவர்கள் ஆதம் நபியிடம் "உங்கள் தவறுகள் உங்களை சொர்க்கத்திலிருந்து வெளியேற்றியதே அந்த ஆதம் தானே நீங்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்கு ஆதம் நபி மூஸா நபியிடம் "அல்லாஹ் தன் தூதுச் செய்தியை அனுப்பிடவும் தன்னுடன் உரையாடவும் தேர்ந்தெடுத்துக் கொண்ட மூஸா நீங்கள். எனினும் நான் படைக்கப்படுவதற்கு முன்னரே என் மீது விதிக்கப்பட்ட ஒரு விஷயத்துக்காக என்னைப் பழிக்கிறீர்களே! என்று கேட்டார்கள்.

"ஆக, ஆதம் நபி மூஸா நபியை விவாதத்தில் வென்று விட்டார்கள்" என்று நபி-ஸல் இருமுறை கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி) (நூல்:- புஹாரீ)

இந்த ஹதீசில் சொர்க்கத்திலிருந்து வெளியேறிட நேர்ந்ததை ஒரு குற்றமாகக் கூறினார்கள் மூஸாநபி. அதாவது; நிரந்தரமாகத் தங்கிடக் கிடைத்த வாய்ப்பை இப்படி இழந்து விட்டீர்களே என்று கேட்டார்கள். அதை ஆதம் நபி மறுக்க வில்லை. ஏற்றுக் கொண்டார்கள். அது நிரந்தர சொர்க்கமல்ல என்றிருந்தால் அதை உடனே ஆதம் நபி மறுத்திருப்பார்கள்.

அவர்கள் மவுனமாக இருந்ததால் அவர்கள் எங்கிருந்து வெளியேறினார்களோ அந்த (நிரந்தர) சொர்க்கம் வேறு. எங்கே இறங்கி வந்தார்களோ அந்த (அழியும்) உலகம் வேறு என விளங்க முடியும்.

3. ஆதம் நபியவர்கள் பூமியிலுள்ள ஒரு சுவனச் சோலையில் தான் இருந்தார்கள் என்றால் இந்த அழியும் உலகத்தில் நிரந்தர வாழ்வைத் தரும் ஒரு மரம் இருக்கிறது என்ற ஷைத்தானின் சொல்லை முழுஅறிவு பெற்ற ஆதம் நபி எப்படி நம்பியிருப்பார்கள்? குறைந்த அறிவுள்ள ஒருவர் கூட இதை நம்ப மாட்டார். ஆதம் நபி எப்படி நம்பி இருப்பார்கள்?

எனவே ஆதம் ஹவ்வா (அலைஹிமா) இருவரையும் அல்லாஹ் குடியமர்த்தியது பூமியில் படைக்கப்பட்டிருந்த சொர்க்கத்தில் அல்ல. (அப்படி ஒரு சொர்க்கமும் இருக்கவில்லை). அது அந்த அழியாத நிரந்தர வாழ்வைத் தரும் சொர்க்கமே.

(நூல்:-குர்த்துபீ)

## எந்தமரம்

பேரறிஞர் அபூஜஅஃபர் இப்னுஜரீர் (ரஹ்) கூறினார்கள். ஆதம் நபியையும் அவர்களின் மனைவியையும் சொர்க்கத் திலுள்ள ஒரு குறிப்பிட்ட மரத்தைக் காட்டி இதிலிருந்து எதையும் உண்ணக்கூடாது என்று அல்லாஹ் தடுத்திருந்தான். ஆனால் அவர்கள் அதிலிருந்து சாப்பிட்டு விட்டனர். அது எந்த மரம் என்பதற்கு குர்ஆனிலோ ஆதாரப்பூர்வமான ஹதீசிலோ அல்லாஹ் எந்த சான்றையும் வைத்திடவில்லை.

அது; கோதுமைப்பயிர், திராட்சைக்கொடி அத்திமரம் என்று பலரும் பல கருத்துக் களைக் கூறியுள்ளனர். இந்த மூன்றில் ஒன்றாக இருந்திடவும் வாய்ப்புண்டு.

அது இன்னமரம் தான் என்று திட்டவட்டமாகத் தெரிந்து கொள்வதில் பயன் ஏதுமில்லை. தெரியாமல் இருப்பதால் எந்தக் குறையுமில்லை. அல்லாஹ்வே நன்கறிந்தவன்.

பேரறிஞர் அர்ராஸீ (ரஹ்) அவர்களும் மற்ற அறிஞர்களும் இதே கருத்தையே வலியுறுத்தி யுள்ளனர். இதுவே சரியான கருத்து (நூல்:- இப்னு கதீர்)

பேரறிஞர் ஷஹீதுஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்கள்; சொர்க்கத்தின் எல்லாப் பழங்க ளையும் தாராளமாகவும் விரும்பி யபடியும் உண்ணுவதற்கு அவ்விரு வருக்கும் அனுமதி வழங்கப் பட்டிருந்தது. ஒரேயொரு மரத் தைத் தவிர.

எது கூடாது என்று தடுக்கப்பட்டுள்ளதோ அது பூமியில் வாழும் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒன்றாகக் கூட இருக்கலாம். ஏனெனில் தடுக்கப் படாதவற்றின் மீது ஆசை ஏற்படு வதில்லை.

இந்த மன விருப்பம் தான் மனிதச்சாலையையும் மிருகச் சாலையையும் வேறுபடுத்திக் காட்டும் இடம். இது இல்லாவிடில் சுயமாகச் சிந்தித்துச் செயல்படும் மனிதனுக்கும் ஓட்டிச் செல்லப் படும் மிருகங்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய் விடும்.

செய்து கொண்ட ஒப்பந்த ங்களை பேணிக் காப்பதிலும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதிலும் மனிதன் காட்டும் சகிப்புத்தன்மைக்கு ஒரு பரிசோதனை இல்லாமலேயே போய்விடும் எல்லாமே அனுமதிக் கப்பட்டிருந்தால் தாமாக எதையும் விரும்பாமல் (கிடைப்பதை யெல்லாம்) சுகவாழ்வுக்குப் பயன்படுத்துவோர் வெளிப்பார்வைக்கு மனித உருவத்தில் தோன்றினாலும் அவர் மிருக இனத்தைச் சார்ந்தவர்களே (நூல்:-ஃபீழிலாலில்குர்ஆன்).

## அநியாயம்

அம்மரத்தின் அருகே நெருங்கி அதனைச் சாப்பிட்டால் நீங்களிருவரும் அநியாயக்காரர் களாகி விடுவீர்கள் என்று அல்லாஹ் எச்சரித்தான். ஷைத்தா னைக் காட்டி இவன் உங்களுக்கு எதிரி. இவன் உங்களை இங்கிருந்து வெளியேற்றி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்றும் அல்லாஹ் கூறியிருந்தான்.

“நாம் கூறினோம்; ஆதமே, நிச்சயமாக இவன் உமக்கும் உம் மனைவிக்கும் எதிரியாவான். எனவே உங்களிருவரையும் சொர்க் கத்திலிருந்து அவன் வெளியேற் றிட (இடம் தர) வேண்டாம். அதனால் நீங்கள் பாக்கியமி ழந்தவராவீர் (20:117). இதன் பிறகு ஆதம்நபி அம்மரத்தின் கனியைச் சாப்பிட்டார்கள்.

## வசனம் 36-ன் விளக்கம்

ஆதம் ஹவ்வா (அலைஹி மா) இருவரையும் அல்லாஹ் எச்சரித்திருந்தான். இம்மரத்தின் கனிகளைத் தின்றால் நீங்கள் அநியாயம் செய்தவர்களாவீர்கள் என்று கூறியிருந்தான். பிறகு எப்படி இருவரும் அதனைச் சாப்பிட்டார்கள்?

அல்லாஹ் அவர்களுக்குச் சுட்டிக்காட்டிய மரத்திலிருந்து சாப்பிடுவது கூடாது அதே இனத்தைச் சார்ந்த வேறொரு மரத்தின் கனியைப் புசிக்கலாம் என்று கூறி ஷைத்தான் அவர் களை ஏமாற்றினான். அவனு டைய பேச்சை நம்பி ஏமாந்து சாப்பிட்டு விட்டார்கள் என்று இதற்கு சிலர் விளக்கமளித் துள்ளனர். (நூல்:- குர்த்துபீ)

ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்கள்: நடை பெற்ற நிகழ்வை ஒரு காட்சியாக வடித்துக் காட்டிட அருமையான வாசக அமைப்பு இவ்வசனத்தில் கையாளப் பட்டுள்ளது. “அஸல்ல ஹுமா” அவ்விருவரையும் சருகிட வைத்தான் என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

ஷைத்தானை நீ ஓரக்கண்ணால் கவனித்துக்கொண்டிருக்கும் போது அவன் அவ்விருவரையும்

மெல்ல மெல்ல சொர்க்கத்திலிருந்து அப்புறப்படுத்திக் கொண்டிருந்தான். அவ்விருவரின் பாதங்களை தட்டி விட்டுக் கொண்டிருந்தான்.அவை சருகின. வீழ்ந்தன.

இந்த சமயத்தில் தான் ஓர் அனுபவம் நிறைவடைந்தது. ஆதம் தன் ஒப்பந்தத்தை மறந்தார். அந்த வழி கெடுக்கும் செயலுக்கு முன்னால் பலஹீனமடைந்தார். அப்போது தான் அல்லாஹ்வின் வார்த்தை (ஷைத்தான் உங்களின் எதிரி என்ற வார்த்தை) நிதர்சனமானது. அவனின் முடிவு தெளிவானது. (நூல்:- பீழிலாலில் குர்ஆன்)

## வெளியேற்றினான்

நான் உங்களுக்கு நல்லதையே நாடுகிறேன். இம்மரத்தின் கனியைச் சாப்பிட்டால் இங்கு நிரந்தரமாகத் தங்கிடலாம் என்று ஷைத்தான் ஆதம் ஹவ்வா இருவரிடமும் கூறினான்.

“நான் உங்களிருவருக்கும் நிரந்தர வாழ்வைத் தரும் மரத்தைக் காட்டட்டுமா? இன்னும் அழியாத அதிகாரத்தையும் அறிவிக்கட்டுமா? என்று ஷைத்தான் கேட்டான் (20:120)

அதன் கனியை நீங்கள் புசித்தால் நீங்களிருவரும் மலக்குகளாகி விடுவீர்கள் அல்லது (சொர்க்கத்தில்) என்றென்றும் தங்கி விடுவீர்கள் (இதைத் தடுப்பதற்காகத் தானேயன்றி) வேறெதற்கும் இம்மரத்தை விட்டு உங்களை இறைவன் தடுக்கவில்லை. நிச்சயமாக நான் உங்களிருவருக்கும் நற்போதனை செய்பவனாகவே இருக்கிறேன் என்று ஷைத்தான் கூறினான் (7:20, 21).

சாபத்துக்குரிய இப்லீஸ் ஆதம் நபியை சொர்க்கத்திலிருந்து வெளியேற்றிட வேண்டும் என்று விரும்பவில்லை. அல்லாஹ் அவருக்கு வழங்கியுள்ள உயர்விலிருந்து கீழே இறக்கி தன்னைப் போல அவரை இறையருளிலிருந்து தூரமாக்கி விட வேண்டும் என்று தான் விரும்பினான். (தந்திரமாகப் பேசி ஏமாற்றி ஆதம் நபியை சொர்க்கத்திலிருந்து வெளியேற்றி விட்டான்) ஆனால் அவனுடைய நோக்கம் நிறைவேறவில்லை. திட்டம் ஈடேறவில்லை. மாறாக அவனது கண்ணெரிச்சல் அதிகமானது. மனக்கொதிப்பும் வக்கிரமும் அதிகமானது.

ஆம்.ஆதம் நபியை அல்லாஹ் தன் அருளிலிருந்து தூரமாக்கவுமில்லை. பிரதிநிதி என்ற உயர்விலிருந்து கீழிறக்கவுமில்லை.

அல்லாஹ் கூறினான்: பின்னர் அவரின் இறைவன் அவரைத் தேர்ந்தெடுத்தான். அவரை மன்னித்தான். அவருக்கு நேர்வழிகாட்டினான் (20:122).

அல்லாஹ்வின் சொர்க்கத்தில் அவனின் அண்டை வீட்டுக்காரராக இருந்த ஆதம் நபி பூமிக்கு வந்து அவனின் கலீஃபாவாக-பிரதிநிதியாக ஆனார். அண்டை வீட்டாராக இருப்பதற்கும் கலீஃபாவாக இருப்பதற்கும் பெரிய வேறுபாடு என்ன இருக்கிறது!

## விரோதி

இப்லீஸ், ஆதம், ஹவ்வா ஆகிய அனைவரையும் அங்கிருந்து வெளியேறும்படி கட்டளையிட்ட அல்லாஹ் நீங்கள் ஒருவருக்கொருவர் விரோதிகள் என்று கூறினான்.

ஷஹீது ஸய்யிது குதுப் (ரஹ்) கூறுகின்றார்கள். மனிதனுக்கும் ஷைத்தானுக்கும் இடையிலான விரோதம் அதற்கென நிர்ணயிக்கப் பட்ட களத்தில் நடந்து கொண்டேயிருக்கும். இறுதிநாள் வரை இது தொடரும் என்றொரு குறிப்பு இவ்வசனத்தில் காணப்படுகிறது.

ஆதம் தனது சருக்கல் காரணமாக கீழே இறங்கினார். தன் இயல்பில் இறைவனுக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற குணம் அவரிடம் இருந்தது. எனவே இறையருளிடம் அவர் அடைக்கலம் தேடி ஒதுங்கும் போது இறையருள் அவரை வந்தடைந்தது. (நூல்:-ஃபீழிலாலில் குர்ஆன்).

## சில ஹதீஸ்கள்

இப்னு அப்பாஸ் (ரழி) கூறினார்கள்: ஆதம்நபி சொர்க்கத்தில் குடியிருந்த காலம் அஸர் நேரத்துக்கும் சூரிய மறைவுக்கும் இடைப்பட்ட நேரம் தான். (நூல்:- ஹாகிம், இது புஹாரீ முஸ்லிம் ஆகியோரின் ஷரத்துப்படி ஸஹீஹ் ஆகும்).

நபி-ஸல்-கூறினார்கள்: சூரியன் உதிக்கும் நாட்களிலெல்லாம் சிறந்தது வெள்ளிக் கிழமை தான். அன்று ஆதம் நபி படைக்கப்பட்டார்கள். அன்று தான் சொர்க்கம் சென்றார்கள். அன்று தான் சொர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். (நூல்:- முஸ்லிம், நஸயீ, அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி) (இன்ஷா அல்லாஹ் தொடரும்...)

# மதுரையில் நூல் அறிமுக விழா

## கர்கரேயைக் கொலை செய்தது யார்?



**நூலாசிரியர் முஷ்ரிஃப் வெளியிட வழக்கறிஞர் லஜபதிராய் நூாலை பெற்றுக் கொண்டார்.**

**14.3.2010**இல் தமிழ் மொழி பெயர்ப்பு மதுரையில் வெளியிடப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்!

நாம் சென்ற இதழ் வைகறை வெளிச்சத்தில் அறிவித்தப்படி கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியீட்டு நிகழ்ச்சி மதுரையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நீதியரசர் வி..ஆர்.கிருஷ்ணய்யர் மகாலில் வெளியிடப்பட்ட தமிழ் பதிப்பை நூலாசிரியர் முஷ்ரிப் அவர்களே வெளியிட்டார்கள். மூத்த வழக்கறிஞர் திரு.லஜபதிராய் அவர்கள் பெற்றுக் கொண்டு நூலாசிரியரை பாராட்டினார். நூலை தமிழில் தந்த வேர்கள் பதிப்பகத்தையும் பாராட்டினார்கள்.

பன்னூலாசிரியரும் ஆராய்ச்சியாளரும் பேராசிரியருமான அருணன் அவர்கள் நூலாசிரியரையும் வெளியீட்டாளர்களையும் பாராட்டினார்கள்.



**கூட்டத்தினரில் ஒரு பகுதியினர்**

முன்னதாக நூலை “வைகறை வெளிச்சம்” ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

அரங்கம் நியை அறிஞர் பெருமக்களும் ஆன்றோர்களும் கலந்து கொண்டார்க.ள்.

ரூபாய் **150**/- விலையுள்ள நூல் அரங்கத்தில் ரூபாய் 0/-க்கு விற்பனை செய்யப்பட்டது. சுமார் **300** நூல்கள் அறிமுகத்தின் போதே விற்றுத் தீர்ந்தது.

நிகழ்ச்சி அடுத்த நாள் தினத்தந்தி இதழிலும் தினமலர் இதழிலும் செய்தியாக வெளியாகின. புதிய பார்வை என்ற மாதம் இருமுறை இதழிலும் இச்செய்தி வெளினானது. (ந.நி)

---

## திருச்சியில் கர்கரே நூல் அறிமுக நிகழ்ச்சி

***கர்கரேயை கொலை செய்தது யார்? என்ற நூலின் தமிழாக்கம் அறிமுக நிகழ்ச்சி திருச்சியிலும் நடைபெற்றது. பீமா நகரிலுள்ள பி.எஸ்.எஸ். திருமண மஹாலில் 21.03.2010 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் நூலை வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். முடிவில் ஜனாப் உஸ்மான் அலீ அவர்கள் நன்றி கூறினார்கள்.***

***வழக்கறிஞர் மார்ட்டின், சட்டக்கல்லூரி பேராசிரியர் நிலாமுதீன் ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தார்கள்.***

***இங்கேயும் ரூபாய் 150 விலையுள்ள இந்த நூல், நிகழ்ச்சி அரங்கிற்கென ரூபாய் 100 என விற்பனை செய்யப்பட்டது.***

# இது நமக்குரிய உலகம்

فقد روى الإمام الترمذي في سننه من حديث عبيد الله بن محصن الخطمي أن النبي ﷺ قال: «من أصبح منكم آمناً في سربه، معافى في جسده، عنده قوت يومه، فكأنما حيزت[١] له الدنيا»[٢].

**அண்ணல் நபி-ஸல்-கூறினார்கள். உங்களில் யார் காலை விழித்தெழும்போது தனது உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்புப் பெற்றவராகவும் உடல் ஆரோக்கியம் பெற்றவராகவும் அன்றைய தினத்தின் உணவைப் பெற்றவராகவும் திகழ்கின்றாரோ அவர் உலகம் முழுவதையும் கொடுக்கப்பட்டவர் போன்றாவார். (அறிவிப்பாளர் : உபைதுல்லாஹ்பின் மிஹ்சன் அல்ஹுதமீ (ரழி) நூல் : திர்மிதி).**

உலகத்தின் செல்வங்களைத் திரட்டுவதற்காக மனிதன் மாடாய் உழைக்கிறான். ஓடாய்த் தேய்கிறான். அதற்காக எவ்வளவு பெரிய தியாகங்களுக்கும் தயாராகின்றான்.

ஆனால் செல்வம் என்றால் என்ன என்பதில் மனிதனுக்கு ஒரு தெளிவான பார்வை இல்லை. இந்த ஹதீசின் முதல் வாக்கியமே ஒரு ஆழமான சிந்தனையைத் தருகின்றது.

அஸ்பஹ என்ற சொல்லுக்கு காலையிலிருந்தான் என்று பொருள். ஒருவர் காலையில் விழித்தெழும்போது உயிர் உடைமைக்கான பாதுகாப்பையும் ஆரோக்கியத்தையும் அன்றைய ஒருநாள் உணவையும் பெற்றிருந்தால் அதுவே பெரும் செல்வம். மறுநாளைப் பற்றிய கவலைகளைத் தம் நெஞ்சில் சுமந்து கொண்டிருக்கக் கூடாது. மறுநாளின் தேவை பற்றிய கவலை அவரது உள்ளத்தில் இருந்தால் அவர் இன்றைய செல்வத்தை சுகமாக நிம்மதியாக அனுபவித்திட மாட்டார். எனவே இன்றைய செல்வத்தையும் அவர் முழுமையாகப் பெறவில்லை என்பதே அதன் பொருள் ஏனென்றால் கவலையின்மை என்பதே ஒரு செல்வம் தானே.

**உயிர்**

நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பது போல் உயிர் பாதுகாப்பு உடைமைப் பாதுகாப்பு எவ்வளவு பெரிய அருள் என்பது கலவர பூமியிலும் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்திருக்கும் பகுதியிலும் வாழ்வோரைக் கேட்டால் விளங்கும்.

அடுத்த கணம் உயிருடன் வாழ்வதற்கான உத்தரவாதம் இல்லாத ஒருவர் வாழ்வில் என்ன சுகத்தைப் பெற்று விட முடியும்?

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழும் உரிமை உண்டு.அது அவனுக்குரிய புனிதமான உரிமை. இஸ்லாம் அந்த உரிமையை எல்லோருக்கும் வழங்கியுள்ளது. உடலில் ஓடும் உயிர் அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள மிகப்பெரும் அன்பளிப்பு. அதை யாரும் பறித்திட முடியாது.

ஒருவர் மற்றவரின் உயிரை அநியாயமாகப் பறித்திடும் அபாயம் எந்த சமுதாயத்தில் நிலவுகிறதோ அந்த சமுதாயத்தின் மத்தியில் வாழ்ந்திட வேண்டிய நிலை ஏற்படுவது மிகப்பெரிய சோதனை. அது போலவே ஒருவர் தன்னுடைய உயிர் பறிக்கப்படுமளவிற்கு பெரிய குற்றங்களைச் செய்வது அவர் தனக்குத் தானே தந்து கொள்ளும் இழிவு.

எனவே ஒரு முஃமின் தன்னுடைய உயிர் மீது அச்சுறுத்தலை தானே வலிய வரவழைத்துக் கொள்வதும் தவறு. உயிர் வாழ்வதே ஒரு பிரச்சனையாகி விட்ட ஒரு சமுதாயத்தில் வாழ நேர்வது சோதனை. அச்சுறுத்தலற்ற வாழ்வே மிகப்பெரும் செல்வம்.

அல்லாஹ் கூறுகிறான்:- உங்களில் ஈமான் கொண்டு நற்செயல் புரிகின்றவர்களுக்கு முன்னிருந்தவர்களுக்கு வழங்கியது போல பூமியில் ஆட்சி அதிகாரத்தை வழங்குவான். அவன் அவர்களுக்கு திருப்தியுடன் வழங்கிய தீனை நிலைப் படுத்துவான். அவர்களின் அச்சத்துக்குப்

*சுப்ஹானல்லாஹ்! அதை உன்னால் தாங்கிக் கொள்ள இயலாமல் போகுமே, இறைவா! இவ்உலகிலும் எங்களுக்கு நல்லதை வழங்குவாயாக மறுமையிலும் நல்லதை வழங்குவாயாக என்று நீ துஆ செய்திருக்கக்கூடாதா?*

பின்னர் அப யத்தை வழங்கு வான் என்றும் அல்லாஹ் வாக்களித்தான். (24:55)

ஈமான், நற்பணி ஆகிய வற்றின் மூலம் அச்சுறுத்தலற்ற வாழ்க்கையைப் பெறலாம் என் கிறது அவ்வசனம்.

**ஆரோக்கியம்**

அண்ணல் நபி-ஸல்- கூறினார்கள்:- ஈமானுக்கு அடுத்த படியாக ஒருவர் ஆரோக்கியத்தை விடச் சிறந்த எதையும் பெற்று விடுவதில்லை (அறிவிப்பாளர்- முஆத்பின் ரிஃபாஆ (ரழி) நூல்:- திர்மிதீ)

நம்முடைய மனதில் பதிந்திருக்கும் இறை நம்பிக்கை யின் (ஈமானின்) அடிப்படையில் நாம் செயல்பட வேண்டும் என்றால் அதற்கு ஆரோக்கியம் மிக அவசியம். சரியாகக் குனிந்து நிமிர்ந்து தொழுதிடவும் நோன்பு நோற்றிடவும் ஹஜ் செய்திடவும் உடல் ஆரோக்கியம் மிக முக்கியம்.

நம்மிலே பலரும் வனப்பும் துடிப்பும் நிறைந்த வாலிபப் பருவ த்தை சொந்த விருப்பு வெறுப்பு க்களை நிலை நாட்டுவதில் செலவிடுகிறோம். உலக அபிலா ஷைகளை அடைந்திடுவதற்காக கடும் உழைப்பை மேற்கொண்டு ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்கிறோம். பின்னர் பொல்லாத நோய்களின் இருப்பிடமாக உடல் மாறிய பிறகு முதுமை கேலி செய்யத் தொடங்கிய பிறகு உடல் தளர்ந்து தள்ளாடத் தொடங்கிய பிறகு அந்த தள்ளாத பருவத்தை இறைவனுக்காக ஒதுக்க முன் வருகிறோம். பழத்தைத் தின்று விட்டு தோலைத் தருவது போல.

தன்னை மறந்த ஆணவத் தில் திளைக்க வைத்திடும் அளவு க்கு ஆரோக்கியம் ஒரு பெரும் செல்வம். அது உடலை விட்டு மெல்ல மெல்ல விடை பெறத் தொடங்கும் போது தான் அதுவரை அவன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்த அகந் தையும் அகல்கிறது.

உடலுக்கு ஆரோக்கியத்தை தரும் உணவுகளையே உட்கொள்ள வேண்டும். ஆரோக்கியக் கேட்டி ற்கு துணை செய்திடும் வேலைக ளில் ஈடுபடக்கூடாது. நம்முடைய துஆக்கள் கூட நம் ஆரோக்கிய த்தைப் பேணிடும் வகையிலேயே அமைத்திட வேண்டும்.

அண்ணல் நபி-ஸல் அவர்கள் ஒருவரை நலம் விசாரித்திடச் சென்றார்கள். அவர் நோயின் காரணமாக உடல் மெலிந்து குரல் தளர்ந்து போய் ஒரு பறவைக்குஞ்சு போல் காணப்பட் டார். அவரிடம், "அல்லாஹ்விடம் நீ ஏதேனும் துஆக்களைக் கேட்டு வருகின்றாயா?" என்று நபி-ஸல்- கேட்டார்கள். அதற்கு அவர், "ஆம். இறைவா என்னை மறுமையில் நீ தண்டிப்பதாக இருந்தால் அந்த தண்டனையை உலகத்திலே தந்து விடுவாயாக" என்று துஆ செய்து கொண்டு வருகிறேன் என்று கூறினார்.

அதற்கு "சுப்ஹானல்லாஹ்! அதை உன்னால் தாங்கிக் கொள்ள இயலாமல் போகுமே. இறைவா! இவ்உலகிலும் எங்களுக்கு நல்லதை வழங்குவாயாக மறுமை யிலும் நல்லதை வழங்குவாயாக என்று நீ துஆ செய்திருக்கக் கூடாதா?" என்று கூறிய நபி- ஸல்-அம்மனிதரின் சுகத்துக்காக துஆ செய்தார்கள். அல்லாஹ் அவருக்கு ஆரோக்கிய மளித்தான் (நூல்:-முஸ்லிம்)

**உணவு**

ஒருவரிடம் எவ்வளவு தான் வண்ண வண்ண, ருசியான அறுசுவை உணவுகள் இருந்தா லும் அவரிடமிருப்பது ஒரு வயிறு தான். அதற்கு மட்டும் தான் அவர் சாப்பிட முடியும். அதிலும் வரம்பு மீறி சாப்பிட்டால் உயிருக்கே ஆபத்தாக அது முடியும்.

அன்றைய தினத்தின் உணவு என்பதைக் குறித்திட ஹதீசின் மூலத்தில் "கூத்துயவ் மிஹி" எனும் சொல் இடம் பெற்றுள்ளது. "கூத்" என்றால் மனிதனின் வயிறு வளையாமல் நிமிர்ந்து நிற்பதற்குப் போதுமான அளவு உணவு என்று பொருள்.

இந்த "கூத்" என்ற அளவு உணவு தான் நபி-ஸல்- அவர்களு டைய உணவின் அளவு.

"இறைவா முஹம்மது (ஸல்) வின் குடும்பத்தினரின் ரிஸ்கை, 'கூத்' தின் அளவாக ஆக்குவாயாக" என்று நபி-ஸல்- அவர்கள் துஆ செய்வார்கள்.

(அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி) (நூல்: புஹாரீ, முஸ்லிம்).

ஆக, உயிருக்கு உத்திரவாதம் ஆரோக்கியம் தேவையான உணவு ஆகிய மூன்றும் இருந்தால் அதுவே பெரும் செல்வம். நாளை நடக்கவிருப்பதை இன்றே நினைத்துக் கவலைப்படுவது மதியீனம். இன்றைய தினத்தில் கையிருப்பில் இருப்பதை வைத்து மகிழ்ச்சியாக வாழத் தெரியாதவன் என்றைக்கும் நிம்மதியாக வாழ்ந்திட மாட்டான்.

அதற்காக எதிர் காலத்திற்காக திட்டமிடக்கூடாது என்பதல்ல. திட்டமிடுவதை இஸ்லாம் வரவேற்கிறது. வலியுறுத்துகிறது. எதிர்கால முன்னேற்றத்திற்காக இன்றே திட்டமிடுவது வேறு. எதிர்காலத்தைக் கண்டு பயந்து இன்றே கவலைப்படுவது வேறு.

முன்னது தன்னம்பிக்கை தைரியம் மதியூகம் ஆகியவற்றின் அடையாளம். பின்னது கோழைத்தனம் பயம் மதியீனம் ஆகியவற்றின் அடையாளம். நிகழ்காலத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொள்பவரே எதிர்காலத்துக்கான திட்டங்களைத் தீட்ட முடியும். உலகம் நமக்குரியது நன்றாக வாழ்வோம்.

- இல்யாஸ் ரியாஜி.

---

## நாகர்கோவிலில் :
## கர்கேரேயை கொலை செய்தது யார் நூல் அறிமுக நிகழ்ச்சி

**கர்கரேயை கொலை செய்தது யார்? என்ற நூலை மொத்த ஊடகங்களும் இருட்டடிப்பு செய்ததால் அந்த நூலை அறிமுகப்படுத்தும் பொறுப்பை வேர்கள் பதிப்பகம் எடுத்துக்கொண்டது.**

**ஆங்கிலத்தில் வெளிவந்த இந்த நூலை வேர்கள் வெளியீட்டகம் தமிழிலும் தந்துள்ளது. இதன் அறிமுக நிகழ்ச்சி மாவட்டந்தோறும் நடைபெற்றுவருகின்றது.**

**அந்த வகையில் இந்த நிகழ்ச்சி நாகர்கோவில் கோட்டார் பாவா காசிம் அரங்கில் 9.4.2010 மாலை 6 மணிக்கு நடைபெறுகின்றது.நாகர்கோவில் மக்கள் இந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்திக் கொள்வார்கள். இன்ஷா அல்லாஹ்.**

## ஜாதி ஒழிந்தது என்ற நூல்
## இப்போது ஆங்கிலத்தில். . .

டெல்லியில் வெளிவந்த கர்கரேயை கொலை செய்தது யார்? என்றஆங்கில நூாலை தமிழில் தந்ததைப் போல் வேர்கள் வழி தமிழில் வெளிவந்த ஜாதி ஒழிந்தது நூல், இபோது ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. “End of Casteism” என்ற இந்த நூலின் ஆங்கில ஆக்கம் 18.4.2010ல் டெல்லியில் வெளியிடப்படஉள்ளது. இன்ஷா அல்லாஹ்.

சகோதரர் தேஜ் சிங் டாக்டர் அம்பேத்கர் சமாஜ் கட்சியின் தலைவர் நூலை வெளியிட்டு உரையாற்றுவார். இன்ஷா அல்லாஹ்

வெளியீடு இடம் : காலிப் அகாடமி ஹால்

**டெல்லி**

காலை **10.30** மணி முதல் **2** மணி வரை இந்நிகழ்ச்சி நடைபெறும்.
அனைவரும் வாரீர்

**வேர்கள் வெளியீட்டகம்,** 235, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை -14
அனைவரும் வருக!

பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம் **Since 1993**

# அல்ஹரமைன்

# ஹஜ் சர்வீஸ் (பி) லிட்

(இந்திய மற்றும் சவுதி அரசு அங்கீகாரம் பெற்றது)

**REGN NO. M/HAJ / REGN / PTO / TN - 6/36/2009**

## புனித ஹஜ் - 2010 மற்றும் உம்ரா அழைப்பு

- ஹரம் ஷரிஃபிற்கு மிக அருகே தங்கும் இடவசதி.
- தரமான தமிழக உணவு, தெளிவான வழிகாட்டுதல்.
- 17 ஆண்டுகள் அனுபவம் நிறைந்த திட்டமிட்ட பயண ஏற்பாடுகள்.

## ஹஜ் பயணத் தொகை ரூ.2,25,000/-

- ரஜப் மாதம் வரை மாதா மாதம் (15 நாட்கள்) உம்ரா பயண ஏற்பாடு

## உம்ரா பயணத் தொகை

ரூ. 57,500/- | ரூ. 52,000/- | ரூ. 48,000/-

உம்ரா பயணத் தொகையில் உள்ள வித்தியாசத்திற்கேற்ப தங்குமிடம் மாறுபடும்.

**மன நிறைவான ஹஜ் மற்றும் உம்ரா பயண ஏற்பாடுகளுக்கு அன்புடன் அழைக்கிறோம்.**

எமது புதிய தலைமையக முகவரி

**அல் ஹரமைன் ஹஜ் சர்வீஸ் (பி) லிட்**
எண்.10, (பழைய எண்.73)
தாதா முத்தியப்பன் தெரு, (பிராட்வே)
பிளாட் எண்.6, முதல் தளம்,
கொத்தவால் சாவடி காவல்நிலையம் எதிரில்
ஜார்ஜ் டவுன், சென்னை–600 001.
போன் : 044 – 25242323, 25242324

<u>கிளை</u>

9, முதல்மாடி, நஜீம் காம்ப்ளக்ஸ்,
28/5, டவுன் எக்ஸ்டன்ஸன், மயிலாடுதுறை – 609001.
நாகை (Dt) போன் : 04364 – 224221


Email : alharaminehaj@yahoo.com web : www.hajdetails.com / al-haramine

குறிப்பு : பயணக் கட்டணங்கள் ஏர்லைன்ஸ் மற்றும் எக்ஸ்சேன்ஞ்ச் விலையேற்ற அடிப்படையில் மாற்றத்திற்குரியது.

இஸ்லாத்தை நோக்கி மக்களை அழைத்திடும் பணியைச் செய்திடும் அழைப்பாளர்களை ஒரே அணியினராக ஆக்கிடவும் குறைந்தபட்சம் அவர்களிடையேயான இடைவெளியைக் குறைத்திடவும் மனவறட்சியைப் போக்கிடவும் வேண்டியது மிக அவசியம். அதற்கு நடுநிலையான கொள்கையைப் பின்பற்றிட ஆசைப்பட வேண்டும்.

மார்க்கத்தில் இல்லாதவற்றையெல்லாம் மார்க்கம் என்று கூறிடும் (குலுவ்வு) மார்க்கத்தில் இருப்பவற்றைக் குறைத்திடும் (தஃப்ரீத்) ஆகிய இரு ஓரங்களை விட்டு தூர விலகி நீதியும் நேர்மையும் தெளிவாகத் தெரிவது இந்த நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றுவதில்தான் உள்ளது.

முன்னோர்கள் கூறுவதுபோல இந்த தீன் நடுநிலையானது. கூடுதல் குறைவு அற்றது. இந்த சமுதாயமும் எல்லாவற்றிலும் சமநிலைச் சமுதாயமே. அலீ (ரழி) அவர்களினுடைய பொன்மொழி ஒன்று இப்படிச் சொல்கிறது. "நடுநிலைப் போக்கைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். பின்வருவோர் அதனுடன் சேர்ந்து கொள்வார்கள். வரம்பு மீறியோர் திரும்பி வருவார்கள்."



ஒரு வட்டத்தின் மையப் புள்ளியை நோக்கி அதனுடைய வலது இடது ஓரங்கள் திரும்புவதைப் போன்ற மையமே நடுநிலையாகும். அது "அஸ்ஸிராத்துல் முஸ்தகீம்" போன்றது. ஒவ்வொரு தொழுகையிலும் தொழுகைக்கு வெளியேயும் நாம் கேட்க வேண்டும் என்று அல்லாஹ் கற்றுத் தந்த 'இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம்' என்று கேட்கின்ற நேரான வழி போன்றது அது.

"இது உம் இறைவனின் நேரான வழி" (6:126) என்று திருக்குர்ஆன் கூறுவதும் இதைத்தான்.

எதைநாம் பின்பற்றிட வேண்டும் என்று அல்லாஹ் நமக்கு அறிவுறுத்தினானோ எதைப் பின்பற்றினால் நமது முழக்கம் சிதையாமல் ஒன்றாகவே இருக்குமோ அதுவும் இதே நடுநிலையான கொள்கைதான். மனித ஜின் இனத்திலுள்ள ஷைத்தான்கள் எதை நோக்கி அழைக்கின்றார்களோ அந்த முரண்பாடான பல வழிகளை கோட்பாடுகளை நாம் பின்பற்றிடக் கூடாது என்றும் அறிவுறுத்தினான் அல்லாஹ். அவை மேற்கிலிருந்து கிழக்கிலிருந்தோ வந்தவை. வலது பக்கமோ இடது பக்கமோ சாய்ந்தவை, நேரானவை அல்ல.

## பேரறிஞர் யூசுப் அல்கர்ளாவீ

அல் அன் ஆம் என்ற அத்தியாயத்தில் பத்து உபதேசங்களைக் கூறிவிட்டு அதன் முடிவில் இப்படிக்கூறுகிறான் அல்லாஹ். "இதுவே நிச்சயமாக எனது நேர்வழி. எனவே இதையே பின்பற்றுங்கள். இதர பல வழிகளைப் பின்பற்றிட வேண்டாம். அவை உங்களை அவனுடைய (அல்லாஹ்வுடைய) வழியை விட்டும் பிரித்து விடும். நீங்கள் பயபக்தியுடையோராவதற்கு இவ்வாறு உங்களுக்கு அவன் உபதேசிக்கிறான்" (6:153).

அண்ணல் நபி-ஸல்-அவர்கள் தனது கையால் (தரையில்) ஒரு கோடு கிழித்தார்கள். பின்னர், "இதுவே

**மார்க்கத்தில் வரம்பு மீறக் கூடாது**

**நடுநிலையான கொள்கையைக் கடைபிடிக்கவேண்டும்**

அல்லாஹ்வின் நேர்வழி" என்றார்கள். பின்னர் (அந்த நேர்கோட்டின்) வலப்புறமும், இடப்புறமும் (சில) கோடுகளைப் போட்டார்கள். "இதுவே இதர வழிகள். இந்த ஒவ்வொரு வழியிலும் ஷைத்தான் இருந்து கொண்டு அதன் பக்கம் அழைத்துக் கொண்டிருக்கிறான்" என்று கூறினார்கள். பின்னர் "இதுவே எனது நேர்வழி. அதையே பின்பற்றுங்கள். இதர வழிகளைப் பின்பற்றாதீர்கள்" என்ற (6:153) வசனத்தை ஓதினார்கள்.

வலதும் இடதுமாக பல கோடுகள் இருக்க அவற்றின் நடுவே அமைந்துள்ள நேர்கோடு தான் அஸ்ஸிராத்துல் முஸ்தகீம் ஆகும். (அறிவிப்பாளர் : இப்னு மஸ் ஊத் (ரழி) நூல் : அஹ்மது)

நடுக்கோட்டில் கையை வைத்துக் காட்டி 6:153 வசனத்தை நபி ஓதினார்கள் என்று வேறொரு அறிவிப்பில் காணப்படுகிறது. (அறிவிப்பாளர்: ஜாபிர் (ரழி) நூல்: அஹ்மது, இப்னுமாஜா)

தீனை நிலை நாட்டுங்கள். அதில் பிரிந்து விடாதீர்கள் (42 :13) என்ற வசனத்துக்கும், 6:153 வசனத்துக்கும் அளித்துள்ள விளக்கத்தில் அந்த ஹதீஸை இப்னு அப்பாஸ் (ரழி)வின் அறிவிப்பாக பேரறிஞர் இப்னுகதீர் (ரஹ்) பதிவு செய்துள்ளார்கள்.

இதே கருத்து திருக்குர்ஆனிலும் உள்ளது. முஸ்லீம்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான். முரண்பட்டு அணி அணியாகப் பிரிந்துவிடுவதை விட்டும் தடுக்கிறான். அல்லாஹ்வின் தீன் மார்க்க விஷயத்தில் தர்க்கமும் வீண் வாதமும் செய்து கொண்டிருந்த காரணத்தினால் தான் முன் சமுதாயத்தினர் அழிந்தார்கள் என்று உணர்த்துகிறான்.

அறிஞர் முஜாஹித் (ரஹ்) உள்ளிட்ட அறிஞர்களும் இக்கருத்தைக் கூறியுள்ளனர். (நூல்: இப்னுகதீர்)

## வரம்பு மீறுவோர் அழிந்தனர்


நடுநிலையான கொள்கையைப் பின்பற்றுதல் என்பது நாம் கூறியுள்ளவற்றில் அவசியம் கடைபிடிக்க வேண்டியதாகும்.

இஸ்லாமுக்காக உழைப்போர் மத்தியில் நெருக்கத்தை ஏற்படவும் ஒற்றுமை நிலவவும் மிக முக்கியமான காரணமாக இருப்பது 'வரம்பு மீறலை விட்டு விலகுதல்' தான். மார்க்கத்தில் வரம்பு மீறுவோருக்கு அழிவுதான் ஏற்படும் என்று அண்ணல் நபி-ஸல் தன் தோழர்களிடத்தில் எச்சரித்துள்ளார்கள்.

வரம்பு மீறுவோர் அழிந்து போனார்கள் (ஹலகல் முத்தனத்திஊன்) என்று மூன்று தடவை நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர் :இப்னுமஸ் ஊத்(ரழி) நூல்: முஸ்லிம்) அழிந்து போனார்கள் என்று தகவல் கூறுவதாகவும் இதன் பொருள் அமையும். அழிந்து போவார்களாக என்று சபிப்பதாகவும் அமையும்.

முத்தனத்திஊன் என்ற சொல்லை பேரறிஞர் இமாம் நவவி (ரஹ்) அவர்கள் ஷரஹ் முஸ்லிம் நூலில் "தம் சொல்லிலும் செயலிலும் வரம்பு மீறி எல்லை கடந்து ஆழமாகச் செல்லக் கூடியவர்கள்" என்று விளக்கியுள்ளார்கள்.

பேரறிஞர் இப்னுல் அசீர் (ரஹ்) கூறினார்கள் : "அச்சொல் நத்உ எனும் வேர்ச்சொல் மூலம்


பேரறிஞர் யூசுப் அல்கர்ளாவீ

வந்தது. நத்உ என்றால் வாயின் அடி ஆழம் என்று பொருள். பின்னர் இது சொல், செயல் ஆகியவற்றில் ஆழமாகப் புகுந்து விடுதல் என்ற பொருளில் புழங்கப்பட்டு வருகிறது. அதன்படி அடித் தொண்டையில் பேசுவோர், பேச்சில் வரம்பு கடந்து மூழ்குவோர் அழிந்து போவார்கள் என்று பொருள்."

"ஈராக்வாசிகள் வரம்பு மீறுவதைப் போல் வரம்பு மீறாமலும், நோன்பு துறப்பதை விரைவாகச் செய்யும் வரையிலும், இருக்கும் வரை நீங்கள் நன்மையிலேயே இருப்பீர்கள்" என்று உமர் (ரழி) கூறியுள்ளதன் பொருளும் இதுதான் (அதாவது சொல், செயலில் அதிக சிரமம் எடுத்துக் கொள்ளுதல் கூடாது)

"முரண்பாடு, வரம்பு மீறல் ஆகியவற்றை விட்டு உங்களை எச்சரிக்கிறேன்" என்று இப்னு மஸ்ஊத் (ரழி) கூறியுள்ளதன் பொருளும் இதுதான். அதாவது திருக்குர்ஆன் ஓதும் கிராஅத் முறையில் ஒருவருக்கொருவர் முரண்படாதீர்கள். அவை அனைத்தும் ஏதேனும் ஒருமுறைப்படி

சரியானதுதான். (நூல்: அந் நிஹாயா, இப்னுல் அசீர்)

வேறுசில அறிஞர்கள் கூறுகின்றனர்: "முத்தனத்திஊன் என்றால். ஷரீஅத்தீன் அடிப்படை விதிகளை விட்டு வெளியேறி ஊசலாட்டத்தில் ஷைத்தானுடன் சேர்ந்து தொங்கிக் கொண்டிருக்கும் அளவுக்கு வணக்க வழிபாட்டில் வரம்பு மீறுவோர் அழிந்து போவார்கள் என்று பொருள்."

அரிது பெரிதாக நிகழ்கின்ற கடினமான பிரச்சனைகளைப் பற்றி (தேவையில்லாமல்) கேள்வி கேட்பதிலேயே மூழ்கித் திளைப்பவர்கள் என்று அதற்கு விளக்கமளித்துள்ளனர் சிலர்.

அதிகமாக நிகழ்கின்ற பிரச்சனைகளைத் தெளிவுபடுத்துவதற்குக் கிடைத்துள்ள வாய்ப்பை வீணாக்கி, அதி முக்கியமான அவசியமான நேரத்தை மிக மிக அரிதாக நிகழ்ந்திடும் பிரச்சனை பற்றிப் பேசி வீணடிப்பதும் குர் ஆன், ஹதீஸ், இஜ்மா ஆகியவற்றில் எந்த அடிப்படையுமற்ற விஷயங்களைப் பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருப்பதும் இவ்வகையைச் சார்ந்ததுதான்.

இதைவிடப் பயங்கரமானது என்னவென்றால் எந்த விஷயங்களை அப்படியே ஈமான் கொள்ள வேண்டும் என்றும் அதன் விதங்கள் பற்றி கேள்வி கேட்கக் கூடாது என்றும் ஷரீஅத் கூறியுள்ளதோ அவைபற்றி ஆராய்ச்சி செய்வதுதான்.

குர்ஆன் ஹதீஸ் (நக்ல்) மூலம் மட்டுமே அறிந்து கொள்ள முடிகின்ற இந்த உலகத்தில் வேறுசாட்சிகள் ஏதுமில்லாத விஷயங்களான, "மறுமை நாள் எப்போது வரும்?", "ரூஹ் என்றால் என்ன?", "இந்த உம்மத்தின் ஆயுள் எவ்வளவு?" என்பன போன்ற கேள்விகளும் இவ்வகையைச் சார்ந்ததுதான்.

சில அறிஞர்கள் இப்படிக் கூறுகின்றனர். ஒரு செயலைச் செய்யலாம் என்று ஃபத்வா கொடுத்த அறிஞரை கேள்வி மேல் கேள்வி கேட்டு அச் செயலைச் செய்யக்கூடாது என்று ஃபத்வா கொடுத்திடும் நிலைக்குக் கொண்டு வர முயல்வதுதான் தனத்துவு - நத்வு ஆகும் (நூல்: ஃபைளுல் கதீர்)

ஆக அவை அனைத்தும் அல்லாஹ் தடை செய்துள்ள குற்றங்கள்தான். லேசான, சிரமமில்லாத, வாழ்த்துக்குரிய, மக்களை விரட்டாத இம் மார்க்கத்தில் அவை நுழைந்திடக்கூடாது என அல்லாஹ் தடுத்துள்ளான்.

அண்ணல் நபி-ஸல் கூறினார்கள்: தீனில் வரம்பு மீறுவதை எச்சரிக்கிறேன். தீனில் வரம்பு மீறியதால்தான் உங்களுக்கு முன் வாழ்ந்த சமுதாயம் அழிந்தது (அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரழி) நூல்: அஹ்மது, நஸயீ, ஹாகிம், இப்னுமாஜா, இப்னு ஹுசைமா, இப்னு ஹிப்பான்)

எனவே தீனில் எல்லை மீறுதல் வரம்புகடக்குதல், மூழ்கிப் போதல் இவையெல்லாம் சிறிய விஷயங்களைக் கூட கஷ்டமானதாக்கிவிடும். கருத்து வேறுபாட்டுக்குரிய ஒவ்வொன்றிலும் நெருக்கடியைத்தான் தரும் என்பதில் எந்த ஐயப்பாடுக்கும் இடமில்லை. அதே நேரத்தில் நீக்குப் போக்கும் தாராள மனமும் இணக்கத்துக்கும் ஒற்றுமைக்கும் காரணமாகின்றது.

**அச்சொல் நத்உ எனும் வேர்ச்சொல் மூலம் வந்தது. நத் உ என்றால் வாயின் அடி ஆழம் என்று பொருள். பின்னர் இது சொல், செயல் ஆகியவற்றில் ஆழமாகப் புகுந்து விடுதல் என்ற பொருளில் புழங்கப்பட்டு வருகிறது. அதன்படி அடித் தொண்டையில் பேசுவோர், பேச்சில் வரம்பு கடந்து மூழ்குவோர் அழிந்து போவார்கள் என்று பொருள்.**

## வரம்பு மீறலும் எளிதாக்கலும்

கருத்து வேறுபாட்டுக்குரிய விஷயங்களில் குறுகிய இதயமுடையோராக இல்லாமலும், பிரிவுச் சட்டங்களில் விட்டுக் கொடுத்துச் செல்பவர்களாகவும் ஸஹாபாக்களும் அவர்களைப் பின்பற்றியோரும் திகழ்ந்தார்கள். அவர்களை இப்படித் திகழ்ந்திட வைத்தது உயிரோட்டமான இந்தப் பண்புதான். அது மட்டுமன்று எந்தக் கேள்விகளைக் கேட்பதால் தீனைக் கடுமையாக்கிடும் விளைவைத் தவிர வெறெதுவும் ஏற்படப் போவதில்லையோ, அப்படிப்பட்ட (அவசியமற்ற) கேள்விகளை அவர்கள் வரவேற்கவுமில்லை. அவற்றை விவாதமாக்க முயல்வோரை கவனம் திரும்பியவர்கள் என்று கண்டித்துமிருக்கின்றார்கள்.

திருக்குர்ஆனே இதைப் பற்றி எச்சரிக்கிறது: ஓரிறை நம்பிக்கை கொண்டோரே,சில விஷயங் களைப் பற்றி (அவசியமில்லாமல்) கேள்வி கேட்காதீர்கள். அவை உங்களுக்கு தெளிவாக்கப்பட்டால் தீங்காகிவிடும். குர்ஆன் இறக்கப் படும் வேளையில் அவை பற்றிக் கேட்டால் உங்களுக்குத் தெளிவா க்கப்படும். (அவ்வாறு தேவையில் லாமல் நீங்கள் கேட்ட) அவற்றை அல்லாஹ் மன்னித்துவிட்டான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், சாந்தமானவன் (5:101)

அதிகமாகக் கேள்விகள் கேட்டு முஸ்லிம்களைச் சிரமப் படுத்துவதில் போய் முடிகின்ற வற்றை நபி-ஸல் எச்சரித்துக் கூறினார்கள். “ஹராமாக்கப்படாத ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்டு, அப்படிக் கேட்டதால் அது ஹராமாக்கப்பட்டதென்றால் இவ்வாறு கேள்வி கேட்பவர் முஸ்லிம்களில் பயங்கரக் குற்ற வாளியாவார்.” (அறிவிப் பாளர்: ஸஅத் பின் - அபீவக்காஸ் (ரழி) நூல்: புஹாரீ)

மேலும் நபி-ஸல் கூறினார்கள்: (எந்த விளக்கங் களைக் கூறிய நிலையில்) உங்களை நான் விட்டு விடுகின் றேனோ அதே நிலையில் என்னை நீங்கள் விட்டு விடுங்கள். (அவசியமில்லாமல் கேள்வி கேட்காதீர்கள்) ஏனென்றால் உங்களுக்கு முன் வாழ்ந்த சமுதாயத்தினர் அதிகமாகக் கேள்விகள் கேட்டதாலும் தம் நபிமார்களிடமே கருத்து முரண்பட்டதாலும்தான் அழிந்தனர். எனவே உங்களுக்கு நான் கட்டளையிட்டால் முடிந்த அளவுக்கு அதைச் செயல் படுத்துங்கள். நான் தடுத்தவற்றை விட்டு அறவே விலகியிருங்கள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி) நூல்: புஹாரி, முஸ்லிம், அஹ்மது, நஸயீ, இப்னுமாஜா)

முன்வாழ்ந்த சமுதாயம் என்று நபி-ஸல் இங்கே குறிப்பிடுவது இஸ்ரவேலர் களைத்தான். ஒரு மாட்டை அறுத்துப் பலியிட வேண்டும் என்று அல்லாஹ் அவர்களுக்குக் கட்டளையிட்ட போது அவர்கள் மூஸா (அலை)வுடன் வரம்பு மீறி விவாதித்தனர். திரும்பத் திரும்பக் கேள்வி கேட்டனர். “அது என்ன மாடு? அதன் நிறம் என்ன? எந்த வகை?” என்று கேள்வி கேட்டனர். உத்தரவு வந்த ஆரம்ப கட்டத்திலேயே ஏதேனும் ஒரு மாட்டை அவர்கள் அறுத் திருந்தால் அதுவே போது மானதாயிருக்கும். ஆனால் அவர்கள் இவ்விஷயத்தைக் கடுமையாக்கியதால் அல்லாஹ் அவர்கள் மீது கடுமையை விதித்து விட்டான்.

தொடரும் . . .

தமிழில் : இல்யாஸ் ரியாஜி


எதிரொலி

## ஜனநாயக ரீதியாக ப் போராடும் எந்த அமைப்புக்கும் நீதி கிடைக்காது

சிமிக்கு நீதி கிடைக்குமா? என்ற கேள்விக்கணை இந்தியாவில் ஜனநாயக ரீதியாக ப் போராடும் எந்த அமைப்புக்கும் நீதி கிடைக்காது என்ற நிலையை வலுவாக்கியிருந்தது. இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம் குற்றவாளி என்பதற்குரிய எந்த ஆதாரத்தையும் இன்று வரை நமது அரசு எடுத் து வைக்கவில்லை. குணங்குடி ஹனீஃபா விஷயத்தில் அரசு காட்டும் அலட்சியமும் இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம் விஷயத்தில் அரசு காட்டும் ஒருதலைபட்சமான போக்கும் ஒன்று தான். இரண்டும் முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட விஷயம் தான். ஒரு குற்றவாளி சங்கராச்சாரியாருக்கு , ஒரு சாத்வி பிரக்யாசிங் தாகூருக்கு ஒரு ஸ்ரீகாந்த பிரசாத் புரோகித்துக்கு ஒரு சுவாமிஜி தயானந்த பாண்டேக்கு காட்டப்படும் மதிப்பும் மரியாதையும் குற்றம் நிருபிக்கப்படாத சிமி அமைப்புக்கும் வயோதிகத்தில் நோயில் உழலும் ஒரு குணங்குடி ஹனீஃபாவுக்கும் அரசு காட்டாதது அரசின் ஒரு தலைபட்சமான ஒரு சார்பான நிலைப்பாட்டைத்தான் காட்டுகிறது.

சிமி மீது 2001ல் போடப்பட்ட வழக்குகளை விசாரிக்க இன்றுவரை நமது உச்ச நீதிமன்றத்துக்கு சந்தர்ப்பமும் நேரமும் கிடைக்கவில்லை. நீதிபதி கீதாமித்தல் அவர்கள் நியாயமாகப் போட்ட உத்தரவை சிமி தரப்பு வாதத்தை கேட்காமலேயே கிடப்பில் போட உத்தரவிட மட்டும் உச்ச நீதி மன்றத்துக்கு நேரம் கிடைத்துவிட்டது. சிமியைச் சார்ந்தவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் எல்லாம் குற்றவாளிகள் இல்லை என்று வெளியே வந்தும் அந்த அமைப்பு மீது மட்டும் தடை தொடருவது நியாயமற்றது.

இது போன்ற தடைகளும், நிர்பந்தங்களும் நெறுக்குதல்களும் நிரபராதிகள் சுமத்தப்படுவது தீவிரவாதத்தைத் தான் வளர்க்கும். இது போன்ற அரசின் செயல்பாடுகள் மாவோயிஸம் நக்ஸலிஸம் போன்ற தீவிரவாத அமைப்புகள் வளர உந்து சக்தியை உருவாக்கிவிடுவதாக அமையும் என்பதை ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசியல் வாதிகள் உணர்ந்து செயல் பட வேண்டும். மேலும் நீதித்துறையிலும் காவல்துறையிலும் உளவுத்துறையிலும் பாசிஸ சிந்தனைவாதிகளின் ஊடுருவல் இருக்குமோ என்ற அச்சத்தையும் பீதியையும் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகிறது. மதசார்பற்ற இந்த நாடு மதசார்புடைமையை செயல்படுத்த துடிக்கும் அரசியல் வாதிகளின் கைகளில் சிக்கிவிட்டதோ என்ற பயத்தை முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மையினர் மத்தியில் ஏற்படுத்தி வருவதை அரசியல் வாதிகள் அரசியல் சாசனத்தை மதிப்பவர்கள் மகாத்மா காந்தியை மதிப்பவர்கள் உணர வேண்டும். - ***எம்.ஏ. ஹாஜி முஹம்மது, நிரவி.***




**நூலாசிரியர் டாக்டர் வி.எஸ். நடராஜன் முதியோர் மருத்துவச் சேவைக்காக பெருமை வாய்ந்த டாக்டர் பி.சி. ராய் தேசிய விருதைப் பெற்றவர். 1978-ல் சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் முதியோர் நலப் பிரிவைத் தொடங்கியவர், முதியோர் மருத்துவத்தின் முக்கியத்துவத்தை நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர், முதியோருக்கு அவர்களுடைய வீட்டுக்கே சென்று சிகிச்சை அளிக்கும் திட்டத்தை தொடங்கியவர் என, முதியோர் மருத்துவம் தொடர்பான பல முதல் முயற்சிகளை மேற்கொண்ட சாதனையாளர்.**

# புற்று நோய்

**முதுமையில் ஏற்படும் நோய்களில் புற்றுநோயும் முக்கியமான ஒன்றாக இருப்பது ஏன்?**

*இந்தியாவைப் பொறுத்தவரை, முதியவர்களின் இறப்புக்கு முதல் ஐந்து காரணங்களில் ஒன்றாக புற்றுநோயும் இருக்கிறது. புற்றுநோய் வருவதற்கு முக்கியமான முதல் காரணம் வயது. அதே நேரத்தில், வயது அதிகரித்தலுக்கும் புற்றுநோய்க்கும் உள்ள தொடர்பு இன்னும் அறியப்படவில்லை. இருந்தாலும், முதுமையில் புற்றுநோய் வருவதற்கு வாய்ப்பு அதிகம்தான்.*

**புற்றுநோய்க்கான காரணங்கள்:**

- *சிதைவடைந்த செல்கள் மீண்டும் புதுப்பித்துக் கொள்ள முடியாத நிலை.*
- *ஜீன்கள் செயல்பாட்டில் ஏற்படும் குறைபாடு.*
- *நோய் வராமல் தடுக்கும் ஜீன்கள் செயல் இழந்து போதல்.*
- *சுற்றுப்புறச் சூழல் சீர்கேட்டால் பாதிக்கப்படுவது.*

**ஐம்பது வயதுக்குப் பிறகு ஏற்படும் பொதுவான புற்றுநோய் வகை என்ன?**

*சில புற்றுநோய்கள் பெரும்பாலும் 50 வயதுக்குப் பிறகுதான் வரும். இவற்றில் தலை மற்றும் கழுத்துப் பகுதிகளில் தோன்றும் புற்றுநோய், நுரையீரல் புற்று, பெண்களின் பிறப்பு உறுப்புப் பகுதிகளில் வரும் புற்றுநோய், ஜீரண மண்டலத்தில் உணவுக்குழாய்ப் பாதையில் மேல் மற்றும் கீழ் பகுதிகளில் தோன்றும் புற்றுநோய், கணையம் மற்றும் ஆண்களின் ப்ராஸ்டேட் சுரப்பியில் வரும் புற்று போன்றவை முக்கியமானவை.*

**புற்றுநோய் என்பது தொற்று நோயா? அதைக் குணப்படுத்த முடியுமா?**

*பொதுவாக, புற்றுநோயைப் பற்றி தவறான புரிதலும் பொய்யான நம்பிக்கையும் நிறைய உள்ளன. புற்றுநோயைப் பற்றிய அறிவும் விழிப்புணர்ச்சியும் முதலில் முதியவர்களுக்கு வர*

வேண்டும். பெரும்பாலான புற்று நோய்களுக்கு சிகிச்சை உண்டு. புற்றுநோய் வந்துவிட்டாலே மரணம்தான் முடிவு என்ற பயம் வேண்டாம். முதல் நிலையிலே யே கண்டுபிடித்து சிகிச்சை எடுத்துக் கொண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

புற்று நோயாளியைத் தொடுவதாலோ, அவருடன் பழகுவதாலோ இன்னொருவருக்குப் பரவாது. இது தொற்றுநோய் கிடையாது. புற்றுநோயால் பாதிக்கப்பட்டவருக்கு வாந்தி, ரத்தப் போக்கு போன்றவை இருக்கலாம். இவை புற்று நோய்க்கான பொதுவான அறிகுறிகளாகும். ஆனால் வலியோ, அசௌகரியமோ இருக்காது.

**புற்று நோயின் முன்னெச்சரிக்கையான அறிகுறிகள் என்னென்ன?**

- ❖ குடல் மற்றும் சிறுநீர்ப்பை செயல்பாடுகளில் மாற்றம்.
- ❖ புண் உருவாகி குணமாகாமல் இருப்பது.
- ❖ வழக்கத்துக்கு மாறான ரத்தப்போக்கு
- ❖ மார்பகம் மற்றும் உடல் பகுதி தடிப்பது.
- ❖ அஜீரணம், விழுங்குவதில் சிரமம்
- ❖ தொடர்ந்து எடை குறைதல்
- ❖ தொடர் காய்ச்சல்
- ❖ உடலின் மச்சத்தில் பெரிய மாற்றம்
- ❖ தொடர்ந்து இருமல், குரல் மாறுதல்

**புற்றுநோயை வந்துள்ளது என்பதைத் தெரிந்து கொள்வது எப்படி?**

புற்றுநோய் வந்துவிட்டது என்பதைத் தெரிந்துகொள்ள பொதுவாகக் கடைபிடிக்கப்படும் பரிசோதனைகள் சில உள்ளன. அவை:

**மார்பகம்:**

20 வயதிலிருந்து பெண்கள் தங்கள் மார்பகங்களை சுய பரிசோதனை செய்து வர வேண்டும். 40 வயது முதல் ஆண்டுக்கு ஒருமுறை மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மெம்மோகிராம் என்ற பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் 50 வயதுக்குப் பிறகு ஆண்டுக்கு ஒரு முறை கட்டாயம் செய்து கொள்ள வேண்டும்.

**மலக்குடல்:**

நாற்பது வயதிலிருந்து ஆண்டுக்கு ஒருமுறை மலக்குடலை மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும். அடிக்கடி ரத்தப் பரிசோதனையும் செய்து கொள்ள வேண்டும்.

**கருப்பை வாய்:**

18-25 வயதில் இடுப்புப் பகுதி பரிசோதனை மற்றும் பாப்ஸ்மியர் என்ற பரிசோதனையை ஆண்டுக்கு ஒருமுறை செய்து கொள்ள வேண்டும். அப்போதைக்குப் பிரச்சனை இல்லை என்றாலும், அடுத்தடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்பரிசோதனையைச் செய்து கொள்ள வேண்டும்.

**ப்ராஸ்டேட்:**

50 வயதுக்கும் மேலான ஆண்கள், ஆண்டுக்கு ஒருமுறை ப்ராஸ்டேட்-ஸ்பெஸிஃபிக் ஆன்டிஜன் (PSA) லெவல் அறிதல் பரிசோதனையைச் செய்து கொள்ள வேண்டும்.

**நுரையீரல்:**

குறிப்பிட்ட கால இடைவெளியில் மார்பு எக்ஸ்-ரே எடுத்துப் பார்க்க வேண்டும். மேலும், சளியையும் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். மிக முக்கியமாக, புகை பிடிப்பவர்கள் கண்டிப்பாக இப்பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

**தோல்:**

குடும்பத்தில் யாராவது தோல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும், சூரிய ஒளியின் நேரடியான தாக்கத்துக்கு ஆளாகும் வாய்ப்பு இருந்தாலும் பரிசோதனை அவசியம்.


**வாய்:**

பான் பராக், பாக்கு, புகையிலை போன்றவற்றை அதிகம் உபயோகிப்பவர்களுக்கு வாயில் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு அதிகம்.

முதுமையில் தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டால் புற்றுநோய் வராமல் தடுக்க முடியும். உடலில் ஏதேனும் திடீர் மாற்றம் ஏற்பட்டால் உடனே டாக்டரிடம் சென்று சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படி விழிப்புணர்வோடு இருப்பதன் மூலம் முதுமையில் புற்றுநோயால் பாதிக்கப்படாமல் நலமாக வாழலாம்.

# தீவிரவாதிகள் கொல்லப்பட்டனரா? தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனரா?

## பாட்லா ஹவுஸ் பிரேத பரிசோதனை: வெளிவரும் உண்மைகள்




போலி என் கவுண்டர் என்று அறியப்பட்ட பாட்லா ஹவுஸ் எதிர்தாக்குதலில் சுட்டு கொல்லப்பட்ட இரு இளைஞர்களும் குண்டுகளின் காயங்களை தவிர ஆயுதங்களினால் பயங்கரமாக தாக்கப் பட்டுள்ளனர்.

இந்த உண்மை NHRC வழங்கிய, ஆதிஃப் அமீன் (24), முஹம்மது ஸாஜித் (18) ஆகியோரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிய வந்திருக்கிறது. ஜாமியா பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒருவரின் விடா முயற்சியின் பயனாக, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் இந்த உண்மைகள் வெளிவந்திரு க்கின்றன.

சமூக ஆர்வலர்களின் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கு பின்னரும் தில்லி காவல் துறையின் சிறப்பு பிரிவு சில அறிக்கைகளை வெளியிட மறுத்து வந்தது. இறுதியாக இந்த அறிக்கை மார்ச் 17, 2010 புதன் கிழமை அன்று வெளியானது. இதுவும் தகவல் அறியும் உரிமை சட்ட ஆர்வலரான அஃப்ரோஸ் ஆலம் சஹில் அவர்களின் தீவிர முயற்சிக்கு பின்னரே வந்தது. செப்டம்பர் 19. 2008 அன்று காவல் துறையின் எதிர் தாக்குதலில் ஆசம் காரின் இரு இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இதன் உண்மை தன்மை பற்றி எல்லா தரப்பிலிருந்தும் சரமாரியாக கேள்விகள் எழுந்து வருகின்றன. காவல் துறையின் சிறப்பு பிரிவில் பணிபுரியும் M. C. ஷர்மாவும் அந்த எதிர்தாக்குதலின் போது கொல்லப்பட்டார். அவருடைய பிரேத பரிசோதனை அறிக்கையும் தற்போது வெளியாகியுள்ளது.

கொடூரமான முறையில் அந்த இரு இளைஞர்களும் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு ஒரு நீதி விசாரணை தேவை என்று ஜாமியா பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களின் ஒருமைப்பாட்டு அமைப்பில் (JTSA) உள்ள சில முக்கிய நபர்களும், வழக்கறிஞர்களும், பத்திரிக்கையாளர்களும் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களும் கூறியிருந்தனர். அவர்கள் NHRCயின் அறிக்கையை, காவல் துறையின் மறுபதிப்பு என்றும் சந்தேகத்திற்குரிய பகுதிகள் இதில் சோக்கப்படவில்லை என்றும் கூறி நிராகரித்தனர்.

தகவல்கள் 30 நாட்களுக்குள் சட்டப்பூர்வமாக கொடுக்கப்பட வேண்டும் என இருந்த போதிலும், அவை எனக்கு 18 மாதங்களுக்கு பிறகு தான் கிடைத்தது என அஃப்ரோஸ் கூறினார்.

ஷாஜிதின் இறுதிச் சடங்கின் போது எடுத்த புகைப்படங்கள் அவரின்

தலையின் ஐந்து துப்பாக்கி குண்டு காயங்கள் இருந்ததை காட்டுகிறது. அவரை உட்கார வைத்து மேலிருந்து சுட்டது போலவும், அதை போன்று ஆதிஃபிற்கும் அவரது பின்பகுதியில் உராய்வுகளும் உள் காயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் இருவரும் எதிர் தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தால் இது எப்படி சாத்தியம்? என உறவினர்களும், ஜாமியா ஆசிரியர்களும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குறிப்பிட்ட ஊடகங்களும், தனிப்பட்ட சிலரின் அறிக்கைகளும் பாட்லா ஹவுஸ் படுகொலையின் சந்தேகத் தன்மை குறித்து தொடர்ச்சியாக கேள்வி எழுப்பிய வண்ணம் இருக்கின்றன.

"நான் எதிர்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் புகைப்படத்தை பார்த்தேன். இது பற்றி ஒரு விசாரணை தேவை என நான் எண்ணுகிறேன்" என்று காங்கிரஸ் தலைவர் திக் விஜய்சிங் கூட சமீபத்தில் கூறினார்.

பிரேத பரிசோதனை அறிக்கையின் படி ஷாஜியின் உடலில் 14 காயங்கள் உள்ளன. காயங்கள் 1 முதல் 12 வரை துப்பாக்கி போன்ற ஆயுதங்களால் உண்டானவை. அதே வேளை காயங்கள் 13 மற்றும் 14 முனை மங்கிய பகுதியினாலோ, பொருளினாலோ வேகமாக தாக்கியத்தில் உண்டானது என அறிக்கைகள் தெரிவிப்ப தாக மனித உரிமை குழுக்கள் குறிப்பிடுகின்றன.

காயம் எண் 13 பற்றி குறிப்பிடுகையில் அது "மார்பிற்கு நேர் பின்னால் நடுப்பகுதியில் சிகப்பு நிறத்தில் உள்ள 4 x 2 cm அளவிலான சிராய்ப்பு எனவும், காயம் எண் 14-வலது காலின் நடுப்பகுதியில் 3.5 x 2 cm அளவில் கிடைமட்டமாக ஏற்பட்ட வெட்டுக்காயம்" எனவும் தெரிவிக்கறது.

ஆதிஃப் அமீனின் பிரேத பரிசோதனை அறிக்கையின்படி "மரணத்திற்குக் காரணம் மின்சார அதிர்ச்சியும், பல்வேறு காயங்களால் ஏற்பட்ட இரத்தப் பெருக்குமாகும்" என ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர். முனை மங்கிய பகுதியினாலோ, பொருளினாலோ வேகமாக தாக்கியதால் உண்டான காயம் எண் '7' ஐ தவிர, மற்ற எல்லா காயங்களும் துப்பாக்கி போன்ற ஆயுதங்களால் உண்டானவை.

மனித உரிமை ஆர்வலர்கள் இப்போதும் எழுப்பிக் கொண்டிருக்கும் கேள்வி என்னவெனில், இளைஞர் ஷாஜித் எதிர் தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தால், காவல் துறை சிறப்பு பிரிவினர் அவரை அடிக்க முனைந்தது ஏன்?

அதாவது எதிர் தாக்குதலில் கொல்லப்படுவதற்கு முன்னர் அவரை அடித்தார்களா? அப்படியானால் அது எவ்வாறு எதிர் தாக்குதலாகும்? மேலும் அவரை அடிக்க முடிந்திருக்கின்றது என்றால் ஏன் கைது செய்யவில்லை? எதிர்தாக்குதலில் கொல்லப்பட்ட பின்பு முனை மங்கிய பொருளினால் தாக்கப் பட்டுள்ளார் என்றால் அது இன்னும் வினோத மானது தான்? ஏனெனில் அதுவும் மேற்பகுதியில் ஐந்து குண்டுகள் துளைத்த பின்னரா?

எதிர்தாக்குதலில் நடந்த இடத்திற்கு மிக அருகிலேயே இரு மருத்துவமனைகள் இருந்திருக்கின்றன. டில்லி காவல் துறை ஆய்வாளர் M..C. ஷர்மா காயமுற்று பின்னர் இறந்து போனார் போன்ற சூழ்நிலைகள் பற்றிய கேள்விகள் எழுந்த வண்ணம் உள்ளன.

NHRC, காவல்துறையின் அறிக்கையை முழுமையாக சார்ந்திருந்தது, பிரேத பரிசோதனையின் அறிக்கையை பெறுவதற்கு தெளிவான வாய்ப்பிருந்தும், தன்னுடைய ஒரு தலை பட்சமான அறிக்கையில் அவற்றை சுட்டிகாட்டுவது தேவை என கருதவில்லை. பிரேத பரிசோனை அறிக்கையிலுள்ள உண்மைகள் அதிகாரப் பூர்வமான வெளி யிட்டு அறிக்கையில் ஏதோ தவறு இருப்பதை காட்டுகிறது. இது, எதிர் தாக்குதலை பற்றிய நீதி விசாரணை வேண்டுகோளுக்கு மேலும் வலு சேர்க்கிறது என ஜாமியா பல்கலைக்கழத்தின், ஆசிரியர் ஒருமைபாட்டு அமைப்பின் தலைவர் மனிஷா சேதி கூறுகிறார்.

**(Source: hardnewsmedia)**

***- முபஷ்ஷிர் துபாய்***

# நக்கீரன் கோபாலுடன் உலமா சபை சந்திப்பு

நக்கீரன் Vol.22, No.98 இதழில் "நான்தான் நபிகள் நாயகம்" என்ற தலைப்பில் ஒரு பெட்டிச் செய்தி வெளியாகியிருந்தது.

பாலியல் சர்ச்சைகளில் சிக்கியிருக்கும் நித்யானந்தா தனது உரைகளில் ஏசு, இராமகிருஷ்ணர், விவேகானந்தர், நபிகள் நாயகம் ஆகியோரின் கருத்துக்களை தனது சொந்த கருத்து போல் கூறி அவர்கள் அனைவருமே நான்தான் என்று கூறுவதாக செய்தி வெளியிட்ட நக்கீரன் அந்தச் செய்திக்கு, "நான்தான் நபிகள் நாயகம்" என்று தலைப்பிட்டிருந்தது.

இது முஸ்லீம்களிடையே பெரும் மனக்கொதிப்பை ஏற்படுத்தியது. இது குறித்து சமுதாயத்தின் எண்ணங்களை வருத்தங்களை நக்கீரன் ஆசிரியர் திரு. கோபால் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடன் "ஜமாஅத்துல உலமா"வின் நிர்வாகிகள் அவரை சந்தித்தார்கள்.

29.03.2010 அன்று நக்கீரன் அலுவலகத்தில் நடந்த இந்த சந்திப்பில் மாவட்ட ஜமாஅத்துல் உலமா தலைவர் மவ்லானா இலியாஸ் காசிபி, செயலாளர் டாக்டர் அன்வர் பாதுஷா உலவி, பொருளாளர் கலீல் மன்பர், மாநில செய்தித் தொடர்பாளர் இலியாஸ் ரியாஜி ஆகியோர் பங்கேற்றனர்.

"அந்தச் செய்திக்கு அப்படி தலைப்பு போட்டதில் எந்த உள் நோக்கமும் இல்லை. நக்கீரனைத் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். நான் பிறப்பால் ஓர் இந்து. ஆனால் இந்து மதத்தின் பெயரால் நடக்கும் போலித் தனங்களை எதிர்ப்பதே எனது நோக்கம். முஸ்லீம்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு உடனேயே எங்களின் இணையதளத்தில் வருத்தம் வெளியிட்டோம். அடுத்த (Vol.22, No.99) இதழிலும் மன்னிப்பு வெளியிட்டுள்ளோம். நான் உங்கள் நண்பன். என்னை எதிரியாகக் கருத வேண்டாம்" என்று நக்கீரன் கோபால் ஆலிம்களிடம் கூறினார்.

சமுதாயத்தின் உணர்வுகளை அவரிடம் ஆலிம்கள் எடுத்துரைத்தனர். சுமார் அரை மணி நேரம் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.


## இறைவனின் அழகிய வழி காட்டுதல் அனைவருக்கும்

***மனிதன் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும்?***

***இந்த வினாவிற்கான முழுமையான விடையே திருக்குர்ஆன்***

***இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.***

***அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன்***
***தமிழ் மொழி பெயர்ப்பை பெற்றிட கீழ்காணும் முகவரிக்கு எழுதுங்கள்!***

**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்**

**235, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014**

**குறிப்பு :**

**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கில்லை.**

# துறவு அறமல்ல

செய்தி கட்டுரை

எல்லாம் வல்ல இறைவன் மனிதனை ஏன் படைத்தான்?

இந்தக் கேள்விக்கு இறைவன் இப்படிப் பதில் கூறுகிறான் திருமறையில்.

என்னை வணங்கிடுவதற்காக அன்றி (வேறெதற்கும்) மனிதனையும் ஜின்னையும் நான் படைத்திடவில்லை **(51:56)**

மனித இனம் படைக்கப்பட்ட அடிப்படை நோக்கம் இறை வணக்கத்தில் திளைத்திடத்தான் என்றால் ஆண் பெண் என்று இரு இனங்களை ஏன் படைத்தான்?

ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்வளவு வேறுபாடுகள்! வித்தியாசங்கள்!!

குரலில், சாயலில், வெளி உறுப்புக்களில் உள்ளுறுப்புகளில், நடையில் இருவருக்குமிடையே எவ்வளவோ வேறுபாடுகள் உள்ளன.

இவ்வாறான பெரும் வேறுபாடுகளோடு இரு இனங்களாக ஏன் மனிதனைப் பிரித்துப் படைத்தான்? ஆண்கள் மட்டும் இருந்தாலும் இறைவனை வணங்கிடத் தான் செய்வார்கள். பெண்கள் மட்டும் இருந்தாலும் வணங்கிட மறுக்க மாட்டார்கள்.

பிறகு எதற்காக இரு இனங்கள்? இந்தக் கேள்விக்கும் திருக்குர்ஆன் பதிலைக் கூறாமல் விட வில்லை.

"அவனே உங்களை ஒரே (மனிதர்) ஆத்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்து அவருக்குரிய ஜோடியையும் படைத்தான் அவர்தம் ஜோடியிடம் நிம்மதி பெறுவதற்காக" **(7:189)**

"இன்னும் நீங்கள் ஆறுதல் பெறுவதற்குரிய மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும் உங்களிடையே உவப்பையும் கருணையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய சான்றுகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக் கூடிய சமூகத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன" **(30:21)**

ஆம். உண்மைதான். ஒருவர் மற்றவரிடம் அமைதியும் நிம்மதியும் அன்பும் காட்டி பரஸ்பரம் கருணையைப் பரிமாறிக் கொள்வதற்கே இரு இனங்களாக மனிதன் படைக்கப்பட்டுள்ளான்.

ஆதி மனிதன் ஆதம் நபியைப் படைத்த அல்லாஹ் அவர்களை சுவர்க்கத்தில் குடியமர்த்தினான். அவர்கள் உற்சாகமிழந்து காணப்பட்டார்கள். (சொர்க்கத்தில் விரும்பியதை அனுபவிக்கும் வாய்ப்பில் வீற்றிருக்கும் ஒருவரிடம் இருந்திட வேண்டிய மகிழ்ச்சி அவர்களிடம் இல்லை). அங்கே அவர்கள் அங்குமிங்கும் சென்று வந்தார்கள். அவருக்கு நிம்மதியை தருவதற்காக, உறக்கத்திலிருந்த போது அவர்களில் விலா எலும்பிலிருந்து ஹவ்வா (அலை) வைப்படைத்தான் என்று இப்னு அப்பாஸ் (ரழி) இப்னுமஸ் ஊத் (ரழி) அறிவித்துள்ளார்கள் (நூல் – பை ஹ கீ).

ஏகத்துவக் கோட்பாட்டை மனித சமுதாயத்துக்கு எடுத்துரைக்கவும் அவர்களை நேர் வழியில் நடத்திடவும் அந்த மனித குலத்திலிருந்தே தன் தூதர்களை இறைவன் தேர்தெடுத்து அனுப்பினான். இறைப்பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அந்த இறைத் தூதர்களும் கூட இல்லறத்தை இனிதே ஏற்றுக் கொண்டுதான் வாழ்ந்துள்ளனர்.

அல்லாஹ் கூறுகிறான்: (நபியே) நிச்சயமாக உமக்கு முன்னரும் நாம் தூதர்களை அனுப்பினோம். அவர்களுக்கு மனைவியரையும் வாரிசுகளையும் நாம் எற்படுத்தியிருந்தோம் **(13:38)**

மனிதப் புனிதர்களாய் வாழ்ந்து இறை நெருக்கத்தில் திளைத்த திருத்தூதர்கள் அனைவரும் இல்லறத்தை போதித்தார்கள் அதைக் கடைபிடித்தார்கள்.

அண்ணல் நபிகளில் –கூறினார்கள். வெட்கம், நறுமணம் பூசுதல், பல்துலக்குதல், திருமணம் செய்து கொள்தல் ஆகிய இந்த நான்கும் இறைத்தூதர்களின் வழிமுறையாகும். (நூல் – திர்மிதி, அறிவிப்பாளர் – அபூ அய்யூபில் அன்சாரி (ரழி)

எல்லாம் வல்ல இறைவன் மனித சமுதாயத்தை பசி, தாகம், கோபம், நகைச் சுவை ஆகிய உணர்வுகளோடு படைத்திருப்பது போல் காம உணர்வுடனும் படைத்துள்ளான். ஆண், பெண் என இரு இனங்களைப் படைத்து ஒருவர் மீது மற்றவருக்கு ஈர்ப்பையும் ஏற்படுத்தினான்.

எனவே எதிர்ப்பாலின ஈர்ப்பு என்பது மனித இயல்பு, அதைப் பாவம் எனப் போதிப்பதும் கருதுவதும் அறியாமை மட்டுமல்ல இயற்கைக்கு எதிரான போர். மனிதனின் இயல்புக்கு எதிரான எந்தக் கொள்கையும் வெற்றி பெற முடியாது. மனித இயல்புக்கு எதிரான போர்கள் என்றும் எங்கேயும் வென்றதில்லை.

இன்னுஞ் சொன்னால் மனித இயல்புக்கு எதிரான கொள்கைளால் மனித இனத்திற்கு ஒரு போதும் நன்மையைத் தந்திட இயலவில்லை. இழிவையும் அவமானங்களையுமே அவை வழங்கியுள்ளன.

அவ்வாறு தன்னை ஏற்றுக் கொண்டோரை இழப்புக்கும் மானக் கேடுகளுக்கும் ஆளாக்கும் கொள்கைகளில் ஒன்று துறவறம் எனப்படும் இல்லறத்துறவு.

உண்மையைச் சொன்னால் துறவு என்பது ஓர் அறமல்ல. அது ஒருவர் தனக்குத் தானே செய்து கொள்ளும் அநீதி. அநீதி எப்படி அறமாகும்.

இல்லறம் தான் அறம். ஏனெனில் இது தான் மனிதனின் உடலோடும் உணர்வோடும் கலந்து கிடக்கும் காம உணர்வுக்கு வடிகால் காட்டுகிறது.

மனிதனை நெறிப்படுத்துகிறது.

மனிதன் என்ற கண்ணியமான உருவத்துக்குள் இருக்கும் எண்ணற்ற உணர்வுகளில் காமம் அலாதியானது. அடக்க இயலாதது. மனிதனின் சிந்தனைத் திறனை மழுங்கடித்து விடக்கூடியது. அடங்கும் வரை அலை பாயக் கூடியது. அதற்கொரு சரியான வழியைக் காட்டவில்லையென்றால் முறையற்ற வழியில் முனைப்போடு முந்திச் செல்லக் கூடியது. எல்லாம் முடிந்த பின்னர் தான் அறிவு விழித்தெழுந்து கேள்வி கேட்கத் தொடங்கும் இது சரிதானா என்று?

இதை படிப்பு, சந்நியாசம் துறவறம் என எதுவும் தடுப்பதில்லை. முறையற்ற முயற்சியில் காமத்தை செலவிட்டதால் சாம்ராஜ்யங்கள் சரிந்ததுண்டு. தனி நபர்கள் தாழ்ந்ததுண்டு. ஒய்யாரமான உப்பரிகையிலே வீற்றிருந்தவர்களும் வீழ்ந்ததுண்டு. ரோம், கிரீஸ் ஆகிய சாம்ராஜ்யங்களின் வீழ்ச்சி இதற்கோர் சிறந்த உதாரணம்.

ஆதமின் வழித் தோன்றல்களை நாம் மிக்க கண்ணியமானவர்களாக்கி உள்ளோம். (17:70) என்று கூறிடும் இறைவன் காம உணர்வுகளுக்கான கடிவாளத்தையும் கண்ணியமாகப் போட்டான். திருமணம் வழியாக இல்லறம் என்பதே அந்த கண்ணியமான கடிவாளம்.

கடிவாளமில்லாத மிருகம் போல் கண் கண்ட இடத்திலெல்லாம் மேய்வது மனிதனுக்கு இறைவன் வழங்கிய கண்ணியத்தை தரைதட்டச் செய்து விடும்.

திருமணத்தின் தேவை உள்ளவர்கள் திருமணம் செய்திடாமல் இருப்பதை அவர்களின் சமுதாயம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்திட வேண்டும் என்கிறான் அல்லாஹ்.

''உங்களில் வாழ்க்கைத் துணையில்லாதவர் (ஆண், பெண்)களுக்கும் உங்களில் நல்லொழுக்கமுள்ள ஆண், பெண் அடிமைகளுக்கும் திருமணம் முடித்து வையுங்கள். அவர்கள் ஏழையாக இருந்தால் அல்லாஹ் அவர்களை சீமான்களாக்கி வைப்பான். அவன் தாராளமானவன். நன்கறிந்தவன்'' (24:32).

திருமணத்துக்கான உடல் தகுதியை அடைந்துவிட்டவர்களுக்கு திருமணத்துக்கான வாய்ப்பு இல்லாமல் போகின்ற அல்லது மறுக்கப்படுகின்ற சமுதாயத்தில் ஒழுக்கக்கேடுகள் தலை தூக்குவதும் அது பரவுவதும் இயல்பானதே, இதில் ஆண், பெண் என்று எந்தப் பாகுபாடுமில்லை.

இல்லறத்துறவை வலியுறுத்துகின்ற, போதிக்கின்ற, கடைபிடிக்கின்ற ஆண் சாமியார்களின் அந்தரங்க சேட்டைகள் அம்பலத்துக்கு வந்திருப்பதைப் போலவே பெண் சாமியார்களின் பொல்லாத செயல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் நடைபெற்று வரும் குண்டு வெடிப்புகளின் பின்னால் இந்துத் தீவிரவாத சக்திகளின் சதிகள் இருப்பதைக் கண்டு பிடித்த வீரத்திருமகன் ஹேம்மந் கர்கரே அவர்கள் ஒரு மடிக் கணிணி (லேப்டாப்) ஐயும் கண்டுபிடித்தார். அதில் பெண் சாமியார் பிரஞ்யாவும் பாண்டே என்பவரும் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளும் காட்சிப்பதிவுகள் இருந்தன.

இது ஒருவர் மற்றவரை மிரட்டிக் கொள்ளவும் எதிர்காலத்தில் காரியம் சாதிக்கவும் ஒருவருக்குத் தெரியாமல் இன்னொருவர் என இருவருமே எடுத்துக் கொண்ட வீடியோப்பதிவு என்கின்றனர் விபரமறிந்தவர்கள்.

இல்லறம் எனும் இனிய புனிதத்தை பாவச் செயல் போல் காட்டும் இவர்கள் பாவங்களில் திளைப்பதைப் பாரறியும்.

ஆணிலிருந்தே பெண் படைக்கப்பட்டாள் என்கிறது திருக்குர்ஆன் (காண்க: 4:1). எனவே ஆணுக்கு இருக்கும் எல்லா குணங்களும் உணர்வுகளும் பெண்ணுக்கும் இருக்கும். இருவரும் இணைந்து கொள்வது

## நிச்சயமாக நீ ஷைத்தான்

இல்லறத் துறவு என்பது ஷைத்தானின் தீய செயல்களுக்கேப் பாதை அமைத்துத்தரும்.

உகாஃப் பின் வதாஆ (ரழி)யவர்கள் அண்ணல் நபி (ஸல்) இடம் வந்தார்கள். அப்போது அவரிடம்,'' உமக்கு மனைவி இருக்கிறாரா?'' என நபி–ஸல் கேட்டார்கள். அவர் ''இல்லை'' என்றார். ''அடிமைப் பெண் இருக்கிறாரா?'' என்று நபி கேட்டார்கள். அவர் ''இல்லை'' என்றார்.

''உமக்கு திருமணம் செய்திட பொருளாதார பலமும் உடல் பலமும் உள்ளதா?'' என்று அவரிடம் நபி–ஸல் கேட்டார்கள். அதற்கு அவர் ''ஆம். அல்ஹம்து லில்லாஹ். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்'' என்றார்.

''அப்படியானால், நிச்சயமாக நீ ஷைத்தான்களில் ஒருவன். நீ கிறிஸ்தவர்களின் துறவுச் செயலைக் கடைபிடித்து அவர்களுள் ஒருவனாக இருக்கலாம். அல்லது நம்மைப் போல் செயல்பட்டு நம்மில் ஒருவனாக இருக்கலாம். நம்முடைய வழிமுறைகளில் திருமணமும் ஒன்று. உங்களில் மிக மோசமானவர்கள் (வாய்ப்பிருந்தும்) திருமணம் செய்திடாமல் வாழும் பிரம்மச்சாரிகளே'' நபி –ஸல் கூறினார்கள். (நூல்: பைஹகீ)

அல்லாஹ் கூறுகிறான்: இல்லறத்துறவை நாம் அவர்களுக்கு விதிக்கவில்லை. அவர்கள் புதிதாகத் தாமே அதை உருவாக்கிக் கொண்டனர். (57:27)

**திருமணத்துக்கான உடல் தகுதியை அடைந்துவிட்டவர்களுக்கு திருமணத்துக்கான வாய்ப்பு இல்லாமல் போகின்ற அல்லது மறுக்கப்படுகின்ற சமுதாயத்தில் ஒழுக்கக்கேடுகள் தலை தூக்குவதும் அது பரவுவதும் இயல்பானதே, இதில் ஆண், பெண் என்று எந்தப் பாகுபாடு மில்லை.**

இயற்கையின் தேட்டம். இறைவனின் திட்டம். அந்த இணைப்பு இனிய திருமணம் மூலமே நிகழ்ந்திட வேண்டும் என்பது இறைவன் வகுத்த சட்டம். திருமணத்தின் மூலம் மனித இனம் பல்கிப் பெருகிட வேண்டும் என்பது இறைவனின் விருப்பம்.

மனித இனம் பெருகிடக் காரணம் காமம் தான். இந்த உணர்வை கண்ணியமாக வெளிப்படுத்திட விரும்புவோருக்குத் திருமணம் செய்து வைப்பது சமுதாயத்தின் கடமை.

அண்ணல் நபி–ஸல் கூறினார்கள்:– ''வாழ்க்கைத் துணை இல்லாதவர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவிடுவதற்காக முயற்சிப்பவர் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்பவரைப் போன்றாவார்'' இவ்வாறு கூறிய நபி–ஸல்–''அவர் சடைவில்லாமல் நின்று வணங்குபவர் போன்றும் இடைவில்லாமல் நோன்பு நோற்பவர் போன்றும் ஆவார்'' என்றும் கூறினார்கள் என்றே நினைக்கிறேன் என்று அபூஹீரைரா (ரழி) கூறினார்கள் (நூல்: புஹாரீ)

திருமணத்தின் தேவையுள்ளோருக்கு திருமணம் செய்து வைக்காமலிருப்பது ஒழுங்கீனமானவர்களை உருவாக்கிவிடும். வறுமை நிலவும் சமுதாயத்தில் அமைதி இருக்காது. ஒழுங்கீனமும் வறுமையும் உள்ளிருந்து கொல்லும் ஆபத்துக்கள். இந்த ஆபத்துக்களை அகற்றுவதற்காக உழைப்போர் வெளியிலிருந்து வரும் அநீதிகளுக்கு எதிராகப் போராடும் போராளிகளுக்கு நிகரானவர் என்று கூறுவதன் மூலம் திருமணத்தை எவ்வளவு அதி முக்கியப் பணியாக இஸ்லாம் பார்க்கிறது என்பதை அறியலாம்.

அண்ணல் நபி–ஸல் கூறினார்கள்:– மூன்று செயல்களுக்காக கடன் வாங்குவது அனுமதிக்கப்பட்டதே, 1. அநீதிக்கு எதிரான போரில் ஆயுதம் வாங்கிட, 2. இறந்து விட்ட (ஏழை) மனிதனை அடக்கம் செய்திட ஏற்படும் செலவுகளுக்காக, 3. திருமணம் செய்து ஒழுக்கத்துடன் வாழ்ந்திட (நூல்: இப்னுமாஜா).

இவற்றுக்காக வாங்கிய கடனை திருப்பித் தந்திட இயலாத நிலையிலேயே கடன் வாங்கியவர் இறந்துவிட்டால் அதற்காக அல்லாஹ் அவரை தண்டிக்க மாட்டான்.

நபி–ஸல்– கூறினார்கள்: அம்மனிதரிடம் ''ஏன் கடன் வாங்கினாய்? (திருப்பித் தராமல்) அவர் உரிமையை ஏன் பறித்தாய்?'' என்று அல்லாஹ் கேட்பான். அதற்கவர், ''இறைவா, உனக்குத் தெரியும். நான் அந்தக் கடனை வாங்கி உண்ணவுமில்லை. பருகவுமில்லை. விரயம் செய்யவுமில்லை'' என்று பதில் கூறுவார்.

இதற்கு அல்லாஹ் அவரிடம், ''என் அடிமையே! நீ உண்மையைச் சொன்னாய். அதனை (கடனை) திரும்பத் தரும் பொறுப்பு எனக்குத் தான் அதிகமுள்ளது,'' என்று கூறுவான் (நூல்: அஹ்மது)

மணப்பெண்ணுக்குத் தரப்படும் மஹ்ர் எனும் திருமணப் பணம் உள்ளிட்ட அடிப்படைச் செலவுகளுக்கு கடன் வாங்கியாவது திருமணம் செய்திட வேண்டும் என்று வலியுறுத்தும் மார்க்கம் இஸ்லாம்.

இந்தத் திருமணத்தின் பின்னர் மனைவியுடன் தாம்பத்திய உறவில் ஈடுபடுவதையும் ஓர் நன்மை தரும் வணக்கம் என்கிறது. ஏனெனில் மனித இனம் ஜோடியாகப் படைக்கப்பட்ட நோக்கம் நிறைவேறும் வேளை அதுதான்.

இப்படி ஒழுக்கமாக வாழ்ந்திட இஸ்லாம் வழங்கியிருக்கும் எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தி ஒருவர் வாழ்ந்திட வேண்டும்.

இத்தனை வாய்ப்புகளையும் பயன்படுத்திடமால் ஒழுக்கக் கேட்டில் வீழ்ந்தால் அவனுக்கு மறக்கமுடியாத தண்டனை (100–கசையடி) வழங்கி மீண்டும் ஒழுக்கமாக வாழ்ந்திட வழி ஏற்படுத்தித் தரும் இஸ்லாம்.

திருமணத்திற்குப் பின்னரும் மானக்கேடுகளில், அனுமதிக்கப்படாத வழியில் தடம் புரண்டால் அவன் உயிர் வாழும் உரிமையைப் பறித்து விட வேண்டும் என்பதில் இஸ்லாம் உறுதியாக இருந்திடும்.

எனவே இல்லறம் தான் மனிதனை ஒழுக்கக் கேடுகளிலிருந்து பாதுகாக்கும் அரண் அதுதான் அறம். துறவு என்பது அநீதி. அறமல்ல.

இது முனிவனும் மயங்கும் பூமி என்று சொல்லத்தக்க அளவில் ஆபாசங்கள் தலை விரித்தாடும் உலகம். இந்தப் பேரழிவுப் பாதையை இஸ்லாம் தரும் இனிய இல்லற வழி மூலமே வென்றெடுக்க முடியும்.

ஏகத்துவம்–தவ்ஹீத், தூதுத்துவம் ரிஸாலத், மறுமை நம்பிக்கை ஆகிய நம்பிக்கைகளை இதயத்தில் ஏந்தி வாழ்வோரை இஸ்லாம் கண்ணியமாக கவுரவமாக வாழ வைக்கிறது.

இந்த நம்பிக்கை இல்லாதவர்களிடம் ஒழுக்கத்தை எதிர்பார்ப்பது சரியானதல்ல.

மனிதன் தனக்குத்தானே வடித்துக் கொண்ட துறவுக் கொள்கையாலும் இதர கோட்பாடுகளாலும் மனிதன் கண்ணியம் பெறவில்லை. பெறமுடியாது என்பதற்கு நித்தியானந்தா, பிரேமானந்தா, பிரஞ்யா, சங்காரச்சாரி இன்ன பிற மனிதர்களும் சம்பவங்களும் சாட்சி. ஆட்கள் மாறுகின்றார்கள் காட்சிகள் கிட்டத்தட்ட அதே தான்.

இந்நிலை மாறிட வழி இருக்கிறது. ஏற்க நாம் தாயாரா?

–இல்யாஸ் ரியாஜி.

# அம்பேத்கர் சந்தித்த அவமானங்கள்

டி.எம்.உமர் ஃபாருக்



வருகின்ற ஏப்ரல் 14ஆம் தேதி அன்னல் அம்பேத்கரின் பிறந்த நாளாகும், தேசத்தில் உள்ள நகரங்களில் மட்டும் அல்லாமல் கிராமங்களில் உள்ள சேரிகள் தோறும் அவருக்கு விழா எடுக்கப்படுகிறது, தமிழக அளவில் வேறு எந்த தலைவருக்கும் இல்லாத அளவில் அம்பேத்கருக்கு சிலைகள் அமைக்கப்பட்டிருக்கிறது. தேசம் அவரை பாரத ரத்னா பட்டம் கொடுத்து பாராட்டியிருக்கிறது. இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தின் தந்தை என்று புகழாரம் சூட்டுகிறது. லண்டனில் நடந்த வட்ட மேஜை மாநாட்டில் அவர் ஆற்றிய உரை இந்தியாவில் பல ஆயிரம் ஆண்டு காலமாக அடிமைப்பட்டு, கொடுமைப்பட்டு கிடந்த தீண்டத்தகாத மக்களின் வாழ்வு நிலையை மாற்றிப்போட்டது. இவ்வளவு அறிவும், திறமையும் ஆற்றலும் மிகுந்த ஒரு மாபெரும் மனிதர். அவர் இந்துவாக பிறந்த ஒரே காரணத்தால் அவர் அடைந்த கொடுமைகள் கொஞ்சம் நஞ்சமல்ல. அவர் இளமைக்கால கொடுமைகளை அவரே கூறுகிறார்.

பசியால் என்வயிறு கபகப என்று எரிந்து கொண்டிருந்தது. எங்களிடம் ஏராளமான உணவுப்பொருள் கைவசமாக இருந்தாலும் தண்ணீர் கிடைக்காததால் இந்த நிலைமை. நாங்கள் தீண்டத்தகாதவராக இருந்ததால் எங்களுக்கு தண்ணீர் கொடுக்கவில்லை. இந்நிகழ்ச்சி எனது வாழ்வில் மிக முக்கியமான இடத்தை பிடித்துள்ளது. அது நிகழ்ந்த போது எனக்கு ஒன்பது வயது. ஆனால் என் மனதில் ஓர் அழியாத தழும்பை ஏற்படுத்திவிட்டது.

தீண்டத்தகாதவர்கள் சில அவமானங்களுக்கும், அவமதிப்புகளுக்கும், பாகுபாடுகளுக்கும் உட்பட்டவர்கள் என்பதை நான் அறிவேன். உதாரணமாக பள்ளி வகுப்பில் மற்ற மாணவர்களுக்கு இடையே எனது வகுப்பு வரிசைப்படி

**ஏராளமான உணவுப்பொருள் கைவசமாக இருந்தாலும் தண்ணீர் கிடைக்காததால் இந்த நிலைமை. நாங்கள் தீண்டத்தகாதவராக இருந்ததால் எங்களுக்கு தண்ணீர் கொடுக்கவில்லை.**

நான் உட்காரக்கூடாது. ஒரு மூலையில் தனியாகத்தான் உட்கார வேண்டும். உட்காருவதற்காக வீட்டிலிருந்து ஒரு சாக்குப்பையை எடுத்து செல்வேன். பள்ளியை சுத்தம் செய்யும் வேலைக்காரர் கூட அந்த சாக்குபையை தொடமாட்டார். அதை தொட்டால் அவர் தீட்டாகிவிடுவாராம். ஒவ்வொரு நாளும் அந்த சாக்குபையை நான் வீட்டிற்கு எடுத்துச் சென்றுவிட்டு மறுநாள் பள்ளிக்கு வரும்போது அதை நான் கையில் எடுத்துவர வேண்டும். மற்ற உயர் ஜாதிக்கார மாணவர்கள் தாகம் எடுத்தால் ஆசிரியரிடம்

சொல்லிவிட்டு குழாயைத் திறந்து தண்ணீர் குடித்து தாகத்தை தீர்த்துக் கொள்வார்கள். ஆனால் எனது நிலைமை அப்படியல்ல, நான் அந்த குழாயைத் தொட்டால் தீட்டாகிவிடுமாம். ஆகவே எனக்கு ஆசிரியர் அனுமதி கிடைத்தால் மட்டும் போதாது. உயர் சாதிக்காரர் குழாயைத் திறந்துவிட வேண்டும். பெரும்பாலும் பள்ளியில் வேலை செய்யும் மற்றப் பணியாளர்கள் மட்டும் தான் இதைச் செய்வார்கள். அவர்கள் எங்கேயாவது வேறு வேலையாகச் சென்றுவிட்டால் நான் தாகத்தோடு கிடக்க வேண்டியது தான். என் கண் முன்னே தண்ணீர் இருந்த போதும் என் தாகம் தணிய வாய்ப்பில்லை. சுருங்கச் சொன்னால் வேலையாட்கள் இல்லையென்றால் தண்ணீர் இல்லை என்ற நிலைதான். (தன் இளமைக் காலத்தைப் பற்றி இப்படிக் கூறுகின்ற அம்பேத்கர் தனது 27வது வயதில் நடந்த அனுபவத்தைப் பற்றி கீழ்கண்டவாறு கூறுகிறார்.)

அமெரிக்காவில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நான்கு ஆண்டுகளும், லண்டனில் உள்ள லண்டன் பல்கலைக்கழகத்தில் ஓராண்டும் படித்துவிட்டு, இந்தியாவில் உள்ள பரோடாவிற்கு வந்தேன். இந்தியாவில் ஒரு தீண்டத்தகாதவன் எங்கு சென்றாலும் அது அவனுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு பிரச்சனையாகத் தான் இருக்கும். இரயில் நிலையத்திற்கு வெளியே வந்த போதும் என்னை மிகவும் வாட்டியது ஒரு கேள்விதான். நான் எங்கே போவது? யார் என்னை ஏற்றுக் கொள்வார் கள்? இந்துக்களின் ஹோட்டல் அங்கே இருப்பது எனக்குத் தெரியும். என் சாதியை தெரிந்துக் கொண்டால் அவர்கள் என்னை அனுமதிக்க மாட்டார்கள் என்பதும் எனக்குத் தெரியும். சாதியை மாற்றி சொல்லி இடம் பிடிப்பது தான் ஒரே வழி. ஆனால் நான் அதற்கு தயாராகவில்லை. பிறகு எப்படியோ சாதியைத் தெரிந்து கொண்டால் பெரிய அவமானத்திற்கும், துன்பத்திற்கும் ஆளாக்குவார்கள். ஆகவே அந்த எண்ணத்தை நான் கைவிட்டேன்.

அங்கிருந்த ஒரு வண்டிக்காரரை விசாரித்தேன் அந்த பகுதியில் ஏதாவது வேறு ஹோட்டல் இருக்கிறதா என்று கேட்டேன். அங்கே ஒரு பார்சி ஹோட்டல் இருப்பதாக கை காட்டினார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. காரணம் பார்சி மக்கள் இந்துக்கள் அல்ல. அவர்கள் மதம் தீண்டாமையை ஏற்றுக்கொள்வதில்லை. அந்த நம்பிக்கையில் நான் பார்சி ஹோட்டலுக்குள் சென்றேன். கையில் ஒரு புத்தகத்துடன் அந்த விடுதிக் காப்பாளர் வந்தார். அந்த விடுதி பார்சிகளுக்காக பார்சிகளால் நடத்தப்படும் விடுதி என்பதை நான் அறியவில்லை. பார்சி என்பதற்கு அடையாளமான சத்ராவோ காஸ்தியோ நான் அணியாததைக் கண்ட அந்த விடுதிக்காப்பாளர் நீ யார் என்று கடுமையான குரலில் கேட்டார். நான் ஒரு இந்து என மொட்டையாக சொன்னேன். அந்தக்காப்பாளர் பதறிப்போனார். என்னை அங்கே தங்கக்கூடாது என்று கூறிவிட்டார். அவருடைய பதிலைக் கேட்டு நான் அதிர்ச்சி அடைந்துவிட்டேன். நான் எங்கே போவது என்ற கேள்வி மீண்டும் எனக்கு எழுந்தது. எப்படியோ விடுதிக்காப்பாளரை சமாதானப்படுத்தி அந்த விடுதியில் தங்கிவிட்டேன். காற்றோட்டமில்லாத இருள் மண்டிக்கிடந்த அந்த அறையில் சுமார் பத்து தினங்கள் தங்கியிருந்து பரோடா சமஸ்தானத்தில் ஒப்பந்தப்பபடி என் பணியை செய்து கொண்டிருந்தேன். (பரோடா சமஸ்தானத்தில் அவர் பணிபுரிந்த காலத்தில் தீண்டாமைக் கொடுமையால் அவர் பட்ட அவமானத்தையும். வேதனையையும் வேறோரு இடத்தில் குறிப்பிடுகிறார். பயணியர் விடுதியில் தங்க

ஆரம்பித்த பதினோராவது நாள் காலை உணவு முடித்துக்கொண்டு அலுவலகத்திற்கு புறப்பட்டேன். அந்த சமயத்தில் பலர் என் அறையை நோக்கி வருவது போன்ற காலடி ஓசை கேட்டது. வந்தவர்கள் என் அறையின் முன்னே நின்று கொண்டு அந்த பத்து, பன்னிரெண்டு நபர்களும் கையில் ஆளுக்கொரு கம்புடன் கோபம் கொந்தளிக்க வரிசையாக நின்றுக் கொண்டு நீ யார், ஏன் இங்கே வந்தாய், நீ இந்த பயணிகள் விடுதியை அசுத்தப்படுத்திவிட்டாய் அயோக்கியனே, என்று திட்டினார்கள். அவர்கள் இருந்த கோபத்தில் நான் வார்த்தையைக் கொடுத்தால் என்னைக் கொன்றுவிடுவார்கள். என்னுடைய மௌனமும், பணிவும் அந்த அழிவில் இருந்து என்னைக் காப்பாற்றியது. உடனே காலி செய்ய வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். நான் இன்னும் ஒருவாரம் அனுமதிக்கும்படி அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். அவர்கள் ஆத்திரப்பட்டார்கள். இன்று மாலை 5 மணிக்குள் காலி செய்ய வேண்டுமென்று என்னை எச்சரிக்கை செய்து விட்டு போய் விட்டார்கள்.

பரோடாவில் எனக்கு அறிமுகமான இருவர் இருந்தார்கள். அதில் ஒருவர் இந்து. ஒருவர் கிறிஸ்தவர். நான் உடனடியாக அந்த இந்து நண்பரிடம் சென்று என் நிலைமையை எடுத்துக்கூறினேன். அவர் எனக்கு ஏற்பட்ட பரிதாப நிலையைக் கண்டு மன வேதனைப்பட்டார். இருந்தாலும் அவர் தனது வீட்டில் என்னை தங்கிக்கொள்ள அனுமதிக்கவில்லை. காரணம் நான் அங்கே தங்கிக்கொண்டால் அவர் வீட்டு வேலையாள் எல்லாம் போய்விடுவார்கள் என்று கூறிவிட்டார். அடுத்து எனக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை அந்த கிறிஸ்தவ நண்பர். அவர் கணவன் மனைவி இருவரும் பார்ப்பனராக இருந்து கிறிஸ்தவத்திற்கு மாறினவர்கள். இருந்த போதும் தங்கள் பழமை பழக்கவழக்கங்களை கைவிடவில்லை. அவர் மனைவி தன்வீட்டில் என்னை வைத்துக்கொள்ள அனுமதிக்கவில்லை. மனவேதனையுடன் நகரத்தில் உள்ள பொது பூங்கா ஒன்றில் அமர்ந்து கண்ணீர் வடித்தேன். வேறு வழி இல்லாத நிலையில் புறப்பட்டு எனது சொந்த ஊருக்கு திரும்பினேன். பரோட மன்னருக்கு நான் ஒப்பந்தப்படி பணியாற்ற முடியாமல் போய்விட்டது. இவ்வாறு வேதனைப்படுகிறார். இவ்வளவு தீண்டாமை கொடுமைகளையும் வேதனைகளையும்

**அவர் கணவன் மனைவி இருவரும் பார்ப்பனராக இருந்து கிறிஸ்தவத்திற்கு மாறினவர்கள். இருந்த போதும் தங்கள் பழமை பழக்கவழக்கங்களை கைவிடவில்லை. அவர் மனைவி தன்வீட்டில் என்னை வைத்துக்கொள்ள அனுமதிக்கவில்லை. மனவேதனையுடன் நகரத்தில் உள்ள பொது பூங்கா ஒன்றில் அமர்ந்து கண்ணீர் வடித்தேன்.**

அனுபவித்த அம்பேத்கர் தன் வாழ்நாள் எல்லாம் தீண்டத்தகாத மக்களுக்காக பாடுபாட்டார். இன்று தீண்டப்படாத மக்கள் அடைந்து இருக்கின்ற மாற்றங்களுக்கு எல்லாம் காரணம் அண்ணல் அம்பேத்கர் தான் என்று உலகம் அறியும். இருந்தபோதும் அவர் இறுதி காலத்தில் மன வேதனையோடு தான் காலம் ஆனார். தான் இறப்பதற்கு முன்பு இவ்வாறு தன் உதவியாளரிடம் கூறுகிறார்.

“ ஒடுக்கப்பட்ட

மக்களுக்கு நியை செய்வதற்கு நான் விரும்பினேன். அந்த மக்கள் சரி நிகராக அரசியல் அதிகாரங்களை பங்கிட்டுக் கொண்டு ஆளும் வர்க்கமாக ஆவதை பார்கக விரும்பினேன். என் சொந்த மக்களே என்னை வஞ்சித்து ஏமாற்றமால் இருந்திருந்தால் இந்த என் விருப்பம் நிறைவேறி இருக்கும். என் உழைப்பின் பயன்கள் அனைத்தையும் படித்த ஒரு கூட்டத்தாரே அனுபவிக்க நேர்ந்துவிட்டது. பயனை அனுபவிக்கின்ற அவர்களோ கடைந்தெடுத்த மூடர்களாக உள்ளார்கள். அவர்களில் ஒருவர் கூட சமுதாய பணியாற்ற தயாராக இல்லை. படிப்பறியாத பாமரராய் கிராமப்புறங்களில் பெரும் திரளாக உள்ள என் மக்களுக்காக என் கவனத்தை செலுத்த இப்போது விரும்புகிறேன். ஆனால் என் வாழ்நாட்கள் மிகக் குறுகி விட்டன என தோன்றுகிறது.

இரண்டாவதாக ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்தே யாராவது முன்வந்து என் இயக்கத்தின் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வார் என எதிர்பார்த்தேன். அந்த பெரிய பொறுப்பினை தாங்கிக் கொள்ளக் கூடிய ஒருவரையும் காண முடியவில்லை. அனைவரும் சுயநலம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அற்பத்தனமாக தங்களுக்குள் சண்டையிட்டு கொள்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

மிகச் சிரமப்பட்டு என் மக்களை இப்போதுள்ள நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தியுள்ளேன். தடைகளும் தாழ்வுகளும் இன்னல்களும் ஆயிரம் வந்துற்ற போதிலும் மேலும் மேலும் அவர்கள் முன்னோக்கிச் செல்லட்டும். தன்மானத்துடன் வாழ முன்னேற்ற பாதையில் அவர்களை அழைத்து செல்ல எனக்கு பின்னால் எவரும் இல்லாமல் போனால் எந்த சூழ்நிலையிலும் தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் இருந்து அவர்கள் பின்னோக்கி போய்விடக்கூடாது. நான் மிக முக்கியமென கருதும் கடைசி செய்தி இதுவே. என் மக்களுக்கு இவற்றை சொல்வீராக.”

நெஞ்சை உலுக்கும் இந்த இறுதி உரை ஒரு உயிலைப் போன்றதாகும். கவலையும் கண்ணீருமாக நெஞ்சுருகி கொடுக்கப்பட்ட மரண வாக்குமூலம். இந்த இறுதி உரையை அவர் கொடுக்கும் போது தேம்பி தேம்பி அழுததாகவும் இடையே நிறுத்தி பெருமூச்சு விட்டதாகவும் அடிக்கடி கண்ணீரை துடைத்துக்கொண்டு யோசித்து யோசித்து திக்கித் திணறி இந்த செய்தியை சொன்னதாகவும் அண்ணலின் உதவியாளர் ராட்டு குறிப்பிடுகிறார்.

அண்ணல் அம்பேத்கர் இந்த தேசத்தின் மிகப்பெரிய சக்தியாக விளங்கினார். இந்த தேசத்தின் மதமாகவும் நான்காயிரம் ஆண்டுகளாக இந்தியாவை ஆட்டிவைக்கும் சக்தியாகவும் இருக்கின்ற இந்து மதத்தின் வேத நூலாகிய மனுஸ்மிருதியை தீ வைத்துக் கொளுத்தினார். இந்து கடவுளாகிய ராமனையும் கிருஷ்ணனையும் இழிவு படுத்தினார். அவர்கள் அந்தரங்கங்களை தோலுரித்துக் காட்டினார். இந்திய வரலாற்றிலேயே இந்து மதத்தை விட்டு வெளியேறி லட்சோப லட்ச மக்களோடு வேறு மதத்தில் சேர்ந்த முதல் மனிதர் இவர் தான். அதனால் இந்துக்கள் இவர் மீது வெறுப்புக் கொண்டு இருக்கிறார்கள். இவர் நினைவு நாளான டிசம்பர் 6ல் தாங்கள் எதிரியாக கருதும் இஸ்லாமியர்களின் புனித பள்ளிவாசலான பாபர் மஸ்ஜிதை இடித்தார்கள் என்பதே இதற்கு சான்று.

அண்ணல் அம்பேத்கரின் நோக்கமும் தொண்டும் என்று நிறைவுபெறுகிறதோ அன்று தான் இந்தியாவை ஒரு சுதந்திர நாடாகக் கருத முடியும்.

வாழ்க அம்பேத்கர் புகழும் தொண்டும்

அஸ்ஸலாமு அலைக்கும்.

# இது கலைஞர் ஆட்சியா ? காவல்துறை ஆட்சியா?

குமரி மாவட்டம் நாகர் கோவில் இளங்கடை வெள்ளாட் சிவிளை அருகில் உள்ள ஊர் ஆசாத்நகர். இங்கு ஜாரியத் என்றும் பெண்மணி வாடகை வீட்டில் இருந்து கொண்டு விபச்சார தொழில் நடத்தி வருகிறாள் என்பதன் காரணமாக அவ்வூர் ஜமாத் மற்றும் பொதுமக்கள் இணைந்து அப்பெண்ணை கையும் களவுமாக பிடித்துக் கோட்டார் காவல் நிலைய ஆய்வாளர் திரு. சார்லஸ் அவர்களிடம் ஒப்படைத்தனர். அது மட்டுமின்றி அவள் வீட்டில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த மது பாட்டில்கள், ஆபாச சிடிக்கள், ஆணுறைகளும் காவல்துறையினரி டமும் ஒப்படைக்கப்பட்டன.

காவல்துறை தன் வழக்கம் போல் அங்கு உள்ள பல பண முதலைகளுக்கு அடிமையாகி அந்த விபசாரியை காப்பாற்றி அங்கு அன்பகம் மதரஸாவுக்ககாக ஸக்காத் வசூலிக்க சென்றவர்கள் மற்றும் அத்தகவலை சேகரிக்கச் சென்ற வைகறை வெளிச்சம் பத்திரிகையாளரும் ஃபாரம் ஃபார் ஹீயூமன் ரைட்ஸ் மாவட்டச் செயலாளர் உட்பட 9 அப்பாவி இளைஞர்கள் மீது களவு, மிரட்டல், பொருட்சேதம் போன்ற பொய்யான 7 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து 20 நாட்கள் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தள்ளியது.

இத்துணை ஆதாரங்களை விபச்சாரி ஜாரியத் வீட்டினுள் இருந்து எடுத்தும் இன்றைய தேதிவரை அவள் மீது எந்த ஒரு வழக்கையும் பதிவு செய்யவில்லை சார்லஸ், DSP ஜேசுபரன் போன்ற காவல் அதிகாரிகள். இதன் விரிவான விளக்கம் பார்க்க வைகறை : நவம்பர் 2009. மேலும் ஜாரியத் செய்த விபச்சார புகைப்படங்கள் அவள் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆபாச சாதனங்கள் எல்லாம் ஊர் பொதுமக்கள் கைகளில் இருந்தன. அதுமட்டுமல்லாமல் ஆய்வாளர் சார்லஸ் தலைமையில் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட ஹாரிஸ் என்பவர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று ஜாரியத் மற்றும் அவளது கணவர் ரஹ்மத்துல்லாஹ் வரவழைக்கப்பட்டு அவர்களின் கண்ணெதிரே அவ் இளைஞன் நீ இவளைதானே எங்களிடம் மாட்டிவிட்டாய் என்று கேட்டு கண்மண் தெரியாமல் தாக்கியுள்ளனர். அவர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கும் சார்லஸ் காவல் குழுக்கள் சென்று அவ்இளைஞனை மருத்துவமனையை விட்டு வெளியேறுமாறு மிரட்டியுள்ளனர். இது கலைஞர் அரசா?சர்வாதிகார காவல்துறை ஆட்சியா?

மேலும் நாம் இவ்வழக்கை இப்படியே நிறுத்திவிடவில்லை. Fact Finding Team (உண்மையை கண்டறியும் குழு) என்ற ஐந்து உயர்நீதி மன்ற வழக்கறிஞர்கள் கொண்ட குழுவை நாம் நியமித்து உண்மையை கண்டறியும் நிலையை நாம் செயல்படுத்தினோம். ஆய்வாளர் அவர்கள், DSP, SP, Collector போன்ற எல்லா உயர் அதிகாரிகளையும் சந்தித்து இந்த உண்மை நிலையை அறிந்து அவர்களிடம் எடுத்துரைத்தார்கள். கேள்விகளும் கேட்டார்கள். ஆனால் ஆய்வாளர் சார்லஸ், DSP ஜேசுபரனையும், DSP ஜேசுபரன் ஆய்வாளர் சார்லஸையும் மாறிமாறி கைகாட்டிக் கொண்டு பதில் சொல்லமல் நின்றனர். அது எப்படி பதில் சொல்ல முடியும். இதுதான் பொய் வழக்கு ஆயிற்றே!

அந்த உண்மை கண்டறியும் குழு DSP மற்றும் ஆய்வாளரிடம் கேட்ட சில கேள்விகள்.

1. திருட்டு வழக்கு என்றால் அதை குற்றப்பிரிவு காவல் போலிசாரிடம் மாற்றாமல் (Law & Order) கொண்ட பிரிவில் இருக்கும் நீங்கள் அவ்வழக்கை பதிவு செய்து அந்த 9 பேரை கைது செய்தது ஏன்?

2. சம்பவம் நடந்தபோது கையும் களவுமாக பிடித்துள்ளேன் என்கின்றீர்கள். 18,000/– ரூபாய் களவு செய்துள்ளார்கள் என்கின்றீர்கள். அந்த 18,000/– ரூபாய் எங்கே? அது உங்கள் கையில் வந்தால்தானே திருட்டு நடந்துள்ளது என்று முடிவு செய்ய முடியும்.

3. டி.வி. பிரிட்ஜ் போன்ற பொருட்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளது என்றால், கைப்பற்றுதல் (Recovery ) மூலம் என் சேதப்படுத்தப்பட்ட பொருட்களை கைப்பற்றப்படவில்லை.

4. உடலிலும், முதுகிலும் மாறி மாறி அடித்தார்கள் என்று மட்டும் புகார் இருக்கும் போது வெட்டுக்காயங்கள், குத்து காயங்களுக்கே அதிக பட்சம் 3 அல்லது 4 நாட்களுக்கு மேல் உள் நோயாளியாக இருப்பதை அனுமதிக்காத அரசு மருத்துவமனை நிர்வாகம், காயங்களே இல்லாத நிலையில் தலைவலிக்கு மருத்துவ சிகிச்சை என்ற பெயரில் சுமார் 5 நாட்களாக ஜாரியத்தை உள் நோயாளியாக நாகர்கோவில் அரசு மருத்துவமனையில் தங்கவைத்தது ஏன்?

5. முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யும் போது, சேர்க்கப்படாத TNPPDL Act–ன் பிரிவு 3(1) ஏன் இரண்டு நாளைக்கு முன்னர் FIR–ஐ திருத்தி சேர்த்தனர்.

இப்படி சில கேள்விகள் அவர்களிடம் அந்த குழுக்கள் கேட்டதும் அவர்கள் பதில்

சொல்லமுடியாமல் திகைத்து நின்றனர் ஆகா மாட்டிக் கொண்டோம் என்று.

அது மட்டுமல்லாமல் நாம் இந்த குழுவின் விசாரணை விபரங்களையும், ஜாரியத் விபச்சார புகைப்படங்களையும் அவள்மீது விபச்சார வழக்கு தொடரச் சொல்லியும், ஆய்வாளர் சார்லஸ் தில்லுமுல்லுகளை இணைத்து CBCID விசாரணை கோரி மதுரை தென்மண்டல DIG–க்கும், DGP–க்கும் இத்தகவலை அனுப்பி வைத்தோம். அவர்களிடம் இருந்து நாம் இதைப் பெற்றுக் கொண்டோம் என்று Acknowledge Card எங்களிடம் வந்து சேர்ந்தது. இன்ஷா அல்லாஹ் அவ்விசாரணையை எதிர்பார்ப்போம்.

இப்போது விஷயம் என்னவென்றால் இவர்கள் இவ்வளவு பெரிய அநியாயம் செய்துள்ளனர். அந்த 9 இளைஞர்களும் 20 நாட்கள் சிறை அனுபவித்து வந்துள்ளார்கள். ஆய்வாளர் சார்லஸ் மற்றும் அவரது குழுக்கள் இளங்கடையை சார்ந்த ஒரு சில பொதுமக்கள் மட்டும் ஒரு சில போலிஸ் இன்ஃபார்மர்களை பயன்படுத்தி அந்த 9 இளைஞர்களையும் சந்தித்து, என் மீது (சார்லஸ் மீது) எந்த பிரைவேட் வழக்கும் போட்டுவிட வேண்டாம். நான் வழக்கை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல மாட்டேன். என்னை மாட்டிவிட்டுவிட வேண்டாம் என்பதாகக் கேட்டுவரச் சொல்லியுள்ளார். மேலும் 28.03.2010 அன்று ஒரு காவலர் ராஜபாண்டியன், மஃப்டியில் அந்த 9 இளைஞர் வீடுகளுக்குச் சென்று ஒரு Printout copy–யை வைத்துக்கொண்டு அவ்வீட்டுப் பெண்களிடம் உங்கள் பையன் எங்கே நான் கோட்டார் காவல் நிலையத்தில் இருந்து வந்துள்ளேன். எங்களை ஆய்வாளர் சார்லஸ் அனுப்பி வைத்தார். இந்த தாளில் ஒரு கையெழுத்து இட்டு தரச் சொல்லுங்கள். இவ்வழக்கை நாம் சுமூகமாக முடித்துக் கொள்வோம். இல்லையென்றால் உங்கள் பையனை இந்த வழக்கிற்காக மூன்று அல்லது நான்கு வருடங்கள் அலைத்து விடுவோம் என்று மிரட்டி சென்றுள்ளார்கள். அவ்வீட்டு பெண்மணிகள் பீதியில் உறைந்துள்ளார்கள். அவ்வூர் பகுதி மக்கள் பரபரப்பாக உள்ளனர்.

**நாங்கள் கேட்கிறோம்.** காவல்துறையினர் ஒருவன் முஸ்லிம் என்றால் பொய் வழக்கும் போடுவார்கள், குற்றவாளிகளை தப்பிக்க வைக்கவும் செய்வார்கள், அவர்கள் பண முதலாளிகளுக்கு விசுவாசியாக நடந்து கொள்வார்கள். தப்பிக்கவிட்ட குற்றவாளிகளை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து வழக்கில் உள்ள இளைஞர்களை அடித்து உதைப்பார்கள். வீட்டில் இருக்கும் பெற்றோர்களை வந்து அணுகி கையெழுத்து கேட்டு மிரட்டுவார்கள். FIR போட்டு இரண்டு நாளைக்குப் பிறகு பிணை (Bail) கிடைக்கும் போது கூடுதலாக பொய்யான TNPPDL என்ற Act–ஐ சேர்ப்பார்கள். தான் இப்படி ஒரு பொய் வழக்கைப் போட்டு Award வாங்கிய பிறகு தான் மாட்டிக்கொள்ளக்கூடாது என்று பல தூதுகளை அனுப்பி தன்னை காக்க முயல்வார்கள். இது என்ன கலைஞர் ஆட்சி நடக்கிறதா? இல்லை காவல்துறை ஆட்சி நடக்கிறதா? கலைஞர் நம் மீது நடவடிக்கை எடுக்கமாட்டார் என காவல்துறை நம்புகிறதா?

அன்பு சமுதாய மக்களே, இதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட கலைஞர் ஆட்சியில் பல அத்துமீறல் நடத்தும் காவல்துறையினரை நாம் ஒரு போது மறக்கக்கூடாது.

ஏன் 2006–ல் கோவையில் தானே வெடிகு1ண்டு செய்து அதை முஸ்லீம் சமுதாயத்தின் மீது போட்டு மாட்டிக் கொண்ட SIV என்ற காவல்துறை பிரிவின் DSP ரத்தின சபாபதியை நாம் இதுபோன்ற ஒரு Fact Finding Team நியமித்து நாம் அப்போது இருந்த இதே கலைஞர் அரசுக்கு கையும் களவுமாக வெளிச்சம் போட்டு காண்பித்தோம். ஆனால் அப்போது இருந்த அந்த கலைஞர் அரசு நியாயமாக நடந்து ரத்தின சபாபதிக்கு இடைகளை (Suspend) செய்தது என்பதையும் நாம் நினைவு கூறுகிறோம்.

எந்த தவறையும் செய்யாமல் ரமலான் மாதம் 20 நாட்கள் சிறை வாழ்க்கையை அனுபவித்து வந்த அந்த 9 இளைஞர்களிடமும் இந்த காவல்துறையினர் சமாதானத்திற்கு வா என்று மிரட்டுகிறார்களே. இப்படி இந்த சமாதான உடன்படிக்கைக்கு வந்தால், துரோகம் செய்த அந்த காவல் துறையினருக்கு அதே 20 நாள் சிறைதண்டனை வழங்குமா? இல்லை பணி நீக்கம் செய்யுமா? (Dismiss) நியாயமான இந்த தண்டனையை வழங்கட்டும் அரசு. பின் பார்ப்போம் இன்ஷா அல்லாஹ். ***–ந.நி***


வெளிவந்த இரண்டே வாரங்களில் முதல் பதிப்பின் பிரதிகள் விற்று தீர்ந்த

தற்போது பரபரப்பான விற்பனையில் உள்ள

தமிழில்....

**கர்கரேயை கொலை செய்தது யார்?**

இரண்டாம் பதிப்பு,

வாங்கி விட்டீர்களா?

தொடர்புக்கு

**வேர்கள் வெளியீட்டகம்.**

**044-45566909**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

சர்வீஸ்
விமான டிக்கெட்
விசிட் விசா
குவைத், புருனை,
ஸ்டாம்பிங்
டூர் பேக்கேஜ்

பயண உலகில் சிறந்த வழிகாட்டி

# ஏரோ வைடு டிராவல்ஸ்

சவுதி விசா வைத்திருப்பவர்கள் கவனத்திற்கு

SAUDI WAKALA CARD
بطاقة الوكالة السعودية

رسنا إنتربرائزز

المعترف لدى حكومة الهند وزارة الشؤون الخارجية
رقم التسجيل: ايه ٠٣١٠/موم/٣٠٠/٤ ٣/٤/٧٨٧٠/٢٠٠٦

* Saudi Arabian Consulate, Mumbai accept wakkalah from any Recruitments office.

**RASNA ENTERPRISES**
GOVERNMENT OF INDIA,
MINISTRY OF LABOUR
REGD.CERTIFICATE NO.
A0310/MUM/PER/300/4 3/4/7870/2006

எங்கள் வக்கலாவில் சிறந்த முறையில் சர்வீஸ் செய்து அனுப்புகிறோம்!

தலைமை அலுவலகம் :

எண் 6, முதல் மாடி, சிந்தூர் பிளாஸா, 42, மாண்டியத் ரோடு, எழும்பூர், சென்னை-8.
தொலைபேசி : +91 44 42148723 / 42146552

கிளைகள் :

மயிலாடுதுறை
3/43, வண்டிக்கார தெரு,
மயிலாடுதுறை-1.
தொலைபேசி : 04364-225780/225740
தொலைநகல் : 0091 4364 242100

கூத்தாநல்லூர் - லட்சுமாங்குடி
1, முதல் மாடி, எம்.ஜி.காம்ப்ளக்ஸ்,
திருவாரூர் மெயின்ரோடு.
தொலைபேசி : 04367-230341
இ.மெயில் : aerowidetravel@yahoo.com

# கர்கரேயை கொலை செய்தது யார்?


## தொடர் -3

அவ்வழக்கின் விசாரணை பாதியிலிருந்த போது 26/11 மும்பை தீவிரவாத தாக்குதல் நடைபெற்றது, ஹேமந்த் கர்கரே நடத்திய விசாரணையும் அப்படியே தடைபட்டது. இதில் ஹேமந்த் கர்கரே சந்தேகத்திற்கிடமான முறையில் கொல்லப்பட்டார். மும்பை தீவிரவாதத் தாக்குதலை சுலபமாக தவிர்த்திருக்க முடியும். ஆனால் வேண்டுமென்று விருப்பத்துடன் ஐகூ என்ற மத்திய உளவுத்துறை தங்களுக்குக் கிடைத்த முக்கியமான தகவல்களை தவிர்த்து இருட்டடிப்பு செய்தது.

ஐகூ என்ற மத்திய உளவுத்துறையின் இந்த தவறுதலான நோக்கம் மிகுந்த சர்ச்சைக்குரிய வகுப்புவாதக் கறை படிந்திருந்த மு.ஞு. ரகுவான்ஷியை ஏ.டி.எஸ்.-ன் தலைவராக்கியதன் மூலமும் (அதுவும் கர்கரே இறந்த சிலமணி நேரங்களில்) ஐகூ என்ற மத்திய உளவுத்துறையின் அதிகப்படியான உற்சாகத்தின் மூலமும், சி.எஸ்.டி.-காமா ரங்கபவன் தாக்குதலின் முக்கிய குற்றவாளியின் மூலமும் உறுதியானது. இது ரகுவன்ஷியை இந்த வழக்கை நேரிடையாக எடுத்துக் கொள்ளவும் அதை அவசர அவசரமாக முடிக்கவும், வெளிநாட்டு நிறுவனமான குகூஐ-யின் உதவியை பெறவும் வழிவகை செய்தது.

இப்புத்தகத்தில் நான் மேலே சொன்னவற்றை நிகழ்வுகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தி இருக்கிறேன். பத்திரிக்கைகளில் வந்த செய்திகள் மற்றும் இதரத் தகவல்களின் அடிப்படையில் நான் எடுத்த என் சொந்தத் தர்க்க அடிப்படையிலான முடிவின் படி தெளிவான உண்மையென்னவெனில் ***ஒவ்வொரு குண்டு வெடிப்பிற்குப் பிறகு நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்ட பின்பும் நிற்காத குண்டு வெடிப்புகள் 2008 மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் உண்மைக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட பின்பு நின்றது.***

மக்கள் இந்த புத்தகத்தை எப்படி உள்வாங்கிக் கொள்ளப் போகிறார்கள் என்பது எனக்கு தெரியவில்லை. குறிப்பாக 26/11 குண்டுவெடிப்பு பற்றிய பகுதியை. ஏனெனில் மக்கள் இந்த தாக்குதல் நடந்ததிலிருந்து கடந்த 9 மாதங்களாக இதைப்பற்றி தவறாகப் புனையப்பட்ட செய்திகளின் தாக்கத்திற்கு




உள்ளாகி வருகிறார்கள். அதுவும் குறிப்பாக ஊளுகூ-ஊஹஆஹ ரங்கபவன் சந்து தாக்குதல் (மும்பை தாக்குதலின் ஒரு பகுதி) பற்றி ஐகூ என்ற மத்திய உளவுத்துறை, மும்பை குற்றப்பிரிவு (ஊசுஐஆநு கூசுஹஊழ) மற்றும் மீடியாக்கள் தரும் தகவல்கள் இவற்றின் தாக்கத்திற்கு உள்ளாகி வருகிறார்கள்.

இந்த புத்தகத்தைக் கவனமாக படிப்பீர்களென்றால் போலீசாரின் வார்த்தைகளை விட என்னுடைய வார்த்தைகளில் உள்ள அதிகமதிகமான உண்மைகள் உங்களுக்கு தெளிவாக புரியும். எந்த விதமான ஆய்வுமில்லாமல் இவற்றை நீங்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் நிர்பந்திக்கவில்லை. என்னுடைய விருப்பமெல்லாம் இந்த புது உண்மைகளின் வெளிச்சத்தில்

**இதன் தொடர்ச்சி 62ம் பக்கத்தில்.....**

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# அல் ஹரமைன் ஹஜ் சர்வீஸ் (பி) லிட்

சார்பில்

ஆடுதுறை தியாகி அப்துல் அஜீஸ் நினைவு சமூக நலன் மற்றும் கல்வி விழிப்புணர்வு

**தியாகிகள் மையம் நடத்தும்**

# அறிவுத்திறன் போட்டிகள்

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

அல்லாஹ்வின் மாபெருங் கருணையினால் எங்களது நிறுவனம் மற்றும் அதனைச் சார்ந்த தியாகிகள் மையத்தின் சார்பாக பல்வேறு சமூக நலப் பணிகள் ஆற்றிவருவதன் தொடர்ச்சியாக இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 09-05-2010 அன்று எங்களது சென்னை தலைமையக புதிய அலுவலகத் திறப்பு மற்றும் அல் ஹரமைன் ஹஜ் சர்வீஸ் (பி) லிட் நிறுவனத்தின் 18ம் ஆண்டு துவக்க நிகழ்வை முன்னிட்டு எதிர்கால இந்தியாவை நிர்மானிக்க இருக்கும் இளைஞர்களை - மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்களது அறிவுத் திறனை வெளிக்கொணரும் வகையில் கட்டுரைப்போட்டி உள்ளிட்ட போட்டிகள் நடத்தி பரிசளிக்கும் விதமாகவும் இளைஞர்களை கல்வி கற்கத் தூண்டி அறிவு ஜீவிகள் நிறைந்த ஒரு சமுதாயமாக நம்முடைய சமூகம் உயர பாடுபடும் சமூக நல ஊழியர்கள் மற்றும் அமைப்புகளைத் தேர்வு செய்து கௌரவிக்கும் விதத்திலும் எங்களது **தியாகிகள் மையத்தின்** சார்பில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்துள்ளோம்.

சமுதாயப் பெருமக்கள் அதிகமாணவர்களை இப்போட்டியில் பங்குபெறச் செய்வதுடன் தங்கள் பகுதியில் சிறப்பான முறையில் கல்விப்பணி ஆற்றிவரும் சமூக நல ஊழியர்கள் மற்றும் அமைப்புகள் பற்றிய விபரங்களை எங்களுக்கு அனுப்பிவைத்து இப்பணி மென்மேலும் தொடர எல்லாம்வல்ல இறைவனிடம் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**போட்டி விபரம்**

| | | |
|---|---|---|
| கட்டுரைப் போட்டி தலைப்பு | : | **பெரும் புரட்சியாளர் பெருமானார்**<br>**(அல்லது)**<br>**நம் தியாகத்தால் கிடைத்தது நாட்டுக்கு சுதந்திரம் சும்மா கிடைக்குமோ ஆட்சி, அதிகாரம்.**<br>**- ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஓர் ஆய்வு** |
| கலந்து கொள்ளத் தகுதி | : | மாணவர்கள் மற்றும் 40 வயதிற்குட்பட்ட அனைவரும். |
| அளவு | : | A4 அளவுத் தாளில் ஒருபக்கத்தில் மட்டும் டைப் செய்து ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் |
| தியாகிகள் மையத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | : | **30.04.2010** |
| பரிசு | : | நடுவர் குழுவால் தேர்வு செய்யப்படும் சிறந்த மூன்று கட்டுரைகளுக்கு தலா ரூ.5000/- மற்றும் ஆறுதல் பரிசுகள். |

முகவரி

தியாகிகள் மையம்
எண்.10, (பழைய எண்.73)
தாதா முத்தியப்பன் தெரு, (பிராட்வே)
பிளாட் எண்.5, முதல்தளம்,
கொத்தவால் சாவடி காவல்நிலையம் எதிரில், ஜார்ஜ் டவுன்.
சென்னை-600 001. போன் : 044 - 42165352

அன்புடன் அழைக்கும்

அ. முகம்மது இக்பால், B.A.B.L.,
தியாகிகள் மைய இயக்குனர்

# இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இலட்சிய ஓட்டத்தில் தன்னைத் தந்த மழவர்கள்!

**சென்ற இதழ் தொடர்ச்சி.....**

ஹிதாயத்துல்லாவின் கடன் அடைய பெருமளவில் உதவியது எனது குடும்பத்தினர், தம்பி ரவூஃப்– இன் குடும்பத்தினர். அன்று எங்களோடு நின்ற அனைவருக்கும் அல்லாஹ் நிரம்ப நற்கூலிகளை நல்கிடுவானாக!

அன்று முதல் அறிவகமே எனக்கு எல்லாம் என்று தான் ஆசிரியர் அவர்கள் தன் வாழ்நாளை அமைத்துக் கொண்டார்கள்.

அறிவகத்தில் மட்டுமல்ல இஸ்லாத் தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் அவர்கள் காட்டிய ஆர்வம் அளவிடற்கரியது.

முதல் முதலில் தனது ஊரில் ஓலைக் குடிசையாக ஒரு பள்ளி வாசலை அமைப்பதில் வெற்றி கண்டார்கள் ஆசிரியர் அவர்கள். இதற்கு முத்துதேவன் பட்டியைச் சார்ந்த சலீம் சாஹிப் ஆகியோர் பெருமளவில் உதவியாக இருந்தார்க.ள

பின்னர் அதனை நிலையான கட்டடங்களைக் கொண்ட ஒரு முழு பள்ளிவாசலாக மாற்றினர். அதற்காக வும் அயராது உழைத்தார்கள். இராத்துப் பேட்டை மூரா மௌலானா அவர்கள் இந்த வகையில் அந்தப் பகுதியில் பல பள்ளிவாசல்கள் அமைந்திட காரணமாக இருந்தார்கள்.

இதனிடையே அறிவகத்தை நிலைபெற செய்திடவும் அதற்கான கட்டுமான பணிகளுக்கு உதவிடவும் வெளிநாட்டுப் பயணம் ஒன்றையும் மேற்கொள்ளும் வாய்ப்புகள் கிடைத்த போது அதனையும் வாஞ்சையுடன் ஆசிரியர் அவர்கள் மேற்கொண் டார்கள்.

வெளிநாட்டுப் பயணத்தின் போது அவர்கள் ஆற்றிய உரைகள் அனைவரையும் வெகுவாகக் கவர்ந்த கதையை, அவர்கள் ஆற்றிய உரைகளை வெளிநாட்டிலிருந்த வண்ணம் நமக்கு சொன்னார்கள். நாம் மிகவும் மகிழ்ச்சியடைவோம்.

ஆசிரியருக்கு வெளிநாட்டுப் பயணம் புதிது. அதற்காக அவர்களுக்கு நாங்கள் வாங்கி தந்த ஆடைகளை அணிவித்த போது ஆசிரியர் அவர்கள், எடுத்த புகைப்படங்களைப் பார்த்து புளகாங்கிதமடைந்ததோம். இதில் எங்களைப் போல் அவர்களுடைய குடும்பத்தவர்களும் மகிழ்ச்சியடைந் தார்கள்.

எங்கோ இருந்த என்னை எங்கோ அனுப்பிவிட்டீர்கள் என்று அவர்கள் சொல்லி தனது நன்றிப் பெருக்கினை காட்டிக் கொண்டார்கள். இந்தப் பணிக்குத் தேவைப்பட்டால் வெளிநாடு செல்வோம் என்ற எங்களது விருப்பத்தை நிறைவு செய்தோம்.

ஆனால்! வெளிநாடு சென்று வந்த செய்தியை யாரோ அரசாங்கத்திற்குச் சொல்லி விட்டார்கள். ஆசிரியர் அவர்கள் பணி செய்த அரசுபள்ளியின் தலைமையாசிரியர் வழி ஓர் விசாரணைக்கு அரசு உத்தரவிட்டு விட்டது. எங்கள் இஸ்லாமியச் சேவையை தடை செய்திட சிலர் செய்த சதி.

ஆசிரியர் பணியைப் பிடிங்கிடலாம். அத்தோடு வேறு சில நடவடிக்கை களையும் எடுக்கலாம் என்ற சூழல் உருவாயிற்று. சதிகாரர்களின் சூழ்ச்சி அரங்கேறிடும் நிலை.

ஆசிரியர் அமைதியானவர் வெகுண்டால் ஊர் தாங்காது. அதே போல் அவர் சோதனைகளில் மிகவும் உறுதியாக நிற்பார். அறிவுபூர்வமாக எந்தச் சூழலையும் எதிர்கொள்வார் வெற்றி பெறுவார். அப்படித்தான் இந்தச் சூழலையும் வென்றார்.

எந்தச் சூழலில் எது வந்தாலும் வெற்றி பெற்றிடலாம் (அல்லாஹ்வின் உதவியுடன்) அதையும் மீறி இழப்புகள் வந்தால் அல்லாஹ்வுக்காக அதையும் எதிர் கொள்வோம். ஏற்றுக் கொள்வோம்! அசையாமல், ஆட்டங் கண்டிடாமல் நமது இலக்கை நோக்கிப் பயணிப்போம் என்று நாங்கள் உறுதி பூண்டிருந்தோம்.

அதை வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் செயலில் காட்டி இருக்கின்றோம். ஆசிரியர் அவர்களும் அதே உறுதியை அனைத்து வகையிலும் காட்டி இருக்கின்றார்கள். அதே போல் வெளிநாடு சென்றதால் வேலைக்கு ஆபத்து வந்த போதும் நடந்து கொண்டார்கள்.

அரசின் ஆசிரியர் பணி, வெளிநாட்டுப் பயணம் இவை பற்றி விதிகளை நானும் ஆசிரியரும் ஆய்வு செய்தோம்.

சட்டம் சற்று ஓட்டையானதாகவும் சில விதிகள் எங்களுக்கு உதவி செய்வதாகவுமிருந்தன.

அத்தனையும் பயன்படுத்தி அரசின் விசாரணை அதனைத் தொடர்ந்து ஆசிரியர் பணியிலிருந்து ஆசிரியரைப் பிடுங்கி வீசிடும் ஆபத்து, இவற்றிலி ருந்து ஆசிரியரை காப்பாற்றினோம். இல்லை தப்பித்தோம் – அல்லாஹ் ஒருவனுக்கே எல்லாப் புகழும்.

இதில் ஆசிரியரின் உறவினர்கள் சிலரும் ஆசிரியருக்கு உதவி செய்தார்கள். உறுதுணையாக நின்றார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியர் அவர்கள் – இந்தப் பிரச்சினையிலிருந்து முற்றாக விடுபடும் வரை உறுதியுடனும் முழு மூச்சுடனும் உழைத்தார்கள்.

இதே போல் பல சூழல்களிலும் ஆசிரியர் அவர்களை நான் மிகவும் உன்னிப்பாகக் கவனித்திருக்கிறேன். அவர் வெல்ல வேண்டும் என்று இறங்கியவற்றில் எப்போதும் தோற்றதில்லை. அல்ஹம்து லில்லாஹ்.

நாங்கள் ஓர் அணியாக இந்த தாஃவா பணிகளை செய்து கொண்டிருந்தபோது தான் தவிர்க்க வியலாத விளைவாக இந்துத்துவ பாசிஸ்ட்டுகளை எதிர்கொண்டிட வேண்டியது வந்தது.

இதற்காக நான் சிலபல நடவடிக்கைகளை மேற்கொண்டேன். இந்தப் பணிகள் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியை விரைந்து செய்ததால் எதிர்விளைவே எதிர்ப்பட்டது. உண்மையைச் சொன்னால் எதிர்ப்புகள், ஜாஹிலியாவிடமிருந்து.

இந்தப் பணியிலும் இன்று ஆபத்துக்கள் எப்போது வேண்டுமானாலும் நம்மை சூழலாம் என்ற உயிரை துச்சமென மதிக்கும் பணியிலும் ஆசிரியரை இணையச் சொன்னேன். சற்றும் தயங்காமல் இணைந்தார்.

பின்னர் அடுக்கடுக்கான சோதனைகள் அனைத்திலும் உறுதியாக உடன் நின்றார். உறுதுணையாக நின்றார் என்பது வெறும் சொல்லாட்சி அல்ல. பின்னர் அவர் உறுதுணையாக நின்ற நிகழ்வுகளைப் பதிக்கின்றேன். அப்போது மட்டுமே இந்தச் சொற்றொடர் முழு அழகையும், ஆழத்தையும் வெளிப்படுத்தும்.

உளவுத்துறையும், காவல் துறையும், காவல் துறையினர் பத்திரிகைகளில் இடம் பெறச் செய்திட்ட கட்டுரைகளும் அறிவகம் ‘‘தீவிரவாதம்’’ என்றே சுற்றித் சுற்றி வந்தன. அறிவகத்தைத் தீவிரவாதத்தோடு எப்படியாவது இணைத்திட வேண்டும் என்பதே உளவுத்துறையின் இலக்கு.

அறிவகத்தை ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்களின் மேற்பார்வையின் கீழ்தான் விட்டிருந்தோம். ஆகவே ஆசிரியரை முடக்கிப் போட்டுவிட்டால், அறிவகம் முடங்கிப் போகும். அதைச் சுற்றி நடக்கும் தாஃவா பணிகளும் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணிகளும் முடங்கிப் போகும் எனத் திட்டமிட்டனர்.

ஆசிரியரின் வீட்டை ரெய்டு என்ற சோதனைக்கு உள்ளாக்கினார்கள்.

இதில் மிகப்பெரிய கொடுமை என்னவெனில் ஒரு பெருநாளின் போது ஆசிரியரின் வீட்டை சோதனை என்ற பெயரில் கபளீகரப்படுத்தினார்கள். இவற்றிற்கு எதிராக நாங்கள் நடவடிக்கைகளை எடுத்தோம். அதில் வெற்றியும் பெற்றோம். (அல்ஹம்துலில்லாஹ்).

ஆனால் எந்தக் காரணமுமின்றி ஆசிரியரின் பெருநாளைப் பாழ்படுத்தி அக்கம் பக்கத்தில் அவரை ஒரு தீவிரவாதியைப் போல் சித்திரித்து விட்டார்கள்.

ஆசிரியரின் முத்துதேவன் பட்டி வீட்டை சோதனைச் செய்யும் போதெல்லாம், இன்னொரு செய்தியும் அந்தக் கிராமத்தை சூழ்ந்திடும். அது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் இப்படியெல்லாம் காவல்துறையின் கெடுபிடிகளை எதிர்கொண்டிட வேண்டியது வரும் என்பதே! இதனால் அவர்கள் இஸ்லாத்தை ஏற்பதற்கு அஞ்சுவார்கள்.

காவல்துறையினர் இன்னொன்றையும் செய்தார்கள். அது, ஆசிரியரின் வீட்டில் இருந்த புத்தகங்கள் கோழி அறுக்க வைத்திருந்த அரிவாள்கள் எல்லாவற்றையும் எடுத்துச் சென்று விட்டார்கள்.

அதன் பின்னர் விசாரணை என்ற பெயரில் ஆசிரியரையும் அழைத்துச் சென்றார்கள்.

விசாரணையில், ஆசிரியரின் மகன் அபூபக்கர் எழுதிய கவிதை ஒன்றை கையில் வைத்துக் கொண்டு விளக்கம் கேட்டிருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் பணிபுரியும், தமிழ் அதிகாரிகளுக்கு தமிழன் எழுதிய கவிதைப் புரியவில்லையென்றால் தமிழை திரும்பப் படியுங்கள். பள்ளிக்கூடம் செல்ல வேண்டியவர்கள் அதிகாரிகளாக ஆனது சங்கடமானது தமிழர்களின் நிலை இது! எனத் தன் ஆதங்கத்தையே பதிலாகத் தந்தார்கள் ஆசிரியர் அவர்கள்.

அடுத்து வீட்டில் அரிவாள் ஏன் வைத்திருக்கின்றீர்கள் என்றொரு பெரிய வினாவை வீசி இருக்கின்றார்கள். அதற்கு ஆசிரியர், ‘கோழி அறுக்க’ எனப் பதில் சொல்லி இருக்கிறார்கள்.

சிறிது காலம் கழித்து வீட்டிலிருந்து எடுத்துச் சென்ற எல்லாப் பொருள்களையும் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள்.

அரிவாள்களைத் தரவில்லை.

கேட்டிருக்கின்றார் ஆசிரியர். அதைத் தரமாட்டோம் என ஆணவமாகப் பதில் சொல்லிவிட்டார்கள்.

சரி உங்கள் வீட்டில் கோழியறுக்க வைத்துக் கொள்ளுங்கள். நான் சந்தையில் வாங்கிக் கொள்கிறேன் எனக் கூறி அவ்விடம் விட்டு அகன்று விட்டார்கள் ஆசிரியர் அவர்கள்.

தனியாக நானும் ஆசிரியர் அவர்களும் பேசிக் கொள்ளும் போதெல்லாம் இருவர் வீட்டிலும் நடந்த ரெய்டுகளை நினைவு கூறுவோம். அப்போதெல்லாம் நாங்கள் இரண்டு கோழி அறுக்க இரண்டு அரிவாள் வைத்திருந்த கதையைச் சொல்லி வாய்விட்டுச்

சிரித்திருக்கின்றோம்.

அது என்ன கதை? என்றால் அது காவல்துறையில் அரங்கேறிய அற்புதக் கவிதை எழுதியவனுக்கே வெளிச்சம் என்பார்.

இப்படி நாங்கள் சந்தித்த சோதனை எங்களைப் பின்னாளில் களிப்பிலும் ஆழ்த்திடும் என்பதை நாங்கள் கனவிலும் நினைத்ததில்லை!

அதே போலவே 'தாஃவா' சுற்று பயணம் என்றொன்றையும் செய்தோம். ஒரு காரில் அல்லது வேனில் இஸ்லாத்தை நன்றாகத் தெரிந்தவர்கள் கிராமங்கள் தோறும் பயணம் செய்து மக்களை இஸ்லாத்தை ஏற்றிட அழைப்பார்கள். இந்தப் பணியினை செய்பவர்களை ஒன்றாய் ஓரிடத்தில் அமரச் செய்து மாதந்தோறும் ஓர் ஆய்விற்கும் ஏற்பாடு செய்தேன்.

இந்தச் சந்திப்புகள் பிற்றை நாள்களில் மாதந்தோறும் நடைபெற்றன. நானே நடத்தினேன். தொடர்ந்து வந்த இயக்கப்பணிகள் என்னை அழுத்தியதால் இந்தக் கூட்டங்களை ஆசிரியர் அவர்களின் தலைமையிலேயே நடக்க விட்டுவிட்டேன். தொடர்ந்து ஆசிரியர் அவர்களே நடத்தினார். மாதம் ஐந்து பயணங்கள் எனப் பயணங்களை மேற்கொண்டார்கள். இதில் எவ்வளவு வேகமாகப் பணியாற்றிட இயலுமோ அவ்வளவு வேமாகப் பணியாற்றினார்கள்.

**தமிழகத்தில் இஸ்லாமிய பிரச்சாரத்திற்கு தடை**

தொடக்க நாள்களில் நாங்கள் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணிகளுக்காகச் சென்றால் குறிப்பாக தலித் பெருங்குடி மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்றால் அன்புடனும் உற்சாகத்துடனும் வரவேற்பார்கள்.

நீங்கள் எங்களைத் தேடி வந்து இஸ்லாத்தின் பக்கம் அழைப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது என்று கூறி பெருமைப்படுவார்கள். நம்மை உற்சாகப்படுத்துவார்கள்.

ஆனால் பிந்தைய நாள்களில் "ஃபாசிஸ்டுகள் தங்கள் ஏஜண்டுகளை உள்ளே புகுத்திவிட்டார்கள்". இதனால் எதிர்ப்புகளை எதிர்கொண்டாக வேண்டிய கட்டாயநிலை. இதில் ஆசிரியர் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்திடச் சென்ற இடங்களில் பலர் குடித்துவிட்டு பயங்கர கபளீகரங்களைச் செய்தார்கள்.

இதுபோன்ற சூழ்நிலைகளை மிகவும் பொறுமையாக எதிர் கொள்வதில் ஆசிரியருக்கு நிகர், ஆசிரியரே!

இறுதியில் குடித்துவிட்டு வழிமறித்தவனும் மன்னிப்புக் கேட்ட வரலாறுகள் உண்டு.

அதே போல் ஒரு முறை தேவர்கள் ஆசிரியரை கத்தி அரிவாளோடு சுற்றி வளைத்துக் கொண்டார்கள். தகாத சொற்களையும் உமிழ்ந்து விட்டார்கள். அவர்களையும் எதிர்கொண்டார்கள். இஸ்லாத்தை எடுத்துச் சொன்னார்கள்.

பொறுமையோடு அவற்றை – அவர்களின் செயல்களைப் புறந்தள்ளிவிட்டு – அங்கேயும் தான் சென்ற பணியை முடித்து விட்டே வந்தார்கள். ஆசிரியர் அவர்கள்.

தாஃவா சுற்றுப்பயணங்களை மேற்கொண்டதால் ஒரு முறை காவல்துறையினர் சுற்றுப் பயணத்திற்குப் பயன்படுத்திய வேனோடு உடனிருந்தவர்களையும் காவல் நிலையம் அழைத்துச் சென்றார்கள். அவர்களையும் எதிர்கொண்டு தங்கள் பணி முடித்துத் திரும்பினர்கள்.

இந்நிலையில் நான் பணியாற்றிக் கொண்டிருந்த பணியிலிருந்து என்னை பணி நீக்கம் செய்தார்கள். குடியரசு தலைவர் – இதற்கான காரணம் சொல்லமாட்டேன் எனக் கூறி தனக்கிருந்த சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இருந்தார். நான் மத்திய அரசில் பணியாற்றிக் கொண்டிருந்த தால் குடியரசு தலைவர் தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இருந்தார்.

ஆசிரியர் அவர்கள் மாநில அரசில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இதே சிறப்பதிகாரம் மாநில கவர்னருக்கும் உண்டு. அதைப் பயன்படுத்தி அவர் மாநில அரசில் பணி செய்பவர்களை பணி நீக்கம் செய்யலாம். ஆகவே அவர்களின் பணியும் பறிபோகும் நிலை. இதிலிருந்து தப்பிக்க வழி தேடினோம்.

ஆசிரியர் அவர்களை விருப்ப ஓய்வு எடுத்து பணியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும்படி கூறினேன்.

விரைந்து இந்தத் திசையில் இயங்கினேன். நாங்கள் இதில் விரைந்து பணியாற்றிக் கொண்டிருந்த போது என்னைப் போலவே ஆசிரியருக்கெதிராகவும், உளவுத்துறை காய்களை வேகமாக நகர்த்தி இருந்தது என்பதைப் பின்னர் அறிந்தோம். நாங்கள் வேகமாக செயல்பட்டு விருப்ப ஓய்வைப் பெற்று விட்டோம்.

உளவுத்துறை எங்களோடு மோதி தோற்ற அத்தியாயங்களுள் இதுவும் ஒன்று. இங்கே கவனிக்க வேண்டியது ஆசிரியர் அரசு பணியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள திட்டங்களைத் தீட்டினாரே அல்லாமல் தாஃவா பணியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள திட்டம் போடவில்லை.

விருப்ப ஓய்வில் கிடைத்த பணத்தை வாங்கி சின்னா பின்னா படுத்திவிட்டார் என்றும் சிலர் பேசிக் கொண்டார்கள். அதையும் பொறுத்துக் கொண்டு தனது பணியினைத் தொடர்ந்தார்கள். ஆசிரியர் அவர்கள்.

**தொடரும் இன்ஷா அல்லாஹ்..**

| | | |
|---|---|---|
| நூல் | : | ஓர் இஸ்லாமிய அறிஞரும் கொடுங்கோல் மன்னரும் |
| ஆசிரியர் | : | யூசுப் அல்கர்ளாவீ |
| தமிழாக்க ஆசிரியர் | : | அ. முஹம்மதுகான் பாகவீ |
| பக்கங்கள் | : | 96 |
| விலை | : | 35 ரூபாய் |
| வெளியீடு | : | ஆயிஷா பதிப்பகம், 78, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–5. |
| தொலைபேசி | : | 2844 4445 – 2844 4446. |

*பேரறிஞர் யூசுப்அல்கர்ளாவீ அவர்கள் - தமது மாணவர் பருவத்தில் சிறை பிடிக்கப்பட்டார். வாழ்வின் அனைத்துத் துறை களுக்கும் இஸ்லாம் ஓர் வழிகாட்டி" என்று முழங்கியவர் களை கைது செய்தது எகிப்தின் அரசு. இதற்காகவே யூசுப் அல் கர்ளாவீயும் கைது செய்யப்பட்டார்.*

*உண்மையான இஸ்லாமி யவாதியை இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்திடாமல் தடுத்திட மரணத்தைத் தவிர வேறு எதற்கும் சக்தியில்லை. இன்னுஞ் சொன்னால் அவர்களின் மரணமும் (உயிர்த் தியாகமும்) ஒரு பிரச்சாரமே.*

*1949 - ம் ஆண்டு எகிப்தின் சிறையில் ஓர் நாடகத்தை எழுதி அரங்கேற்றினார் கர்ளாவீ. அதன் பாத்திரங்கள் கற்பனையாய் வடிக்கப்படவில்லை. பல நேரங்களில் கற்பனைகளை விடவும் உண்மை வலிமையானது. எனவே ரத்தமும் சதையுமாய் வாழ்ந்த மனிதர்களையே நாடகத்தின் பாத்திரங்களாக்கினார்.*

*அது இப்போது நூல் வடிவில். சயீத் பின் ஜுபைர் (ரஹ்) வை ஒரு தேர்ந்த மார்க்க அறிஞராக மட்டுமே அறிந்திருக்கும் பலருக்கு அவர்களின் போராட்ட முகத்தைக் காட்டுகிறது இந்நூல்.*

*இந்த நாடகத்தில் வரும் அனைத்துப் பாத்திரங்களுமே இஸ்லாமிய அறிவோரும் புரிதலோடும் உரையாடுகின்றனர். இது சம்பவம் நிகழ்ந்த காலத்திலுள்ள பொது மக்களின் கல்வித்தரத்தைப் புரிந்துக் கொள்ள உதவுகிறது.*

*அநியாயமாகக் கைது செய்யப்பட்ட தன் மகனை விடுவித்திட வரும் முதியவர் ஹஜ்ஜாஜ்பின் யூசுபிடம் யூசுப் நபி கூறிய வார்த்தைகளை எடுத்துரைத்து மகனை மீட்டுச்செல்வதும் சற்று நேரத்தில் மற்றொரு சம்பவத்தில் ஹஜ்ஜாஜின் அநீதியான முகம் வெளிப்படுவதும் அழகுறச் சொல்லப்பட்டிருக்கிறது.*

*சயீத்பின் ஜுபைர் (ரஹ்) தம்முடைய மாணவர்களிடம் உரையாடும் போதும் ஹஜ்ஜாஜின் அவையில் பேசும் போதும் அவர்கள் உதிர்க்கும் ஒவ்வொரு சொல்லும் மணி மணியானவை.*


**சில மணிகள்**

*நீங்கள் ஏன் வெற்றி பெறவில்லை என்று அல்லாஹ் கேட்க மாட்டான். நீங்கள் ஏன் முயற்சி செய்யவில்லை என்றே அவன் நம்மைக் கேட்பான். (பக்கம்:-49)*

*இவ்வுலகில் தவிர வேறெங்கும் அல்லாஹ்வுக்கு மாறுசெய்யப் படுவதில்லை என்ற ஓர் அம்சம் மட்டுமே அதன் இழிவுக்குப் போதுமான அத்தாட்சியாகும் (பக்கம்:46)*

*என்றைக்கு நமது கொள்கைப் பிடிப்பில் தளர்வு ஏற்படுகிறதோ அல்லது எதிரியின் அசத்தியக் கொள்கை மீது நமக்கு மோகம் ஏற்படுகிறதோ அன்று நமக்கு உண்மையான தோல்வி, வீழ்ச்சி எனலாம். (பக்கம்:.50)*

*நூலாசிரியர் கர்ளாவீ அவர்கள் தம்முடைய முன்னுரையில் "இன்று வரலாறு*



*In the Name of Allah the Most Beneficient and the Most Merciful*

# DARUL ISLAM FOUNDATION TRUST (REGD.)

235, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone : 044-45566909
Email: darultrust@yahoo.com Website :: darulislam.in

## ESSAY COMPETITION

Dear Brother,

Asslamualaikum

Our foundation takes special efforts to present Islam as an ideology which still has the power and potential to solve the problems which humanity faces to-day.

You all knew the global meltdown which is generally called the recession is caused by certain factors. Many are of the view that it is not a recession but a fantastic failure of Capitalistic Imperialism.

Many have also highlighted the fact that the Islamic financial system or Islamic Economic system alone can save the world from the present day economic disorder.

We invite contributions which will discuss / analyse this fact.

Students and scholars are requested to send their Essays on: **'GLOBAL MELTDOWN AND ISLAMIC ECONOMIC ORDER'**

**The best contribution will be awarded Rupees Ten Thousand (Rs. 10,000 /- First Prize)**

The next best contribution will be awarded Rupees Five thousand (Rs. 5000/-)

The competition will be covered by the following rules

* The contributions will be valued by a panel; its decision will be final and binding.
* Request for revaluation will be entertained except on compelling reasons.
* Contributors should give their cell phone number with full address, both temporary and permanent.
* Contributions must reach our office on or before 15th April 2010. Contributions received after this date will not be entertained.
* The trust intends to publish the best of the contributions, in that case appropriate royalty will also be paid. (Insha Allah).

---

திரும்புகிறது. தொல்லை தொடர்கிறது. இஸ்லாமிய அழைப்பாளிகள் தொல்லைக்குள்ளாக்கப்படுகிறார்கள். அதுவும் கடுமையான கொடுமையான முறையில். ஹஜ்ஜாஜின் கொடுங்கோல் ஆட்சியை விடக் கோரமானதோர் ஆட்சியில், அந்த சயீதின் வீரம் எங்களுக்கு உரம் சேர்க்கும்" என்கிறார்.

1968-ல் அவர் எழுதிய இந்த வரிகள் இன்றைக்கும் அப்படியே பொருந்துகிறது. எனவே இந்த நூலும் நிகழ்காலத்தின் தேவையாகிறது.

வீர மரணத்திற்கு முந்தைய நாள் சிறைக்கொட்டடியில் தம் நண்பர்களுடன் சயீத் (ரஹ்) பேசிடும் உரையாடல். புல்லாங்குழல் ஓசை கேட்டு அழுகை. கொலைவாளைக் கண்டவுடன் (நீண்ட நாள் கழித்து வரும்) சிரிப்பு என அனைத்தும் நாடகத்தின்-சம்பவத்தின் அருமையான அம்சங்கள்.

மௌலவி கான் பாகவீயின் மொழி நடை அலங்காரமற்ற அழகான நடை. நூலின் ஓட்டத்துக்கு துணை செய்கிறது. முனிவு, மூதேவி ஆகிய சொற்களைத் தவிர்த்து வேறு சொற்களைப் பயன்படுத்தியிருக்கலாம்.

அச்சுப்பிழைகள் இல்லை. அச்சமைப்பு வாசிப்பின் விறுவிறுப்பைக் கூட்டுகிறது. கையடக்க நூல்.

கடுகளவு சோதனைகள் வந்து விட்டால் கூட கொள்கையைத் துறந்து விட்டு ஓடிப் போக வழி தேடுவோர் மத்தியில் இறுதி மூச்சு வரை கொள்கையோடு வாழ்வதற்கு வழி காட்டும் நூல். இயக்கவாதிகள் அனைவரும் வாசித்திட வேண்டிய நூல்.

ஆயிஷா பதிப்பகத்தின் முதல் நூலே அற்புதமான நூலாக அமைந்து விட்டது. இது போன்ற நூல்களை 'ஆயிஷா' இனி தொடர்ந்து தர வேண்டும். லட்சியங்களை அடையாளங்காட்டும் நூல்களை வெளியிடும் வெளியீட்டகங்கள் அதிகரிப்பது வரவேற்புக்குரிய மாற்றம்.

ரியாஜி.


கவர் ஸ்டோரி

# 26/11 மும்பை தாக்குதல்

## யார் இந்த டேவிட் கோல்மென் ஹெட்லி?

**மு. குலாம் முஹம்மத்**

நாட்டில் தொடர்ந்து பல தீவிர தாக்குதல்கள். இவை அனைத்தும் முஸ்லிம்களைத் தீவிரவாதிகளாகக் காட்டிட அரங்கேற்றப்பட்டவை. அத்தோடு இஸ்லாத்தை தீவிரவாதத்திற்கு விதையைத் தூவிடும் மார்க்கம் எனக் காட்டிட வனையப்பட்ட சதிகள்.



அவற்றுள் தலையானவை, உலக மக்களின் கவனத்தை ஒட்டுமொத்தமாக ஈர்த்தவை.

1. நாடாளுமன்றத் தாக்குதல் : டிசம்பர் 13, 2001

2. மும்பை தாக்குதல்கள் : நவம்பர் 11, 2008

நாடாளுமன்றத் தாக்குதல் பற்றிய பல உண்மைகளை அதற்குப் பின்னாலிருந்த எதிரிகளை PVDR என்ற ஜனநாயக உரிமைகளுக்கான குழுமம் என்ற அமைப்பு. செவ்வனே முறையான விசாரணைகள் வழி வெளிக் கொணர்ந்தது.

ஆனால் அதை நாட்டு மக்களின் கவனத்திற்கு வராமல் தடுத்து விட்டார்கள்.

அதிலே ஒன்று 'அப்சல்'க்கு மரண தண்டனை எனக் கூறி எல்லாவற்றையும் மூடிவிட்டார் கள்.

அதே போல் மும்பை தாக்குதல்கள் பற்றிய ஆழமான, ஆதாரப்பூர்வமான தகவல்கள், கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற தலைப்பில் நூலாக வெளியே வந்துள்ளது. அஃது இப்போது ஆங்கிலம், தமிழ், உருது, ஹிந்தி, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் வெளிவந்து பரபரப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

ஆனால் மொத்த (மீடியாக்களும்) ஊடகங்களும் இதனை - இந் நூலை ஒட்டுமொத்தமாக மறைக்கின்றன.

நாம் அதனை மாநிலங்கள் தோறும், மாவட்டங்கள் தோறும் அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

இந்த அறிய தகவல்கள் மக்கள் மன்றத்தை சென்றடைந்து விடாமல், தடுத்திட வேண்டும். மும்பை தாக்குதல்கள் பற்றிய உண்மைகளை மண்மூடிப் போகச் செய்திட வேண்டும் என்ற வகையில் ஒரு விரைவு விசாரணைக்கு 'Express Trail' உத்தரவிட்டு சதிகளைச் செய்து வருகின்றார்கள்.

அரங்கேற்றப்படும் இந்த விரைவு விசாரணைக்கு தீர்ப்பு ஒன்றையும் ஏற்கனவே எழுதி விட்டார்கள். அது அஜ்மல் கேசாப் என்பவனுக்குத் தூக்குத் தண்டனை. அத்தோடு மொத்த வழக்கும் முடிவுக்கு வரும்.

இந்த மொத்த நாடகத்தையும் உண்மைப் படுத்திட இன்னொரு நாடகம், அதன் கதாநாயகன் டேவிட் கோல் மேன் ஹெட்லி.

இவன் நமது திரைப்படங்களில் வரும் 'மர்ம' மனிதனைப் போல் காட்டப்படுகின்றான்.

முஸ்லிம் தீவிரவாதிகள் என்றால் வளைத்து, வளைத்து படங்களைப் போடும், நமது பத்திரிக்கைகள், ஒரு 'பொம்மை' வரைபடத்தைத்தான் ஹெட்லி-யின் படமாகப் போடுகின்றது.

அவனது உண்மையான படம் - புகைப்படம் வெளியே வரும்போதுதான் அவன் எந்த நாட்டு உளவுத்துறையைச் சேர்ந்தவன் என்பது தெரியவரும்.

இப்போது அவன் பெயரைப் பார்த்தால் அவன் ஒரு கிறிஸ்தவன் அல்லது யூதன் என்பது மட்டும் புரிகின்றது. ஆனால் அவனை லஷ்கரே தொய்பா ஏஜெண்ட் என்கின்றார்கள்.

இந்த டேவிட் கோல்மேன் ஹெட்லியை அமெரிக்கா தன் கைக்குள் வைத்துக் கொண்டுள்ளது. அவன் அங்கே இருக்கின்றானோ? இல்லையோ? தெரியாது.

அவன் அமெரிக்காவில் இருப்பதாகவும் அதிசயமான தகவல்களைத் தந்து கொண்டிருப்பதாகவும் ஒரு ‘திகிலை’ உருவாக்கிக் கொண்டிருக்கின்றது அமெரிக்கா.

அவன் தரும் ‘திகில்’ தகவல்களை முழுமையாக அறிந்திட அவனுடன் ஓர் ஒப்பந்தத்தையும் செய்திருப்பதாகப் பறை சாற்றுகின்றது அமெரிக்கா. அதற்கு. அந்த ஒப்பந்தத்திற்கு, “பிளி எக்ரீமெண்ட்” எனப் பெரும் வைத்தது. “PLEA AGREEMENT” - அதாவது கோரிக்கை ஒப்பந்தம் என்று அதற்குப் பெயராம்.

இதற்கு இன்னொரு பெயரையும் சொல்லு கின்றார்கள். அது “பிளீ பார்கெய்ன்” அதாவது பேரம் பேசக் கோரிக்கை என்கின்றார்கள்.

என்ன பேரம்?



டேவிட் கோல்மன் ஹெட்லி சில நிபந்தனைகளை - பேரங்களை, கோரிக்கைகளை வைப்பானாம். அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமாம். இதற்குப் பதிலாக அவன்,

1. அவன் டேவிட் கோல்மேன் ஹெட்லி தன் மீது சுமத்தப் பட்டுள்ள 12 குற்றச் சாட்டுகளையும் ஒத்துக் கொள்வான்.

2. புலன் விசாரணையை நடத்துபவர்களுடன் ஒத்துழைப்பான்.

3. அவனுக்கு மரண தண்டனை அல்லாத மற்ற தண்டனைக ளே வழங்கப்பட வேண்டும்.

4. அவனை இந்தியாவுக்கோ, பாகிஸ்தானுக்கோ, டென்மார்க் குக்கோ எந்த நிலையிலும் அனுப்பிடக்கூடாது.

இதில் பல சூழ்ச்சிகள் புதைந்து கிடக்கின்றன.

அவற்றுள் தலையானது இந்தியாவில் பல குடிமக்களின் உயிர்களை ஒட்டுமொத்தமாக குடித்த ஒரு விவகாரத்தில் சம்மந்தப்பட்ட ஒருவனை இந்தியாவின் கண்களிலும் காட்டாதாம். அவனுக்கு மரண தண்டனையும் தராதாம்.

இது அமெரிக்காவின் ‘Secret Agent’ இரகசிய ஒற்றர்களுக்குத் தரப்படும் சலுகைகளுள் ஒன்று என்பதால், டேவிட் கோல்மென் ஹெட்லி ஒரு அமெரிக்க ஏஜெண்ட் என்கின்றார்கள் விபரமறிந்த வட்டாரத்தவர்கள்.

அடுத்து அவன் புலன் விசாரணை செய்பவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பது ஒரு கண்துடைப்பு நாடகமே.

அதாவது, புலன் விசாரணை என்பது அமெரிக் கர்கள் நடத்தும் புலன் விசாரணை என்றே பொருள்.

காரணம் அமெரிக்கா, இந்திய புலன் விசாரணை அதிகாரிகளின் கண்களில்கூட அவனைக் காட்டிட மாட்டேன் எனக் கூறி விட்டார்கள்.

இனி புலன் விசாரணை என்ற பெயரில் அமெரிக்கா சொல்லும் தகவல்களையே இந்தியா நம்பிட வேண்டும்.

உண்மையைச் சொன்னால் இந்தியா நம்பிடத் தயாராக வும் இருக்கின்றது.

இதனை நமது உள்துறை

அமைச்சர் ப. சிதம்பரம் தான் பத்திரிக்கைகளுக்கு வழங்கிய பல்வேறு பேட்டிகளிலும் தெளிவுபடுத்தி இருக் கின்றார்.

அமெரிக்கா வழங்கிடும் செய்திகளை உண்மை என உலகெல்லாம் பரப்பிட நமது ஊடகங்கள் தயாராக இருக்கின்றன. நமது இந்த எதிர்பார்ப்பு உண்மைதான் என்பதை தி ஹிந்து என்ற ஆங்கில நாளிதழ் அடித்துக் கூறுகின்றது.

அமெரிக்கா ஹெட்லியுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை நியாயப்படுத்தி 20.03.2010-ல் ஒரு தலையங்கத்தையே எழுதி உள்ளது.

அடுத்து, ஒரு பெரும் குற்றவாளி உலகெங்கும் பெரிய தாக்குதல்களில் ஈடுபட்ட ஒரு குற்றவாளி. பல இந்தியக் குடிமக்களின் உயிரைக் குடித்து பல கபளீகரங்களை நிகழ்த்திய ஒரு குற்றவாளி, புலன் விசாரணையோடு ஒத்துழைக்க இத்துணை பரிவு காட்டப்பட வேண்டுமா?

சாதாரணமாக இதுபோன்ற தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுபவர்களை அமெரிக்காவும், உலகின் இதர நாடுகளும் எப்படி விசாரணை செய்கின்றன? அவர்கள் மூளை சோதனைகளுக்கும் (Narco Analysis Test) என்ற பொய்யை கண்டறியும் விஞ்ஞான சோதனைகளுக்கும் உள்படுத்தப்படுகின்றார்கள். இந்தச் சோதனைகள் வழி அவர்களின் கடந்தகால குற்றங்கள் மட்டுமல்லாமல் எதிர்கால திட்டங்களும் கண்டறியப்படுகின்றன.

அமெரிக்கா இந்தச் சோதனைகளை எத்தனையோ அப்பாவி முஸ்லிம்கள் மேல் நடத்தியுள்ளது.

அப்படி இருக்க டேவிட் கோல்மேன் ஹெட்லி இடம் மட்டும் இப்படியெல்லாம் ஏன் ஒப்பந்தம் செய்து கொள்கின்றது அமெரிக்கா?

டேவிட் கோல்மேன் ஹெட்லியை சாதாரண சோதனைகளுக்குக் கூட உட்படுத்திட தயங்குவானேன். காரணம் அவன் அமெரிக்காவின் கையாள். அவன் விஞ்ஞான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டால் அவன் அமெரிக்காவையே காட்டிக் கொடுத்திடுவான் என்ற பயம்தான்.

அத்தோடு இதில் கருத்துச் சொல்பவர்கள். இதில் டேவிட் கோல்மேன் ஹெட்லியின் மனைவிக்கும் பங்கிருக்கின்றது என்கின்றார்கள். அவளையும் இந்தியா வரவழைத்து விசாரிக்க வேண்டும் என்கின்றார்கள்.

அமெரிக்காவைக் கேட்டால் அவளும் லஷ்கரே தொய்பாவைச் சார்ந்தவள் என்று கூறும்.

இந்தியாவில் பல உயிர்களைக் குடித்த விவகாரத்தில் தொடர்புடைய ஒருவனை இந்தியா அனுப்ப மாட்டேன் என்கின்றது. ஒத்துக் கொள்கின்றது இந்தியா.

இதில் அமிழ்ந்து கிடக்கும் மர்மம் என்ன? மார்ச்சு 20/21 தேதிகளில் பத்திரிக்கைகளுக்குப் பேட்டிகளைத் தந்த ப. சிதம்பரம் அவர்கள், டேவிட் கோல்மேன் ஹெட்லியை இந்தியாவுக்கு விசாரணைக்கு அனுப்புவதில் சிரமங்கள் உண்டு என்பதை நானறிவேன் என்கின்றார். (ஆதாரம்: The Hindu, 21.03.2010)

இதிலிருந்து ஹெட்லியை மறைவாக வைத்துக் கொண்டு அவன் சொன்னதாகச் சொல்லி அவன் வாக்குமூலம் வழங்கியதாகச் சொல்லி அஜ்மல் கேசாப்-ஐ தூக்கில் தொங்கவிட்டு வழக்கை முடித்துவிடலாம் என்ற சூழ்ச்சிமயம் களைகட்டிப் பறக்கின்றது என்பதை எளிதில் புரிந்திடலாம்.

இதனை ஆமோதிக்கும் வகையில்தான் அண்மையில் நமது உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் அளித்த பேட்டி அமைந்திருந்தது.

ப. சிதம்பரம் அவர்கள் மார்ச்சு திங்கள் 20, 21, 27 ஆகிய தேதிகளில் தந்த அறிவிப்புகள் / பேட்டிகள் இவற்றில் மும்பை தாக்குதல் வழக்குகள் விரைவில் முடிந்துவிடும் எனக் கூறிவருகின்றார்.

மும்பை நீதிமன்றத்தில் இப்போது இந்த வழக்கு (26/11) விரைவாக நடந்து வருகின்றது. இதில் முக்கிய சாட்சியங்கள் பல விடுபட்டு போயிருக்கின்றன. இதனை 26/11 வழக்கை விசாரிக்கும் நீதிபதியே குறிப்பிடுகின்றார். அரசு வழக்கறிஞரிடம் அந்தச் சாட்சியங்களைக் கேட்கின்றார் நீதிபதி. அரசு

வழக்கறிஞரோ, அவற்றையெல்லாம் நாம் தந்தால், வழக்கின் காலம் நீடித்துக் கொண்டே செல்லும் என்றே பதில் சொல்லுகின்றார். (ஆதாரம்: The Hindu, 27.03.2010)

ஆக வழக்கை விரைந்து முடித்து மொத்தத்தையும் மூடிவிட வேண்டும் என அரசு விரைகின்றது.

இப்போது வரும் செய்திகளில் 'ஹெட்லி' பல பாகிஸ்தான் அதிகாரிகளுக்கும் 26/11-க்கும் தொடர்புள்ளதாகக் கூறுகின்றான் என்கிறார்கள்.

ஒரு அஜ்மல் கேசாப்-க்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே ஆயிரம் பொய்கள். இந்த லட்சணத்தில் பாகிஸ்தானிலுள்ள இராணுவ அதிகாரிகளைத் தண்டிப்பார்களாம்.

சிக்காக்கோ நீதிமன்றத்தில் ஹெட்லி வாக்குமூலம் வழங்கிடும்போது நமது 'ஆட்களும்' அங்கே இருப்பார்கள் என்றொரு புதுச் செய்தியை இப்போது புழக்கத்தில் விடுகின்றார்கள்.

இப்படி மும்பை தாக்குதல் குறித்து புதுப்புதுக் கதாபாத்திரங்களும் கதாநாயகர்களும் அறிமுகப்படுத்தப்படுகின்றார்களே அல்லாமல், உண்மையான குற்றவாளிகளான அபிநவ் பாரத், சங்கபரிவாரத்தின் 'சனாதன் சாஸ்தா' போன்ற அமைப்புகளின் பக்கம் யாரும் எட்டிக்கூடப் பார்த்திடத் தயாராக இல்லை. இந்த அமைப்புகள் மீது ஏராளமான ஆதாரங்களை மும்பை தாக்குதலில் கொலை செய்யப்பட்ட காவல்துறை அதிகாரி அசோக் காம்தியின் மனைவி வினிதா காம்தியும், முன்னாள் காவல்துறை அதிகாரி எஸ்.எம். முஷ்ரீஃப் அவர்களும் பதிவு செய்திருக்கின்றார்கள். கண்டு கொள்வார் யாருமில்லை.

ஹெட்லி - டேவிட் கோல்மேன் ஹெட்லி என்ற அமெரிக்க உளவாளி, இந்தியக் குடிமக்கள் எதை நம்பிட வேண்டும் என்பதை இனி நிர்ணயிப்பார்.

எல்லாம் அமெரிக்காதான்.

மும்பை தாக்குதல் தொடங்கிய முதல்நாள் தொட்டு அமெரிக்காதான் அனைத்தையும் இயக்குகின்றது என்பதை கூர்ந்து கவனிப்பவர்கள் புரிந்து கொள்ளலாம்.

மும்பை தாக்குதலுக்கு முக்கிய வழிகாட்டியாகத் தொடக்கத்தில் காட்டப்பட்டவை அனைத்தும் செல்போன் தகவல்களே!

பாமரர்களை மலைக்கச் செய்திடும் வகையில் இந்தச் செல்போன்கள், விண்கோள் செல்போன்கள் எனப் பீற்றிக் கொள்ளப்பட்டன. ஆங்கிலத்தில் அவற்றிற்கு (VOIP - Voice Over Internet Protocol Technology) என அழைத்தார்கள்.

இந்த விண்கோள்கள் வழிவந்த செல்போன் அழைப்புகள்தாம், மும்பைத் தாக்குதல்களின் ஒவ்வொரு அசைவுகளும் எப்படி இருக்க வேண்டும்? எந்தத் திசையிலிருக்க வேண்டும் என்பனவற்றை வழிநடத்தின என்றார்கள்.

மும்பை தாக்குதலின் முன்னே பாகிஸ்தானே காட்டப்பட்டு வந்ததால், இந்த அழைப்புகள் அனைத்தும் பாகிஸ்தானிலிருந்து வந்தவைதான் என்பதாக மக்கள் நம்ப வைக்கப்பட்டார்கள்.

அவை அனைத்தும் அமெரிக்காவிலிருந்து வந்தவை. இந்த அழைப்புகள் யாரிடமிருந்து வந்தன? எப்படி வந்தன? என்பனவற்றை நாம் ஏற்கனவே வைகறை வெளிச்சத்தில் வெளியிட்டிருக்கின்றோம்.

இப்போது இந்த விண்கோள் வழிகாட்டுதல்களை லஷ்கரே தொய்பாவைச் சார்ந்த, டேவிட் கோல்மேன் ஹெட்லி தான் அனுப்பினான். அவன் பாகிஸ்தானிலுள்ள தனது எஜமானர்களுக்காக அனுப்பினான் என்றெல்லாம் கதைக்கட்டுவார்கள்.

முடிவில் டேவிட் கோல்மேன் ஹெட்லியை மன்னித்தும் விடுவார்கள். காரணம் கேட்டால் அவனோடு நாம் செய்து கொண்ட 'பிளீ அக்ரீமெண்ட்' அப்படி எனக் கூறிவிடுவார்கள்.

இங்கே நாம் மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது, மும்பை தாக்குதலின் (26/11) மொத்த வழிகாட்டுதலும் அமெரிக்காவிலிருந்து வந்ததுதான்.

இங்கே நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய பிறிதொரு உண்மை, இந்த விண்கோள் வழிவந்த 284 தொலைபேசி அழைப்புகளில் ஒரு அழைப்புகூட இப்போது தூக்கிலில் தொங்கவிட இருக்கும் அஜ்மல் கேசாபுக்கு வந்திடவில்லை.

ஆகவே இந்த விண்கோள் அழைப்புகளைக் காட்டிக்கூட நாம் அஜ்மல் கேசாப்-ஐ தூக்கிலே போட்டிட இயலாது.



## அமெரிக்காவும், அனிதா இராஜேந்திர உத்தய்யாவும்

மும்பை தாக்குதல்களை நடத்த வந்த தீவிரவாதிகள், படகில் வந்து இறங்கிடும்போது, கடற்கரையோரத்தில் வைத்துப் பார்த்த பெண்மணிதான் அனிதா இராஜேந்திர உத்தய்யா என்ற பெண்மணி.

தாக்குதல் நடந்து முடிந்த பின், இந்தப் பெண்மணி வந்து இறங்கிய தீவிரவாதிகளைப் பார்த்துவிட்டாள் என்ற செய்தி காட்டுத்தீயாய் பரவின.

இந்தத் தாக்குதல்களுக்கு (11/7), (26/11) தளமான அமெரிக்க உளவுத்துறைக்கும் இந்தச் செய்திதான் சென்று சேர்ந்தன.

இந்த அம்மாவை உடனேயே அமெரிக்க உளவுத்துறையினர் தொடர்பு கொண்டனர். பேச்சு வார்த்தைகளைத் தொடங்கினார்கள்.

இதற்கு 'சுதாகர்' என்றொரு மொழி பெயர்ப் பாளரைப் பயன்படுத்தி னார்கள்.

இதைப் பற்றிப் பேசும் போது பம்பாய் காவல்துறை அதிகாரிகள், அனிதா உதைய்யாவுக்கு அலாதியான நினைவாற்றல் இருக்கின்றது என்றும், அவளை ஓர் நேரில் கண்ட சாட்சியாகவும் இணைக்கப் போவதாகக் கூறினார்கள்.

பின்னர் இந்திய உளவுத்துறையைச் சார்ந்தவர்களும், அமெரிக்காவின் உளவுத்துறையைச் சார்ந்தவர்களும், அனிதா உதைய்யாவை நேரில் வந்து சந்தித்தார்கள்.

பின்னர் இந்தச் சந்திப்புகள் பேரங்களாக மாறின.

அனிதா உதைய்யாவுக்கு அமெரிக்கா டாலர் $10,000 (சுமார் 5 லட்சம் ரூபாய்) தர தயாராக இருப்பதாகவும், அதற்குப் பதிலாக, அனிதா இராஜேந்திர உதைய்யா அமெரிக்கர்களும் நமது உளவுத்துறையும் சொல்வதைச் சொல்லிட வேண்டும் என்று பேசினார்கள்.

இந்த அமெரிக்க சத்திய கீர்த்திகளும் நமது உள்நாட்டு உளவுத்துறையினரும் உண்மையைத் தவிர வேறெதையும் சொல்லிடச் சொல்ல மாட்டார்கள் என நம்பினார் அனிதா உதையா. இதனால் இந்தப் பேரத்திற்கு ஒத்துக்கொண்டாள்.

தான் அமெரிக்கா செல்லப் போவதாகவும், அதற்கான ஆடைகளை ஆயத்தப்படுத்தி வைத்திட வேண்டும் எனவும் கூறினாள் தன் மகள் சீமா கேதன் இடம். அதன்பிறகு பல மருத்துவ சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டாள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் (6.30 மணி) அவள் காலைக் கடன்களுக்காக வெளியே வந்தாள். அப்போது தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு 'ஜீப்'-இல் அவள் ஏற்றிச் செல்லப்பட்டாள். உண்மையில் கடத்திச்



செல்லப்பட்டாள்.

மும்பை விமான நிலையத்தில் ஒரு விமானம் காத்திருந்தது. அதில் அனிதா, சுதாகர், இன்னும் நான்கு உளவுத்துறையினர் பத்து அமெரிக்க உளவுத்துறையினர் ஆகியோர் மட்டுமே பயணம் செய்தனர். இந்த விமானம் மிகவும் சிறிய விமானம். அதில் இந்த 15 பேர் மட்டுமே பயணம் செய்திட இயலும்.

இஃது அமெரிக்கா சென்று இறங்கியது. அங்கே வைத்து இந்தப் பெண்மணியி டம் தான் கண்ட தீவிரவாதிகள் கூட்டத்தில் அஜ்மல் கேசாப்பும் உண்டு எனக் கூறச் சொன்னார்கள். ஆனால் இந்த ‘அம்மா’ நான் கண்ணால் கண்டவர்களை மட்டுமே அடையாளம் காட்டுவேன் எனக்கூறி விட்டாள். இதனிடையே இந்தியாவில் அவளுடைய சீமா கேதான் ஜோஷி தன் தாயாரைக் காணவில்லை என ஒரு புகாரை பதிவு செய்தார்.

உடனேயே அம்மணியைத் திரும்ப அனுப்பிவிட்டார்கள்.

இப்போது சிறப்பு பிளேன் - விமானமில்லை. மாறாக, இப்போது அவள் ஒரு சாதாரண பயணிகள் விமானத்தில் திருப்பி அனுப்பப்பட்டாள்.

மும்பை விமானம் வந்து இறங்கிய அந்தப் பெண்மணி க்கு ஐந்து லட்சம் தரப்பட வில்லை. மாறாக 500 ரூபாயைத் தந்து அனுப்பி விட்டார்கள். மொத்தத்தில் அமெரிக்க உளவுத்துறைக்கு ஒத்துழைக்காமல் போனதால் அவள் ஏமாற்றப்பட்டு விட்டாள்.

இப்போது இந்த அம்மாவின், அதாவது அனிதாவின், மகள் கொடுத்த புகாருக்குப் பதில் சொன்ன காவல்துறையினர் முன்னுக்குப் பின் முரணாக தகவல்களைச் சொன்னார்கள்.

அனிதா தான் அமெரிக்கா வுக்கு அழைத்துச் செல்லப் பட்டதாகக் கூறினாள்.

காவல்துறையினர், பாஸ்போர்ட் என்ற கடவுச் சீட்டைக்கூட பெற்றிராத அனிதா எப்படி அமெரிக்கா செல்ல இயலும் எனக் கேட்டார்கள்.

அனிதா தன்னை அமெரிக்க உளவுத்துறையும், இந்திய உளவுத்துறையும் பொய் சொல்ல சொல்லின என்றாள்.

உடனேயே காவல்துறையினர், அனிதா மும்பை தாக்குதல் 26/11 வழக்கை திசை திருப்பப் பார்க்கின்றார் என்றொரு பொய்யைப் பரப்பினார்கள்.

அனிதா விடாப்பிடியாக மும்பை கடற்கரையில் தானிருக்கும் இடத்தில் இறங்கிய தீவிரவாதிகளிடம், தான் ஏன் இப்படி சம்பந்தமில்லாத இடத்தில் இறங்குகின்றீர்கள் எனக் கேட்டதாகவும் அவர்கள் ஒன்றுமில்லை., உன் வேலையைப் பார் எனக் கூறியதாகவும் கூறினார்கள்.

இதிலிருந்து வந்தவர்கள் மராத்தியில் பேசினார்கள் என்பது பளிச்சிட்டது.

உடனேயே காவல்துறையினர், இந்த அம்மாவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது எனப் பிதற்றத் தொடங்கினர்.

முரட்டு அதிகாரம் கையிலே வரப்பெற்றவர்கள் சும்மா இருப்பார்களா?

அந்த அம்மா மீது வழக்கொன்றைத்

தொடுத்தார்கள்.

IPC என்ற இந்திய தண்டனைச் சட்டம், 182 கீழ் வழக்கொன்றைப் பதிவு செய்தார்கள். வழக்கு விசாரணையை திசைதிருப்ப முயற்சி செய்ததாகக் குற்றம் சுமத்திற்று.

மொத்தத்தில் பொய் சொல்லிட, மறுத்ததற்காக ஐந்து லட்சம் ரூபாயை இழந்து வழக்கொன்றிற்கு உள்ளாகிவிட்டாள் அனிதா இராஜேந்திர உதைய்யா.

ஊடகங்கள் குறிப்பாக மும்பையில் ஒளிபரப்பாகும், இந்தியா டி.வி., அனிதா தீவிரவாதிகள் இறங்கி வருவதைப் பார்த்ததாகக் கூறிற்று. பின்னர் அனிதா விவகாரத்தை அப்படியே இருட்டடிப்புச் செய்துவிட்டது.

இப்படி வான்வழி செய்தியை அனுப்பியதும் அமெரிக்கா. அனிதாவைப் பொய்ச் சொல்லச் சொன்னது அமெரிக்கா. ஹெட்லியைக் கையில் வைத்துக் கொண்டு விளையாட்டுக் காட்டுவதும் அமெரிக்கா...!

இந்த மும்பை தாக்குதலில் அமெரிக்காவுக்கு நேரடி தொடர்பிருக்கின்றது என்பதை நாம் மேலே எடுத்து வைத்த விவாதம் உண்மைப் படுத்தப்படுகின்றது.

ஆனால் பழிசுமத்தப்படுவது முஸ்லிம்கள், இஸ்லாம், பாகிஸ்தான் - என்னே மோசடி.

இந்தப் பின்னணியில் முஷ்ரிஃப்-இன் நூல் எல்லா முக்கியத்துவத்தையும் பெறுகின்றது.

## மும்பை தாக்குதல்... ஏன் உண்மை சாட்சியங்களை மறைக்கின்றீர்கள்... ஆதங்கப்படுகிறார் நீதிபதி "தகாலியானி"

மும்பை தாக்குதல் வழக்குகளை நீதிபதி தகாலியானி என்பவர்தான் விசாரித்து வருகின்றார்.

நீதிபதியே பல உண்மை சாட்சியங்களை மறைத்திருக்கின்றீர்கள் என்ற ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்திருக்கின்றார் அவர் வழக்கறிஞர்கள்.

அவ்வாறு மறைக்கப்பட்ட சாட்சியங்களுள் ஒருவர், விஷ்வாஸ் நாகரீ பாட்டில். இவர் 26/11 அன்று மும்பையில் துணை காவல்துறை ஆணையராக இருந்தவர். (Deputy Commissioner of Police).

மும்பையில் தாக்குதலுக்கு உள்ளான தாஜ்மஹால் ஹோட்டலில் முதல்முதலில் புகுந்து எதிரிகளுடன் தாக்குதலில் ஈடுபட்டவர். "Tajmahal Palace and Tower Hotel." ஆகவே அவர் ஓர் முக்கிய சாட்சியம். ஆனால் நமது அதீத சக்திகள் அவரை ஒரு சாட்சியாகக் காட்டிடவில்லை.

இந்த வழக்கு விசாரணையை நடத்தும் நீதிபதி எம்.எல். தகாலியானி கடிந்துள்ளார். இதுபற்றி நீதிமன்றத்தில் கூறிடும்போது அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

"Mr. Patil should have come as a witness. He is a Senior Officer. He entered Taj within minutes of the attack"

அதாவது, "திருவாளர் பாட்டில் அவர்கள் ஒரு சாட்சியாக வந்திருக்க வேண்டும். அவர் ஒரு மூத்த அதிகாரி. அவர் தாக்குதல் நடந்த சில நிமிடங்களுக்கு உள்ளாலேயே தாஜ்க்குள் புகுந்தவர்."

அதேபோல் இந்த வழக்கில் இன்னொரு கீழறுப்புத் தனத்தையும் காட்டியுள்ளது நமது காவல்துறை.

தாஜ் மஹால் ஹோட்டல் மீதும் - உள்ளேயும் நடந்த தாக்குதல்கள் பற்றிய 'DVR' என்ற ஒளிநாடாப் பதிவை மிகவும் பொடுபோக்குத்தனமாக ஒரு சாதாரண காவலரிடம் கொடுத்து விட்டதாகக் கூறியுள்ளார்கள். இதையும் நீதிபதி அவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளார்கள்.

தாக்குதல் நடந்தபோது பதிவான உண்மை ஒளிப்பதிவுகளை நீதிமன்றத்திலே தாக்கல் செய்திருந்தால் பல புதிய முகங்கள் நீதிபதிக்குத் தெரிந்திருக்கும். அவர்களை விசாரணை செய்யத் தொடங்கினால் உண்மையான தீவிரவாதிகளை நீதிபதி கண்டிருப்பார். அவர்கள் அபிநவ் பாரத்-ஐ சார்ந்தவர்களாக இருப்பார்கள்.

ஆகவே தாக்குதல் நடந்த இடத்தில் நடந்தவற்றைப் பதிவு செய்த ஒளிப்பதிவை மறைத்துவிட்டு தாங்களாகவே தயாரித்த ஒளி நாடாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றார்கள்.

இதை, அஜ்மல் கேசாப் சார்பில் வாதாடும்

வழக்கறிஞரும் (பாவர்) சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

இந்த முக்கிய உண்மை நிகழ்வுகளின் ஒளிப்பதிவு ஆதாரத்தை காவல்துறை இப்படி தானா கையாள்வது என்றொரு வினாவை முன் வைத்தார் நீதிபதி தகாலியானி.

"Is this the way a serious investigation and a vital piece of evidence, handled" - The Hindu, *273, 2010.*

நீதிபதியின் வினா எதார்த்தமானது. நீதிபதி அவர்கள் முஷ்ரீஃப் அவர்களின் "கர்கரேயைக் கொலை செய்தது யார்? தீவிரவாதத்தின் உண்மை முகம்" என்ற ஆவணத் தொகுப்பைப் படித்தால் ஏன் இப்படி நடந்து கொள்கின்றார்கள் மும்பை காவல்துறையினர் என்பதைத் தெரிந்து கொள்வார்.

அதேபோல் மும்பை தாக்குதலின் போது மத்திய உளவுத்துறையின் கையிலிருந்தவர்களால் கொலை செய்யப்பட்ட அசோக் காம்தியின் மனைவி வினிதா காம்தி எழுதிய நூலைப்படித்தாலும் இதிலுள்ள உண்மைகளைத் தெரிந்து கொள்வார்கள்.

ஆனால் இதற்கு வழிவிட மாட்டார்கள்.

இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவெனில் அரசு தரப்பு வழக்கறிஞர் (Special Public Prosecutor) உஜ்வால் நிக்காம் என்பவர் இப்படிப் பதில் சொன்னார்.

"If very such witness were examined, the trail would have been prolonged."

அதாவது, "இப்படி ஒவ்வொரு சாட்சியத்தையும் விரிவான விசாரணைக்கு உட்படுத்தினால், இந்த வழக்கு (நீண்ட நாள்களுக்கு) இழுத்துக் கொண்டே போகும்."

இஃது எதை எடுத்துக் காட்டுகின்றது. நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியதைப் போல், வழக்கை விரைந்து முடித்து, கேசாப்-ஐ தூக்கிலே தொங்கவிட்டு, மொத்த உண்மையையும் மூடி மறைத்து விட வேண்டும்.

## அஜ்மல் கேசாப்-இன் புகைப்படங்கள்

அஜ்மல் கேசாப்-இன் புகைப்படங்களை எங்கே வைத்து எடுத்தார்கள் என்பதைப் பற்றிய விவாதம் ஒன்று நாடெங்கும் நடந்து கொண்டிருக்கின்றது.

அவனது புகைப்படங்களை மும்பை (CST : Chakaravarthy Sivaji Terminals) சக்கரவர்த்தி சிவாஜி ரெயில் நிலையத்தில் வைத்து எடுத்ததாகக் கூறுகின்றார்கள். ஆனால் உண்மையில் அவனது புகைப்படத்திற்குப் பின்னணியில் ரெயில் நிலையம் தெரியவில்லை. மாறாக, பூந்தோட்டம் போன்றதொரு பின்னணியே தெரிகின்றது.

இந்தப் புகைப்படங்களை, "மும்பை மிரர்" என்ற பத்திரிகையைச் சார்ந்த செபாஸ்டியன் டி சவ்ஸா என்ற புகைப்படக்காரரும், சிரிராம் வெர்னிகர் என்ற டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையைச் சார்ந்தவரும் எடுத்ததாகக் கூறுகின்றார்கள்.

கேசாப்-இன் இந்த அதிசயப்படத்தை எடுத்த இருவரும், புகைப்படம் எடுத்த வரலாற்றையும், புகைப்படம் எடுக்கும்போது அஜ்மல் கேசாப் எதை தாக்கிக் கொண்டிருந்தான் என்பதையும் சொல்லிடும் வல்லமைப் பெற்றவர்கள். இதனால் 26/11 வழக்கின் முக்கிய சாட்சியங்கள். ஆனால் இந்த இரண்டு புகைப் படக்காரர்களுமே குற்றவாளிகளாக - அடையாள ங்காட்டும் அணியில் சேர்க்கப் படவில்லை.

எனினும் புகைப்படங் களிலுள்ள பல முரண்பாடு களை அஜ்மல் கேசாப்-இன் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் கே.பி. பாவர் சுட்டிக்காட்டவே செய்தார். அவற்றுள் இதுவரை வெளிவராத ஒரு தகவலும் - உண்மையும் உண்டு! அது.

புகைப்படம் எடுத்தவர்களின் கேமராக்களை காவல்துறை ஒருமாதம் கடந்தபின்தான் கைப்பற்றியதாகக் கூறுகின்றார்கள். அதன்பின் சுமார் ஒருவருடம் கழித்துத்தான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படுகின்றது. இதனால் புகைப்படங்களில் தங்கள் விருப்பம் போல் மாற்றி இருக்கின்றார்கள்.

இதிலும் காவல்துறை முட்டாள்தனமாகவே நடந்து கொண்டது. அதையும் அஜ்மல் கேசாப்-இன்

வழக்கறிஞர் ஓர் சுட்டிக்காட்டியே இருக்கின்றார்.

அது, மும்பை ரெயில் நிலையத்தில் அஜ்மல் தன் தோள் பையை கீழே வைப்பதுபோல், டிசவ்சா என்பவர் எடுத்த புகைப்படம் காட்டுகின்றது. சீரிராம் வர்னிகர் எடுத்த புகைப்படம் அவனுடைய தோளில் தொங்குவதைப் போல் காட்டுகின்றது. சிரீராம் விர்னிகர் பையைக் கீழே வைத்து சில மணிதுணிகள் கழித்து எடுத்த படம் என்பதகாகக் கால அளவுகள் காட்டுகின்றன.

ஆகவே இந்தப் புகைப்படங்கள் முன்னுக்குப்பின் முரணானவை. இவையோ, இவற்றை எடுத்தவர்களோ - உண்மை சாட்சியங்களாக மாட்டார்கள். (இது கேசாப்-இன் வழக்கறிஞர் வைத்திடும் வாதம்.)

## சாட்சியங்கள் அனைத்தும் காவல்துறையினரே! ஆனாலும் முக்கிய காவலர்கள் சாட்சியங்களாக இல்லை

26/11/2008 அன்று நடந்த மும்பை தாக்குதல் குறிப்பாக CST என்ற மும்பை ரெயில் நிலைய தாக்குதலில் காட்டப்படும் சாட்சியங்கள் அனைத்தும் காவல்துறையினரே! அல்லாமல் பாதிக்கப்பட்ட பொதுமக்களோ பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்களோ, பயணிகளோ சாட்சியங்களாகக் காட்டப்படவில்லை.

அந்தக் காவல்துறையிலும் பாட்டில் போன்றவர்கள் சாட்சியங்களாகக் காட்டப்படவில்லை.

புகைப்படக்காரர்களை, டிசவ்சாவையோ, வெர்னிகாரையோ பார்த்தாக யாரும் அடையாளம் காட்டவில்லை.

ஆகவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் CST என்ற மும்பை ரெயில் நிலையத்தில் அஜ்மல் கேசாப் இருந்தாரா? என்பதே ஐயத்திற்கிடமானது.

அதேபோல் அஜ்மலின் புகைப்படம் எங்கே வைத்து எடுக்கப்பட்டது என்பதும் தெளிவாகவில்லை.

இவை இப்போது நீதிமன்றத்தில் வாதங்களாக பதிவாகி இருப்பவை. முஷ்ரீஃப் அவர்களின் வாதங்களை முன்வைப்பவை.

யார் இந்த முஹம்மத் அஜ்மல் அமீர் கேசாப்

இவர் பாகிஸ்தானில் பிறந்தவர். முறையான பாஸ்போர்ட் கடவுச்சீட்டின் வழி நேபாள் வந்தவர்; 2006-ல்!

நேபாளத்திற்கு வரும் பாகிஸ்தான் இளைஞர்களை இந்தியாவுக்குக் கடத்தி வந்து தீவிரவாதிகள் என்றும், பாகிஸ்தானின் பயங்கர அமைப்புகளைச் சார்ந்தவர்கள் என்றும், பறைசாற்றுவது இந்திய உளவுத்துறையின் வேலை அந்த வகையில்தான், கேசாப் 2006-ல் இந்திய உளவுத்துறையால் கைது செய்யப்பட்டவன்.

இப்படி 2006-ல் கைது செய்யப்பட்ட கேசாப்-ஐ தான் மும்பை தாக்குதலில் பலிகடாய் ஆக்கிட பயங்கர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

கேசாப் பற்றி நேபாளத்தில் கேட்டால் நேபாள வெளி விவகாரத்துறை அமைச்சகம் அப்படி ஒருவன் இங்கே கைது செய்யப்படவில்லை என்று கூறுகின்றது.

ஆனால் நேபாள உள்துறை அமைச்சகம் அவனைப் பற்றி எந்தத் தகவலும் எங்களிடமில்லை. ஆனால் அவன் நேபாளத்திலிருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என எங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு எங்கள் நீதிபதிகளால், தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அது கூநஉாளேஉயட முசயனேள என்ற முறையான சாங்கியங்கள் பின்பற்றப்படவில்லை என்ற அடிப்படையில்தான் தள்ளுபடி செய்யப்பட்டது அல்லாமல் அது, அஜ்மல் குற்றவாளி என்பதால் தள்ளுபடி செய்யப்படவில்லை என்றும் கூறுகின்றனர்.

அஜ்மல் கேசாப்பிற்காக, பாகிஸ்தானிலிருந்து வந்த வழக்கறிஞர், F.M.ஃபாரூக், அஜ்மல் நேபாள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு இந்திய உளவுத்துறையிடம்

ஒப்படைக்கப்பட்டவர். அபிநவ் பாரத்-இன் குண்டு வெடிப்புகளுக்கும் தாக்குதலுக்கும் அவர் பலியாக்கப்படுகின்றார். ஏனெனில் அப்போது அபிநவ்பாரதத்திற்கும் நேபாள மன்னருக்கும் அத்தனை நெருங்கிய தொடர்புகள் இருந்தன.

### 26/11 ரகுவான்ஷியின் பதவி மாற்றம் ஏன்?

ரகுவான்ஷி மராட்டிய காவல்துறை அதிகாரி. காவல்துறையில் பல முக்கிய பொறுப்புகளை வகித்தவர். இதனால் அவர் மராட்டிய காவல்துறையிலுள்ள ஓர் முக்கிய அதிகாரி எனக் கருதப்படுகின்றார். அபிநவ் பாரத், பஜ்ரங்தள், சனாதன் சாஸ்தா ஆகிய இந்துத் தீவிரவாத அமைப்புகளுக்கு மிகவும் விசுவாசமானவர்.

இவர்தான் முதலில் மராட்டிய தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவராக இருந்தார். இவர் இந்தப் பதவியை வகித்துக் கொண்டிருந்தபோதுதான், நந்தேத் என்னுமிடத்தில் 2006 ஏப்ரல் 4-ல் ஓர் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

இந்தக் குண்டுவெடிப்பு பஜ்ரங்தள் என்ற இந்து தீவிரவாத அமைப்பிற்குச் சொந்தமான கட்டடத்தில் நடந்தது. இங்கே குண்டுகள் தயாரிக்க பாடமும், பயிற்சியும் தந்து கொண்டிருந்த போது தான் குண்டுகள் வெடித்தன.

இதில் இரண்டு பஜ்ரங்தள உறுப்பினர்கள் இறந்தார்கள். இரண்டுபேர் காயம் பட்டார்கள். அதற்கு முன்னால், பல மஸ்ஜித்களில் வெடித்த குண்டுகளை வைத்தவர்கள் தாங்கள்தாம் என்பதை ஒத்துக் கொண்டார்கள்.

இவர்கள் அனைவரையும் தீவிரவாத தடுப்புச் சட்டங்களின் கீழ் கைது செய்திட வேண்டும். நந்தேத் குண்டு வெடிப்பின் முழு விசாரணையையும், மராட்டிய மாநில தீவிரவாதத் தடுப்புப் படை கையிலெடுக்க வேண்டும் என மனித உரிமை ஆர்வலர்களும், முஸ்லிம்களும், நாட்டு மக்களும் கொந்தளித்தபோது, அது தீவிரவாத செயலல்ல மாறாக, அஃதார், சாதாரண நிகழ்வு எனப் புறக்கணித்தவர்.

பின்னர் மக்கள் தந்த நெருக்கடி தாழாமல் மராட்டிய மாநில அரசு, தீவிர தடுப்புப் படையே இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் எனக் கூறிற்று.

ஆனால் ரகுவான்ஷி மேற்கொண்ட விசாரணை மிகவும் பலவீனமானதாக இருந்தது. இதனால், இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 12 பஜ்ரங்தள் - ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். கைது செய்யப்படவிருந்தவர்கள் பிணையைப் பெற்றார்கள்.

இதற்குப் பிறகு எழுந்த கபளீகரங்களில் ரகுவான்ஷி தலை குனிந்தார்.

மாலிகோனில் 2006-ல் நடந்த குண்டுவெடிப்பில், முஸ்லிம்கள் பழி சுமத்தப்பட்டார்கள். ஆனால் நந்தேத் குண்டு வெடிப்பு, அதற்கு முன்னால் பார்னிபா, ஜால்னா ஆகிய இடங்களில் நடந்த குண்டு வெடிப்பு இவையெல்லாம் நந்தேத்தில் தயாரிக்கப்பட்ட குண்டுகளின் கோர தாண்டவம் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

நந்தேத் குண்டு வெடிப்பை முறையாக ஆய்வு செய்திருந்தால், மாலிகோன் 2006 தடுத்திருக்கலாம் என்பதை மாநில அரசு அறியவே அது ரகுவான்ஷியின் தகிடுதத்தங்களை நன்றாக அறிந்தது. ஆகவே அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு கர்கரேயை நியமித்தார்கள்.

கர்கரேயை 26/11-ஐ பயன்படுத்திக் கொலை செய்துவிட்டார்கள். இந்தக் கொலையிலும் ரகுவான்ஷிக்கு முக்கியப் பங்குண்டு. கர்கரேயை அவர் கொலை செய்யப்பட்ட இடத்திற்கு அனுப்பியவரே இந்த ரகுவான்ஷிதான்.

இந்த ரகுவான்ஷிக்கு முன்னரே தெரியும் கர்கரேயை IB என்ற மத்திய உளவுத்துறை கொலை செய்துவிட்டு, தன்னைத்தான் அந்த அடத்தில் அமர்த்த இருக்கின்றார்கள் என்று ரகுவான்ஷி மத்திய உளவுத்துறைக்கும், அதன் நிழல் அமைப்பான அபிநவ்பாரதத்திற்கும் நிறைய நெருங்கிய தொடர்புண்டு. அவர் இரண்டு அமைப்பு களுக்கும் விசுவாச மானவர்.

கர்கரேயின் கொலையில் ரகுவான்ஷியின் பங்கு அதிகம்

என்பது பளிச்செனத் தெரிந்த நிகழ்வு ஒன்று. 26.11.2008 மும்பை தாக்குதலின்போது தெரிய வந்தது.

26.11.2008 இரவு 9.45 மணிக்கு தீவிரவாதிகள் என ஊ ட க ங் க ள ா ல் காட்டப்பட்டவர்கள் மும்பை CST ரெயில் நிலையத்தைத் தாக்கிடத் தொடங்கினார்கள். இன்றளவும் அவர் தரும் தகவல்களின் அடிப்படையில் 10.49 மணிவரை இந்தத் தாக்குதல் மும்பை CST ரெயில் நிலையத்தில் தொடர்ந்தது.

இந்தத் தாக்குதல் நடந்த இரவு 10 மணிக்கு கர்கரே ரகுவான்ஷியைச் சந்திக்கின்றார். அப்போது, குறிப்பாகச் சொன்னால் மும்பை ரெயில் நிலையத் தாக்குதல்கள் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தன.

அப்போது ரகுவான்ஷி கர்கரே அவர்களிடம் தீவிரவாதிகள் மும்பை ரெயில் நிலையத்தைத் தாக்கி முடித்துவிட்டு காமா மருத்துவமனைக்குப் பின்னால் உள்ள ரங்கபவன் தெருவுக்குச் சென்றுள்ளார்கள். நீங்கள் அங்கே செல்லுங்கள் எனக்கூறி அனுப்பியுள்ளார்.

ஆனால், உண்மையில் காவல்துறையின் கூற்றுப்படி, அப்போதும் (இரவு 10 மணிக்கும்) மும்பை ரெயில் நிலையத் தாக்குதல் நிறைவடையவில்லை.

அப்போது தீவிரவாதிகள் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தார்கள். அதன் பின்பும் சுமார் முக்கால் மணிநேரம் குறையாமல் அரைமணி நேரம் கோரமான தாக்குதல்கள் நடந்துக் கொண்டேதானிருந்தது.

அப்படி இருக்க ரகுவான்ஷி எப்படி கர்கரே இடம், தீவிரவாதிகள் ரெயில் நிலைய தாக்குதலை முடித்துவிட்டு ரங்கபவன் தெருவுக்கு வந்து விட்டார்கள்? நீங்கள் அங்கே செல்லுங்கள் எனக் கூறினார்.

அ ப் ப டி ய ா ன ா ல் தீவிரவாதிகள், மும்பை ரெயில் நிலையத் தாக்குதலை முடித்து விட்டு எங்கே வருவார்கள் என்பது முன்னரே ரகுவான்ஷிக்குத் தெரிந்திருக்கின்றது. உண்மையைச் சொன்னால் ரகுவான்ஷியும், மத்திய உளவுத்துறையும் போட்ட திட்டத்தின்படியே தீவிரவாதிகள் நடந்தார்கள் என்பதை அனைவரும் அறிந்திடலாம்.

ர கு வ ா ன் ஷி யி ன் ஆலோசனைப்படி, ரங்கபவன் (லேன்) தெருவிற்கு வந்துவிட்ட கர்கரேயும், அஷோக் காம்தியும், சலாஸ்கரும் இடைவிடாமல் அதிகப் படைகளை அனுப்புங்கள் எனக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால், படைகள் வரவில்லை.

வினிதா காம்ந்தி என்ற கர்கரேயுடன் கொலை செய்ய செய்யப்பட்ட அசாக் காம்தியின் மனைவி பின்னர் மேற்கொண்ட ஆய்வில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலிருந்த படைகள்கூட இந்த மூவரின் (கர்கரே, அசோக் காம்தி, சலாஸ்கர்) வேண்டுகோளை ஏற்று உதவிக்கு வந்திடவில்லை.

இந்த உதவியை ஏற்பாடு செய்தி வேண்டியவர் இந்த ரகுவான்ஷிதான்.

ஆனால் இதே ரகுவான்ஷி தான் 150 காவல்துறையினரை உள்ளடக்கிய 24 அணியை தான் அனுப்பியதாகப் பின்னர் கதை கட்டினார்.

இவர் 150 காவலர்களை உ ண் ை ம யி ே ல ே ய அனுப்பினார் என்றால் அந்தக் காவல்துறை அணிக்குத் தலைமை தாங்கிச் சென்றவர் யார்? என்ற வினாவுக்கு இன்றளவும் ரகுவான்ஷி பதில் சொல்லிடவில்லை.

அப்படி 150 காவலர்கள் கர்கரே முதலானவர்களின் அழைப்பை ஏற்று அங்கே வந்திருந்தால் அவர்களுக்குத் தலைவராக பொறுப்பாளராக ரகுவான்ஷிதான் வந்திருக்க வேண்டும். அப்படியானால் அவர் ரங்கபவன் வீதியில், நின்ற கர்கரே முதலானவர்களுக்கு ஏன் உதவி செய்யவில்லை - காப்பாற்றிடவில்லை.

இந்த வினாக்களை எஸ்.எம். முஷரீஃப் அவர்கள் கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலிலும், வினிதா காம்தி கடைசி புல்லட் வரை என்ற நூலிலும் எழுப்பி உள்ளார்.

இந்த நூல்கள் மொத்தமாக இ ரு ட் ட டி ப் பு ச் செய்யப்பட்டாலும், அவை இப்போது மக்கள் மன்றத்தில் பெரும் செய்திகளாக மாறிவிட்டன. அதனால் ரகுவான்ஷியின் பதவிக்கு ஆபத்து வந்தது.

இதன் விளைவாக

ரகுவான்ஷி முன்னரே எந்தப் பதவியும் இல்லாதவராக ஆக்கப்பட்டிருந்தார். அவர் பெயரளவில் மட்டுமே மராட்டிய தீவிரவாதப் படையின் தலைவராக இருந்தார்.

ரகுவான்ஷி எந்த நேரமும் பதவி நீக்கம் செய்யப்படலாம் என்றொரு நிலை எழுந்தது. இதனால் கலங்கிப் போயிருந்தார் ரகுவான்ஷி. எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலைக்கு வந்தவர். அதைத் தின்றார். அது....

## மும்பையில் முக்கிய அரசு தளங்களைத் தகர்க்க சதியா?

அதுதான் -

இந்தியாவின் எண்ணை மற்றும் எரிவாயுக் கிடங்குகளைத் தாக்கிடத் தயாராக இருந்ததாக இரண்டு அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்தார்.

அப்பாவிகள் - ஏழைகளின் பெயர்கள்

1. அப்துல் லத்தீஃப் ரஷீத், வயது 29, இவர் மும்பையின் பன்திராவிலுள்ள பொற்ராம் பாடா என்ற இடத்தைச் சார்ந்தவர்.
2. இவரது மச்சான் ரியாஸ் அலி இம்தியாஸ், இவர் மும்பையிலுள்ள கோலா பாவன் சவ்ல் என்ற இடத்தைச் சார்ந்தவர்.

எப்போதும் தீவிரவாதிகளாக முஸ்லிம்கள் காட்டப்படும்போது அவர்களுக்கு மற்றொரு பெயரும் கடைபிடித்துவரும் நீண்டகால முறைமை. இதையே நமது உளவுத்துறையின் முகவர்களான பத்திரிகைகளும் நீண்ட நாள்களாகக் கடைபிடித்து வருகின்றன.

1. இந்த வகையில் அப்துல் லத்தீஃப் ரஷீதுக்கு ‘குட்டா’ என்றொரு நாமத்தையும்,
2. ரியாஸ் அலி இம்தியாஸுக்கு ‘ரேசான்’ என்றொரு நாமத்தையும் சாற்றி னார்கள். இந்தப் புனைப் பெயர்கள் அல்லது மாற்றுப் பெயர்கள் அவர் கள் தங்கள் உண்மைப் பெயரை மறைத்திடவும் அதன் மூலம் காவல்துறை யிடமிருந்து தங்களைத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் பயன் படுத் தியதைப் போல் காட்டிக் கொள்கின்றார் கள்.

இந்தக் கைதுகளைச் செய்துவிட்டு ரகுவான்ஷி இந்த இரண்டு அப்பாவிகளும் பல தீவிரவாத தாக்குதல்களை நடத்திடத் திட்டமிட்டி ருந்ததாக நீட்டி முழக்கினார்.

1. பாபா அட்டோமிக் ரிசர்ச் சென்டர் என்ற நமது தொன்மை வாய்ந்த அணு ஆற்றல் ஆராய்ச்சி மையம்.
2. மும்பையில் கடலுக்குள்ளும், கரையோரங்களிலும் நாம் வைத்திருக்கும் பெட்ரோல் - எரிவாயு கிடங்குகளும் எரிவாயு ஆலைகள்.
3. பெட்ரோல் கிடங்குகள் (Fuel Storage Tanks); பெட்ரோல் டாங்குகள்.
4. ஒரு பெரும் அங்காடி
5. ஒரு ஆடை கடைவீதி

ரகுவான்ஷிக்கு நன்றாகத் தெரியும். தான் சொல்பவற்றை மிகையாக ஜோடித்து பத்திரிகைகள் வெளியிடும். அந்த வெளியீடுகளுக்கு அலங்கார வளைவுகளாக அவை வெளியிடும் புகைப்படங்கள் அமையும்.

உடனேயே பிரவீன்சாமி போன்ற யூதர்களின் எடுபிடி எழுத்தாளர்கள் பக்கம் பக்கமாக எழுதுவார்கள்.

இவையெல்லாம் தான் தன் பதவியைத் தக்க வைத்துக் கொள்ளவும், முடிந்தால் பதவி உயர்வைப் பெறவும் பயன்படும் என நினைத்தார்.

ஆனால் அவர் எதிர்பார்த் தது எதுவுமே நடக்கவில்லை. காரணம், அப்துல் லத்தீப் குடும்பத்தவர்கள் வீரமுடன் எழுந்து பத்திரிக்கையாளர் களைச் சந்தித்து உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டினார்கள். அவர்கள் சொல்வதில் உண்மைகளி ருந்தால் பத்திரிகைகளாலும் அவற்றை மறைக்க முடிய வில்லை. பத்திரிகைகளும் அவற்றை வெளியிட்டன.

## யார் இந்தத் தீவிரவாதிகள்

ரியாஸ் அலி இம்தியாஸ், மும்பையிலுள்ள ஒரு ஜவுளிகடையில் பணியாளாக வேலை செய்து வருகின்றான்.

அந்த ஜவுளிக்கடை, தாக்கர்மால் என்ற அங்காடியில் இருக்கின்றது.

அவன் குஜராத்தைச் சேர்ந்த, ஆனால் மும்பையில் வசிக்கும் ஒரு மைனர் பெண்ணை மணந்திட திட்டம் போட்டிருந்தான். இஃது அந்தப் பெண்ணின் பெற்றோர்களுக்குத் தெரிந்து விட்டது. அவர்கள் ஆறு மாதங்களுக்கு முன் காவல்துறையில் புகார் கொடுத்துவிட்டார்கள்.

காவல்துறையினர் ரியாஸ் அலியின் வீட்டுக்கு வந்து பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் திட்டத்தைக் கைவிட்டு விட வேண்டும் அல்லது காவல்துறையின் கோபத்திற்கு ஆளாகிட வேண்டியது வரும் எனக் கூறிவிட்டார்கள்.

ஆனால் குஜராத்தி பெண் ரியாஸ் அலியை விடுவதாக இல்லை. ரியாஸும் அப் பெண்ணை விடுவதாக இல்லை. ஆகவே இந்தத் திருமணம் இப்போது நடந்தே தீரும் என்ற நிலை உருவானது.

இந்தத் திருமணம் அப்போதே நடந்திருக்கும். ஆனால் அந்த குஜராத்தி பெண் அப்போது மைனராக இருந்தாள். இப்போது அவள் மேஜராகிவிட்டாள்.

இந்தத் திருமணத்தைத் தடுக்க நினைத்த பெண்ணின் பெற்றோர்கள். மீண்டும் காவல்துறையினரை அணுகி இருக்கின்றார்கள்.

"ரியாஸ் அலி"யை நிரந்தரமாக சிறையில் வைத்தால்தான் திருமணம் நிற்கும். பெண்ணும் பதறி ஓடும் என்பதால் அவனை நொடியில் தீவிரவாதியாக்கிவிட்டார்கள்.

இந்த உலகமகா தீவிரவாதிகள், அல்கொய்தா முதல் உலகிலுள்ள அத்தனை தீவிரவாதிகளின் கையாளாக இயங்கும் இந்தத் தீவிரவாதிகளின்! பெற்றோர்கள் சாலையோரங்களில் கடைவைத்து வயிறு கழுவுகின்றார்கள் (TOI, மார்ச்சு 15, 2010).

இந்த ஏழைகளை தீவிரவாதிகளாகக் காட்டி தன் பதவியைத் தக்க வைக்கப் பார்த்தார் அது இயலவில்லை.

உண்மையை உணர்ந்த மத்திய அரசு அவரை பணிமாற்றம் செய்திட பரிந்துரைத்தது. ஆனால் மராட்டிய மாநில அரசு மசியவில்லை. அது ரகுவான்ஷி செய்தது பெரிய சாதனை எனப் பீற்றியது.

மராட்டிய மாநில உள்துறை செயலர் இன்னும் ஒருபடி மேலேபோய், தன் தீவிரவாதத் தடுப்புப் படையையும், குஜராத் தீவிரவாதத் தடுப்புப் படையையும் மிகையாகப் பாராட்டினார்.

உடனேயே ரகுவான்ஷி தனது எஜமானர்கள் IB என்ற மத்திய உளவுத்துறையை உதவிக்கு இழுத்தார்.

இந்த அபார தகவலை IB தான் தந்தது என்றும், அதன் அடிப்படையில் நீண்ட நாள்களாக இந்த உலக தீவிரவாதிகளைத் தேடி வருவதாகவும் புருடா விட்டார்.

ஆனால் மத்திய உள்துறை அமைச்சகம் மீண்டும் மராட்டிய அரசை ஏன் இன்னும் ரகுவான்ஷி மீது நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கேட்டது. உடனேயே நடவடிக்கை எடுத்தார்கள்.

ரகுவான்ஷி மராட்டிய தீவிரவாதத் தடுப்புப் படையிலிருந்து மாற்றப்பட்டார்.

ராகேஷ் மாரியா என்பவர் மராட்டிய தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவராகப் பதவி ஏற்றுள்ளார்.

ரகுவான்ஷியின் இடத்தில் வந்துவிட்டதாலேயே ராகேஷ் மாரியா, நல்லவராகிவிட மாட்டார். அவரும் மத்திய உளவுத்துறையின் கையாள். பல மராட்டிய முஸ்லிம்களின் வாழ்க்கையை பாழாக்கியவர்.

இப்படி இந்தியாவில் காவல்துறையும், தீவிரவாதமும் பீடுநடை போடுகின்றன. இந்த அநியாயங்களுக்கெதிராக தங்களால் இயன்றதையெல்லாம் செய்திட வேண்டியது ஒவ்வொரு இந்தியக் குடிமகனதும் கடமை.

இனி...

சாலையோரத்தில் கடைவைத்துப் பிழைக்கும் ரியாஸ் - இவர் குடும்பத்தால் - ரகுவான்ஷி, ராகேஷ் மாரியா, மத்திய உளவுத்துறை ஆகியவற்றை எதிர்த்து நின்றிட இயலாது - நியாய உணர்வு கொண்ட இந்தியக் குடி மக்கள்தாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

**-எம்.ஜி.எம்.**

## அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள்
# காற்று மண்டலம்

காற்று . . . இது இல்லாவிட்டால் மனித வாழ்க்கை ஏது? ஒரு மனிதன் திட உணவே உண்ணாமல் வெறும் திரவ உணவு மட்டும் உட்கொண்டு 382 நாட்கள் உயிர் வாழ முடியும். எதுவுமே சாப்பிடாமல் வெறும் தண்ணீர் மட்டுமே குடித்து அதிகபட்சமாக ஒருவர் 94 நாட்கள் உயிர் வாழ்ந்திருக்கிறார். அட, தண்ணீர் கூட குடிக்காமல் அதிகபட்சம் 18 நாட்கள் உயிர் வாழ முடியும். ஆனால், காற்று இல்லாவிட்டால் ஒருவரது வாழ்க்கை நிமிடக் கணக்கில் முடிந்து விடுகிறது. ராபர்ட் ஃபாஸ்டர் என்பவர் நீரின் அடி ஆழத்தில் மூழ்கியபடி 13 நிமிடங்கள் 45 நொடிகள் மூச்சிழுக்காமல் தாக்குப் பிடித்தது தான் இதுவரை சாதனை அளவு! காற்று மனிதகுலத்திற்கு மட்டுமல்ல, எல்லா ஜீவராசிகளின் ஆதாரம்.

***"தூங்கு கையில் வாங்குகிற மூச்சு***
***சுழிமாறிப் போனாலும் போச்சு"***



**இலக்கியச் சுடர்**
**ரஹ்மத் ராஜகுமாரன்**
**செல் : 9443446903**

காற்று அது ஜீவன், காற்று மண்டலம் நமது பூமியைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. பூமி தவிர்த்த பிற கோள்களில் காற்று மண்டலம் கிடையாது. ஆகவே அங்கெல்லாம் எந்த உயிரினங்களும் உயிர் வாழ வாய்ப்பே இல்லை. காற்று எப்போதுமே சலனமடைந்து கொண்டே இருக்கிறது. இதுதான் அல்லாஹ்வின் ஏற்பாடு!

பூமியைச் சுற்றியுள்ள காற்றுமண்டலம் வட்ட வடிவப் பாதையில் அது நீண்ட கோழி முட்டை வடிவத்தில் காணப்படுகிறது. இந்தக் காற்று மண்டலத்திற்கு ஒரு லட்சம் கி.மீட்டர் நீளமுள்ள ஒரு வால் இருக்கிறது. வாயுக்கள் நிறைந்த இந்த வால் சூரிய கிரகணங்களின் அழுத்தத்தால் ஒன்றுப் படுத்தப்பட்டு உருவாக்கப்பட்டிருப்தாகத் தோன்றுகிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

காற்றில் நைட்ரஜன் என்ற வாயு 78 சதவிகிதம் உள்ளது. பிராணவாயுவில் (ஆக்ஸிஜன்) 21 சதவீதமும், சில ஆபூர்வ வாயுக்களான ஹீலியம், ஆர்கன், நியான், கிரிப்டான் போன்றயெல்லாம் கலந்து 1 சதவீதிம் உள்ளது.

காற்றிலுள்ள ஆக்ஸிஜன் உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் சுவாசிப்பதற்கு ஆதாரமாக உள்ளது. இது மொத்த காற்றில் ஐந்தில் ஒரு பாகம் தான் மற்ற 4 பாகங்கள் முக்கியமாக நைட்ரஜன் வாயுவாகவே உள்ளன.

நைட்ரஜன் வாயு எந்த உயிர்ப் பிராணியும் சுவாசிப்பதற்கு ஒரு சிறிதும் பயன்படாது. அப்போ ஏன் அல்லாஹ் இரண்டையும் கலந்து வைத்தான்? நைட்ரஜன் வாயுவால் பல பயன்கள் உண்டு. தாவர வளர்ச்சிக்கு 'நைட்ரேட் உப்புக்கள்' மிகச் சிறந்த உணவாக உள்ளது.

காற்றிலிருக்கும் நைட்ராஜனிலிருந்த தான் இந்த உப்பு தயாரிக்கப்படுகிறது. மின்னல்களின் வெப்பத்தினால் காற்றிலுள்ள நைட்ரஜன் பிராணவாயுவான ஆக்ஸிஜனன் சேர்ந்து நைட்ரிக் ஆக்செடுகளாக மாறுகின்றது. இவை மழை நீரில் கரைந்து பூமியை வந்தடைகின்றன. பூமியில் இவை நைட்ரேட்டுகளாக மாற்றப்பட்டு தாவரங்களுக்கு உணவாகின்றன.

அல்லாஹ் மின்னல் வெட்டுவது கூட எவ்வளவு நன்மையாக உள்ளது. தாவரங்களுக்கு நைட்ரேட்டுகள் உணவாகிறது. நமக்கும் மற்ற பிராணிகளுக்கும் தாவங்கள் உணவாகிது. ஆக்ஸிஜன் இல்லாமல் எந்த பொருளும் எரியமுடியாது. ஆனால் நைட்ரஜன் தானும் எரியாது. எரிகிற பொருளை எரியவும் விடாது. நைட்ரஜன் ஆக்ஸிஜனுக்கு நேர் எதிரான இயல்பு கொண்டது.

பூமியின் சென்றால், அங்கு காற்றழுத்தம் குறைவாக இருக்கும். ஏனென்றால் மலை உச்சிக்கு மேலே பரவியிருக்கும் காற்று மண்டலத்தின் உயரம் குறைவு. மலை மேல் சமையல் செய்வதாக வைத்துக் கொண்டால், நீர் கொதிவர அதிக நேரம் எடுக்கும். காரணம் காற்றழுத்தம் குறைவு.

இதற்கு மாறாக ஓர் ஆழமான

சுரங்கத்தின் அடியில் சென்றால் அங்கு காற்றழுத்தம் தரைமட்டதிலிருப்பதை விட அதிகமாக இருக்கம்.

தரை மட்டத்தில் சாதாரண காற்றழுத்தம் ஒரு சதுர அங்குலத்திற்கு 15 பவுண்டு என்று சொல்லுகிறோம்.

நமது தலையின் மேற்பரப்பு 40 சதுர அங்குலம் என்றால், நமது தலையின் மேல் 600 பவுண்டு எடையை வைத்தற்கு ஒப்பாக காற்று மண்டலம் நம் தலையை அழுத்திக் கொண்டிருக்கிறது.

இது உண்மையாக இருக்க முடியுமா என்று நாம் சந்தேக்கலாம். ஆனால் இது உண்மை. உண்மையாக இருப்பின் நாம் எவ்வாறு அவ்வளவு எடையை தாங்கிக் கொண்டிருக்கிறோம்? இவ்வளவு பெருஞ்சுமையைச் சுமந்து கொண்டு போவதாக நாம் உணர்வது இல்லையே!

இதற்குக் காரணம் என்னவென்றால் காற்றின் அழுத்தத்தை எதிர்த்துச் சமாளிக்கக் கூடிய அளவு நமது உடலிலுள்ள இரத்தம் உள்ளிருந்து வெளி நோக்கித் தள்ளிக் கொண்டிருப்பதே! சுபஹானல்லாஹ்!

நமது உடலிலுள்ள இரத்தம் உள்ளிருந்து வெளி நோக்கித் தள்ளிக் கொண்டிருந்தால் காற்றே இல்லாத வெற்றிடத்துக்கு மனிதன் செல்லும் போது அவன் உடல் நிலை எப்படியிருக்கும்?

ஒரு பலூனைக் காற்று அடைத்து ஒரு வெற்றிடத்தில் வைத்தால் என்ன ஆகும் தெரியுமா? பலூன் வெடித்து விடும்.

இதே மாதிரி காற்று இல்லாத வெற்றிடத்திற்கு மனிதன் செல்ல நேர்ந்தால் அவன் வெடித்து விடுவான் . . . என்று கூற முடியாவிட்டாலும் இரத்தம் அவன் தேகத்திலிருந்து கசிந்து வெளிவர எத்தனிக்கும்; கண் பிதுங்குவது போன்ற உணர்ச்சிகள் ஏற்படும்; பயங்கரமான மூச்சுத் திணறலுக்கு இலக்காகி அவன் தவிப்பான். இந்நிலையை அல்லாஹ் தன் வேதத்தில் குறிப்பிட்டுள்ளான் என்பதாக,

**அவர்கள் (வானத்தில் ஏறிய பின்னரும்) “எங்களுடைய கண்கள் மங்கிவிட்டன; நாங்கள் சூனியத்திற்குள்ளாகி விட்டோம்” என்றே கூறுவார்கள் குர்ஆன் (15:15)**

சந்திரனில் முதலில் கால் வைத்த நீல் ஆம்ஸ்ட்ராங் இந்த மாதிரி நிலையில் இருந்ததாக ஒரு பேட்டியில் குறிப்பிட்டார்.

இதற்காகத் தான் இக்காலத்தில் விண்வெளி நோக்கிப் பயணம் செய்யும் விஞ்ஞானிகள் வெற்றிடத்தில் காற்றழுத்ததை சமாளிப்பதற்கென தனியாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் இரண்டு உறைகளால் ஆன அந்த உடையின் காற்று தகுந்த அழுத்ததில் அடைக்கப் பட்டிருக்கும். இதனால் அவனுக்கு வெற்றிடத்தின் பயங்கர உணர்ச்சி இருக்காது.

ஒலியைப் பரப்புவதற்கு ஏற்று சாதனமாகக் காற்று மண்டலம் அமைந்திருக்கிறது. காற்றே இல்லாத வெற்றிடத்தில் ஒருவர் பேசுவது மற்றவருக்கு கேட்காது. சந்திரனில் ஒருவருடன் ஒருவர் உரையாட முடியாது! ஒருவர் பேசுவது மற்றவர் காதுகளில் விழாது. ஏனெனில் சந்திரனில் காற்று மண்டலம் கிடையாது. இதனால் பறவைகளால் பறக்க முடியாது. நம்மைப் போல் அவை நடந்து தான் செல்ல வேண்டும். நாம் கூட நடப்பதாக இருந்தால் கூட குதித்து குதித்து தான் நடக்க முடியும்.

காற்று மண்டலம் இல்லா சூழ்நிலையில் சாதாரண ஆகாய விமானப் பயணத்தைப் பற்றி கனவு காணக் கூட முடியாது. விண்வெளிப்பயணத்தின் போது ராக்கெட்டில் செல்லும் மனிதன் காற்று மண்டலத்தைத் தாண்டிச் செல்லும் போது காற்றழுத்ததைச் சமாளிப்பதற்கான சாதனங்கள், விண்வெளியில் பயணிக்க வேண்டிய வாகனங்களுக்கு தக்க ஆற்றல், விண்வெளியில் காற்று மண்டலம் இல்லாத சூழ்நிலையைச் சமாளிப்பதற்கான மனித ஆற்றல் இவைகளை பெற்றிருக்க வேண்டும் என்பதாக குர்ஆனில் அல்லாஹ்

**மனித, ஜின் கூட்டத்தார்களே! நீங்கள் வானங்கள் பூமியின் எல்லையைக் கடந்து சென்றுவிட உங்களால் கூடுமாயின் அவ்வாறு சென்றுவிடுங்கள். ஆயினும் (அவைகளை ஆட்சி புரியக் கூடிய) மிகப் பெரும் ஆற்றலைக் கொண்டே தவிர நீங்கள் செல்ல முடியாது. குர்ஆன் (55:33)**

பூமியானது பகல் நேரங்களில் கடலைவிட எளிதாக வெப்பமடைகின்றது. இதனால் தரைக்கு மேலுள்ள காற்று எளிதாகச் சூடேறி மேலே உயர்ந்து விடுகின்றது. காற்று கடலிலிருந்து தரையை நோக்கி வீசுகின்றது. இதை தான் ‘கடற்காற்று’ என்று கூறுவர். கடல் காற்று பகல் நேரங்களில் கடலிருந்து தரையை நோக்கி வீசுகின்றது. இரவில் பூமி, கிரகித்த வெப்பத்தை கடலை விட எளிதில் வெளிவிடுகிறது. இதனால் தரைக்கு மேலுள்ள காற்று கடலுக்கு மேல் உள்ள காற்றைவிட அதிகமாகக் குளிர்ந்து விடுகின்றது.

ஆகவே தரைக்கு மேலுள்ள குளிர் காற்று தரையிலிருந்து கடலை நோக்கி வீசுகின்றது இதனைத் ‘தரைக் காற்று’ என்று கூறுவர்.

இவ்வாறாக கடற்காற்று பகல் நேரங்களிலும், தரைக் காற்று இரவு நேரங்களிலும் வீசுவதைப் பயன்படுத்தி மீனவர்கள் பாயமரக் கப்பல்களை செலவு எதுவுமின்றி எளிதாகக் கடலில் செலுத்தி மீன் பிடிக்கும் பணியினைச்

செய்து வருகிறார்கள். மீன் இருக்கும் இடங்களை அடைந்ததும் மீனவர்கள் பாய்மரங்களைச் சுருட்டிக் கட்டி விடுவார்கள்.

பகலில் தரைக் காற்று கடலை நோக்கி வீசுவதால் பாய்மரக் கப்பல்கள் கடலை நோக்கி விரைகின்றது. மாலையில் கடற்காற்று தரையை நோக்கி வீசுவதால் அவர்கள் தங்கள் பாய்மரக் கப்பல்களை எளிதாகத் தரையை நோக்கிச் செலுத்தி வர முடிகிறது. இதையே குர்ஆனில் அல்லாஹ்.

**காற்றுகளைத் திருப்பி விடுவதிலும் அறிவுடைய ஜனங் களுக்கு(ப் பல) அத்தாட்சி கள் இருக்கின்றன. குர்ஆன் (45:5)**

இதே தத்துவத்தில் தான் பருவக்காற்றுகளும் வீசுகின்றன. மழையைக் கொண்டு வருகின்றன. பூமி செழிக்கின்றன. இப்படி பல வழிகளிலும் காற்று மனித குலத்திற்கு ஏன் ஜீவ உலகத்திற்கு அல்லாஹ்வுடைய அருளாக உள்ளது. ஆனால் மனிதன் இந்தக் காற்றைப் படுத்தும் பாட்டை கொஞ்சம் ஆய்வு செய்வோம்.

மனிதனின் நாகரிக வாழ்க்கை முறை, அவனது அபரிமிதமான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள மேற்கொள்ளும் இயற்கைக்கு முரணான செயல்களால் காற்று மண்டலம் பெருமளவு மாசு பட்டு வருகிறது. ஏராளமான விஷ வேதிப் பொருள்கள் இடைவிடமல் கலப்படுகின்றன.

தமிழ்நாட்டில் கடலூர், தூத்துக்குடி, மேட்டூர் போன்ற நகர்களில் பெரிய ரசாயன ஆலைகள் உள்ளன. கடலூர் சிப்காட் மற்றும் அதற்கு அருகில் அமைந்து இருக்கும் 20க்கும் மேற்பட்ட பன்னாட்டுத் தரம் வாய்ந்த ரசாயன ஆலைகளால் காற்றும் மாசுபடுவதை அளவிட முடியாத நிலைக்குச் சென்று கொண்டு இருக்கிறது. சிப்காட் சுற்றுச் சூழல் கண்காணிப்பு குழு 2004 செப்டம்பரில் ''கேஸ் டிரபிள்'' என்ற பெயரில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

சுற்றுப்பட்ட 20 கிராமங்களில் பரவும் காற்றை வெவ்வேறு நேரங்களில், வெவ்வேறு பகுதிகளில் 'பக்கெட்' என்ற கருவியில் நிரப்பி அமெரிக்க சுற்றுச் சூழல் ஆர்வலர் 'டெனிலார்ஸன்' மூலமாக, அங்குள்ள ஆய்வகத்துக்கு அனுப்பி, கிடைத்த தகவல்களை பார்க்கும் போது, கொஞ்சம் நமது நிலை தடுமாறத்தான் செய்கிறது.

இப்பகுதி மக்கள் சுவாசிக்கும் காற்றில் அமெரிக்க தர நிர்ணயப்படி அங்கீகரிக்கப் பட்ட அளவை விட மிக அதிக அளவில் 22 வேதியில் பொருள்கள் இருப்பதாக அறிக்கை தெரிவித்தது.

22,973 மடங்கு டை குளோரோ ஈத்தேன், 11,538 மடங்கு கார்பன்–டெட்ரா குளோரைடு, 5,119 மடங்கு குளோரோ ஃபாம், 905 மடங்கு மெத்திலின் குளோ ரைடு, 874 மடங்கு ஹைட்ரஜன் சல்ஃபைடு, 709 மடங்கு டிரை குளோரோ எத்திலின் இருப்பதை அந்த அறிக்கை சுட்டிக் காட்டியது.

இந்த விஷ வேதிப் பொருள்களால், கண் பார்வை, நரம்பு மண்டலம், தோல், கல்லீரல், மூச்சுக் குழாய், நுரையீரல், சிறுநீரகம் உள்ளட்டவை பாதிக்கப்படும். அனைத்திற்கும் மேலாக புற்று நோய் ஏற்படும் என்பதும் மருத்துவ விஞ்ஞானிகளின் கருத்து.

இந்த அறிக்கையை நன்னேற்பு மனுவாக ஏற்று, சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு ஒன்றை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, விளக்கம் கேட்டு தமிழக அரசுக்கும் நோட்டீஸ் அனுப்பியது.

4 ஆண்டுகள் கடந்து விட்டன. எனினும் இப்பகுதி காற்று மண்டலத்தில் முதல் ஆய்வறிக்கையில் கண்டறிப்பட்ட மோசமான வேதிப் பொருள்கள் இன்னமும் கலந்து கொண்டிருப்பது உறுதி செய்யப்பட்டு இருக்கிறது.

இந்த அறிக்கைகள் மீது நடவடிக்கை எடுப்பது என்றால், இந்தியாவில் அதற் கென தர நிர்ணயம் ஒன்று இருக்க வேண்டும். அதுதான் இல்லை. தர நிர்ணய அளவு ஒன்றை உருவாக்க மத்திய அரசு 2 ஆண்டுகளுக்கு முன் குழு ஒன்றை ஏற்படுத்தியது. அதில் அரசு அதிகாரிகள், தொழிற் சாலைகளின் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனரே தவிர மக்கள் பிரதிநிதிகள், மருத்துவர்கள், நடுநிலையான தொழில் நுட்ப வல்லுநர்கள் இடம் பெறவில்லை.

தர நிர்ணயம் இல்லாமல், எதைக் கொண்டு காற்று மண்டலத்தின் மாசை அளவிடுவது? யாருக்கும் தெரியவில்லை. இதற்கு விடிவு காலம் பிறப்பது தான் எப்போது?

காற்றில் 2000க்கும் மேற்பட்ட காற்று வகைகளைப் பற்றி குறிப்பிடுகிறார் விஞ்ஞானி L. PROKH.

தமிழ்நாட்டில் காற்றை ரொம்பப அழகாக வகைப்படுத்தி இருக்கிறார்கள் அக்கால மக்கள்.

***மேற்கே இருந்து வீசுவது கோடை;***

***கிழக்கே இருந்து வீசுவது கொண்டல்;***

***தெற்கே இருந்து வீசுவது தென்றல்;***

***வடக்கே இருந்து வீசுவது வாடை***

இப்போது சுவாசிக்கும் கற்றில் விஷம். இந்தக் காற்றை என்ன பெயர் சொல்லி அழைக்க?

***'அல்லாஹ் காற்றை அருளியதையும் பாருங்கள்;***

***மனிதன் அவற்றை அலட்சிப்பதையும் பாருங்கள்.'***

# திருச்சியில் மஜ்லிஸ் நிசா நிகழ்ச்சி

13.3.2010இல் திருச்சியில் பெண்களின் முஸ்லிம் இயக்கமான மஜ்லிஸ்நிசா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் டாக்டர்.ஆயிஷா அவர்கள் இஸ்லாமிய இயக்கப்பணிகளில் பெண்களின் பெருஞ்சேவை என்ற தலைப்பில் உரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டார்கள்.






M.I. Raseen Hameed
(Partner)

கனவில் கண்ட
காணி நிலம் வேண்டும் இறைவா !
அதில் நாங்கள் கலங்காமல்
இருக்கவேண்டும் இறைவா !!!



Autoor Haji.
S.H. Mohamed Iqbal
(Chief Executive )

இதோ எங்களிடம் மக்களின் நம்பிக்கை நாணயம் பெற்ற நிறுவனம்

RICHFIELD PROPERTIES LAND DEVELOPERS

Neelankarai, Chennai - 41. Cell: 93821 50535 / 9841487891 e-mail: richfield786@gmail.com

# MS OFFICE - STYLE TOOLS

அடுத்ததாக Styleகளைப் பற்றி பார்ப்போம்.

Style- என்பது Readymadeஆக ஒரு சில Formatகளை கொண்டது. அதனை தேர்வு செய்வதன்மூலம் அந்த ஃபார்மட் நீங்கள் செலக்ட் செய்துள்ள




பகுதிக்கு வந்து விடும். உதாரணத்திற்கு நீங்கள் அடிக்கடி ஒரு சில ஃபார்மட்களை உங்கள்பணி நிமித்தம் உபயோகிப்பவர் என வைத்துக்கொள்வோம் அதில் நீங்கள் Fontஐ Times New Romanல் வைப்பீர்கள் என வைத்துக்கொள்வோம். மேலும் அதில் எழுத்தின்கலரை சிகப்பிலும் எழுத்தின் அளவு 14 எனவும் உங்களுக்கு தேவைப்படுகிறது என்றால் அதனை நீங்கள் ஒரு Styleஐ உருவாக்கி அதில் பதிந்து வைத்துக்கொள்ளலாம். பின்னர் எப்பொழுதெல்லாம் உங்களுக்கு அந்த Style தேவைப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அந்த ஸ்டைலை தேர்வு செய்து கொள்ளலாம்


படம் 1ல் உள்ள Change Styles என்பதற்கு இடப்புறமுள்ள சிறிய பட்டனை அழுத்தினால் கீழ்காணும் திரை வரும்

அதில் Save Selection as a




New Style என்பதை தேர்வு செய்து அதில் உங்களுக்கு தேவையான பெயரை தந்து அதனை Save செய்து கொள்ளுங்கள் பின்னர் Modify என்பதை தேர்வு செய்யுங்கள் தற்போது பின்வரும் திரை வரும்

அதில் தேவையான Font. Font Size, Bold, Italic போன்றவற்றை தேர்வு செய்யுங்கள் Font




கலருக்கு Automatic என்று இருப்பதில் தேர்வு செய்து வெளிவரக்கூடிய கலரில் தேவையான கலரை தேர்வு செய்யுங்கள் மற்ற Paragraph Setting, Border Setting, Bullett and Number Setting போன்றவற்றை Formatல் தேர்வு செய்து கொள்ளலாம் இப்போது நீங்கள் தேர்வு செய்த பெயரில் ஒரு ஸ்டைல் உருவாகியிருப்பதை காணலாம். நீங்கள் எப்போதெல்லாம் அந்த ஸ்டைலில் கிளிக் செய்கிறீர்களோ அப்போதெல்லாம் அந்த ஸ்டைல் நீங்கள் தேர்வு செய்துள்ள பகுதிக்கு வந்து விடும் இதைத்தவிர அதில் ஏற்கனவே தரப்பட்டுள்ள சில ஸ்டைல்களையும் நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்

அடுத்ததாக Find Replace பற்றி காணலாம்

Find Option உங்கள் டாகுமென்டில் உள்ள ஒரு வார்த்தையை தேட உதவுவது. நீங்கள் தேட விரும்பும் வார்த்தையை Findஐ தேர்வு செய்து டைப் செய்யுங்கள். உதாரணத்திற்கு india என்ற வார்த்தையை உங்களுடைய டாகுமென்டில் தேட விரும்பினால் Findஐ தேர்வு செய்து India என டைப் பின்னர் Find என்பதை கிளிக் செய்யுங்கள். உங்களுடைய டாகுமென்டில் India என்ற வார்த்தை எங்குள்ளதோ அந்த இடத்திற்கு உங்களுடைய கர்சர் (Cursor) சென்று விடும். மீண்டும் மீண்டும் Findஐ கிளிக் செய்தால் உங்கள் டாகுமெண்டில் அடுத்தடுத்த இடங்களில் India எங்கே உள்ளதோ அங்கேயெல்லாம் தானாக சென்றுவிடும்

Replace என்ற Option ஒரு குறிப்பிட்ட வார்த்தையை வேறொரு வார்த்தையை கொண்டு மாற்ற உதவும். படத்தில் உள்ளபடி Replace என்பதை தேர்வு செய்தபின் எந்த வார்த்தையை மாற்ற வேண்டுமோ அதை Find What என்ற இடத்திலும் எந்த வார்த்தையை கொண்டு மாற்ற விரும்புகிறீர்களோ அதை Replace with என்பதிலும் டைப் செய்தபின் Replace என்பதை கிளிக் செய்தால் நீங்கள் டாகுமெண்டில் எந்த இடத்தில் இருந்தீர்களோ அதற்கு அடுத்து எங்கு அந்த வார்த்தை வருகிறதோ அந்த ஒரு வார்த்தை மட்டும் Replace ஆகும். இதுவே Replace All என்பதை தேர்வு செய்தால் உங்கள் டாகுமெண்டில் எந்தெந்த இடத்திலெல்லாம் Find What ல் நீங்கள் கொடுத்துள்ள வார்த்தை வருகிறதோ அந்த இடத்திலெல்லாம் நீங்கள் கீழே கொடுத்துள்ள வார்த்தையை கொண்டு மாற்றிவிடும்


குறிப்பு - Replace Allஐ சற்று கவனத்துடன் உபயோகிக்கவும்

Goto என்பது உங்கள் டாகுமென்டின்





எந்த பகுதிக்கு செல்லவேண்டும்என்பதற்கானது. உதாரணத்திற்கு பக்கம் 10ற்கு செல்ல வேண்டுமென்றால்Page என்பதை தேர்வு செய்து 10 என்பதை பக்கத்தில் டைப் செய்து Goto என்பதை கிளிக் செய்தால் போதுமானது.

புக்மார்க் (Book Mark) என்பது நீங்கள்ஒரு பெரிய புத்தகத்தை படிக்கும்போது சிலபக்கங்கள் படித்து முடித்தவுடன் அந்த




பக்கத்தை நினைவு கொள்ள ஒரு பேப்பரோ அல்லது நூலோ அடையாளத்திற்கு வைப்பீர்கள் அல்லவா அதைப்போன்றது.




உதாரணத்திற்கு நீங்கள்உங்கள்டாகுமெண்டின் இருபதாவது பக்கத்தில் நான்காவது வரியில் ஒரு புக்மார்க் உருவாக்க விரும்பினால் அந்த வரியை தேர்வு செய்து கொண்டு மேலே உள்ள மெனுவில் Insert □ Bookmark என்பதை தேர்வு செய்து அதற்கு சம்பந்தமான ஒரு பெயரை கொடுங்கள் பின்னர் Add என்பதை தேர்வு செய்யுங்கள்.

இதன்பின் எப்பொழுது உங்களுக்கு அந்த இடத்திற்கு செல்லவேண்டுமோ அப்போது Goto என்பதை தேர்வு செய்து பின்னர் புக்மார்க் என்பதை தேர்வு செய்யுங்கள் நீங்கள் உருவாக்கி வைத்துள்ள புக்மார்க்குகளில் எந்த புக்மார்க்கிற்கு செல்லவேண்டுமோ அதை தேர்வு செய்து Goto என கொடுத்தால் அந்த இடத்திற்கு சென்றுவிடும்.

பென் டிரைவ்களால் ஏற்படக்கூடிய Autorun.inf என்ற வைரஸ் உங்களுடைய கம்ப்யூட்டருக்கும் தொற்றிக் கொண்டு உங்கள் கம்ப்யூட்டரின் ஏதாவதொரு டிரைவ்களை (உதாரணத்திற்கு D:) திறக்கும் போதெல்லாம் அதில் Openwith என காட்டும். இந்த பாதிப்பில்லாத கம்ப்யூட்டர்களில் இது சாதாரணமாக திறந்துவிடும். இதை எந்த Antivirusகளும் பொதுவாக கண்டுபிடிப்பதில்லை. இந்த வகை பாதிப்பினை நீக்குவது சுலபமே.


இவ்வாறு செய்ய முதலில் Start □ Run என்பதை தேர்வு செய்யுங்கள். தெரியக்கூடிய Ms Dos Screenஇல் முதலில் உங்களுக்கு எந்த டிரைவ் பாதிக்கப்பட்டுள்ளதோ அந்த டிரைவ் எழுத்தை உதாரணத்திற்கு D: என்பதை டைப் செய்து Enter கீயை தட்டுங்கள். பின்னர்வரக்கூடிய திரையில் பின்வரும்கட்டளையை டைப்செய்து என்டர் கீயை தட்டுங்கள்.

attrib □r □h □s autorun.inf

del autorun.inf

இவ்வாறு கொடுத்தவுடன் உங்கள் கம்ப்யூட்டர் autorun வைரஸால் பாதிக்கப்பட்டிருந்தால் உடனே அந்த file deletere ஆகி விட்டதாக செய்தி வரும். இல்லையெனில் file not found என்ற செய்தி தான் வரும். இதன் பின் உங்கள் கம்ப்யூட்டரை Restart செய்யுங்கள். இப்பொழுது பாதிக்கப்பட்ட அந்த டிரைவை திறந்தால் ஒழுங்காக திறக்கும் இதே போல பாதிக்கப்பட்ட மற்ற டிரைவ்களையும் அந்தந்த டிரைவுக்குள் சென்று அதாவது Dos Mode சென்றவுடன் D: என கொடுப்பதற்கு பதிலாக பாதிப்புள்ளாகி இருக்கும் டிரைவின் எழுத்தை கொடுத்து திறந்து autorun.inf fileஐ delete செய்தால் இந்த பாதிப்புக்கள் அந்த டிரைவ்களிலிருந்தும் நீங்கிவிடும்.

இவ்வாறு வரக்கூடிய autorun வைரஸை தடுக்க உங்கள் பென்டிரைவை கம்ப்யூட்டரில் மாட்டியவுடன் Open File என்று வந்து நின்றால் அதன் வழியாக திறக்காதீர்கள். அதற்கு பதிலாக உங்கள் பென்டிரைவ் G: என்று வைத்துக்கொள்வோம். நான் முன்னரே சொன்னது போல் Start – Run என்பதை தேர்வு செய்து அதில் அந்த டிரைவ் எழுத்தை அதாவது G: என்பதை டைப் செய்து OK கொடுங்கள் இவ்வாறு செய்தால் அந்த பென்டிரைவ் திறந்துவிடும். அதன் பின் அந்த டிரைவில் உள்ள Fileகளை உபயோகித்தால் இந்த Autorun.inf என்ற வைரஸிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.



தொடர் :10

## புதைக்கப்பட்ட மக்கள்! மறைக்கப்பட்ட வரலாறுகள்!

# பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை!

டாக்டர் அங் சுவீ

தமிழ் வடிவம் : மு.குலாம் முஹம்மத்

பாலஸ்தீன முஸ்லிம்கள் தங்கள் சொந்த நாடான பாலஸ்தீனத்திலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டார்கள்

யூதர்கள் அமெரிக்காவின் பின்பலத்தோடு கட்டவிழ்த்து விட்ட அநியாயங்களும் தீவிரவாதங்களுமே காரணம்.

அவர்களில் ஒரு பகுதியினர் தாம். லெபனானில் வந்து குடியேறினார்கள். லெபனானில் ஏற்படுத்தப்பட்ட அகதிகள் முகாம் தான் ஷாப்ரா, ஷத்திலா என்பவை.

இந்த அகதிகள் முகாம்களையும் அடிக்கடி தாக்குதலுக்கு உள்ளாக்கினார்கள் யூதர்கள் - இஸ்ரவேலர்கள்.


கேட்டால் அகதிகள் முகாம்கள் தீவிரவாதிகளின் கொட்டடிகள் எனக் காரணம் சொன்னார்கள்.

உண்மையில் அகதிகள் முகாம்களில் தீவிரவாதிகளோ, இஸ்ரேலையோ யூதர்களையோ தாக்கிடும் பெரும்படை இருக்கவில்லை. மாறாக தங்களைத் தாக்கவரும் யூதர்களின் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் வெறும் கையால் எதிர்கொண்டவர்கள் உண்டு. அவர்கள் சிறுவர்கள் ஆண்கள் பெண்கள் என அனைத்து தரப்பாரும் உண்டு.

இப்படித் தங்களைத் தற்காத்துக் கொண்ட ஆண்களை தீவிரவாதிகள் என்றும் PLO என்ற பாலஸ்தீன விடுதலைப்படையைச் சேர்ந்தவர்கள் என்றும் பிரச்சாரம் செய்தார்கள் இஸ்ரவேலர்கள் அல்லது யூதர்கள். இதற்கு அமெரிக்க ஊடகங்களும், உலகின் இதரப்பகுதியில் இயங்கிடும் ஊடகங்களும் பெருமளவில் உதவிகளைச் செய்தன.

இந்தப் பிரச்சாரத்தைப் பயன்படுத்தியே லெபனானிலுள்ள ஷாப்ரா, ஷத்திலா அகதிகள் முகாம்களிலிருந்த ஆண்களை அப்புறப்படுத்தி விட்டார்கள். அங்கிருந்த சிறுவர்களைக் கூட அப்புறப்படுத்திவிட்டார்கள்.

பெண்களும், பெண் குழந்தைகளும் மட்டுமே இருந்த அகதிகள் முகாமை இப்போது முழு அளவில் தாக்கிடத் தொடங்கிவிட்டார்கள்.




இந்த அவலநிலையிலும் இறந்தவர்கள் போக வாழ்ந்த பெண்கள் காட்டிய நெஞ்சுரம் எழுதிடக் கோடி ஏடு வேண்டும்.

அதில் சில பெண்கள் தாம் காஸா மருத்துவமனைக்கு அடைக்கலம் தேடி ஓடி வந்தார்கள். ஆனால் காஸா மருத்துவமனையோ போர்களம் போல் காட்சி தந்தது, அறுந்த நரம்புகள், முறிந்த எலும்புகள் குண்டடிகளால் சிதறுண்டவர்களின் ஓலம், துணைக்கு வந்தோரின் ஒப்பாரி, இவற்றினூடே

இயன்றதையெல்லாம் செய்திடத் துடிக்கும் அஜீசா ஹாலித், ஆங் சுவீ போன்ற உயர்ந்த உள்ளங்களுக்குச் சொந்தக்காரர்களின் மருத்துவம் இப்படி அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது.

இதனை பார்த்த பல பாலஸ்தீன பெண்கள், காஸா மருத்துவமனைஇனி யூத குண்டுகளுக்கு இரையானோரின் இருப்பிடமாக இருக்கட்டும். இனி அது எந்த நிலையிலும் நமது இருப்பிடமாக இருக்கவேண்டாம், நாம் முடிந்த மட்டும் கிடைப்பதைக் கொண்டு யூதர்களை எதிர்த்து போர் புரிவோம், வருவதை எதிர்கொள்வோம் எனப் புறப்பட்டதில் எந்த ஆச்சர்யமுமில்லை.

வரலாறு முழுவதும், குறிப்பாக பாலஸ்தீன முஸ்லிம்களின் வரலாறு முழுவதும் இப்படி வீரம் நிறைந்த மங்கைகளின் தியாகங்கள், தைரியங்கள் நிரம்பிக் கிடக்கின்றன.

பல பெண்கள் போர்க்களம் நோக்கி விரைந்து சென்றாலும், காஸா மருத்துவமனையை நோக்கி வந்த காயம்பட்டவர்களின் எண்ணிக்கை கிஞ்சிற்றும் குறைந்திடவில்லை. உண்மையைச் சொன்னால் இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றது.

ஏனெனில் இப்போது யூதர்கள் வீடுகளுக்குள் புகுந்து குழந்தைகள் முதல் அனைவரையும் மிகவும் பக்கத்திலிருந்து கொலை செய்து கொண்டிருந்தார்கள்.

மரணத்தின் கோரப்பிடியிலிருந்து அல்லது யூதர்களின் தாக்குதலிருந்து தப்பித்திட விழைந்தோர் கடைசிப் புகலிடமாக பார்த்தது காஸா மருத்துவ மனையைத் தான்.

ஆகவே வந்து குவிந்தோர் எண்ணிக்கை பல்கிப்பெருகிற்று. அஜீஸா உட்பட அனைவரும்

செய்வதறியாது திணறி னார்கள்.

மருத்துவமனையில் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருள்கள் தீர்ந்துபோயின.

உண்மையைச் சொன்னால் உணவுப் பொருள்களிருந்த கிட்டங்கிகளில் இப்போது காயம்பட்டவர்கள் சிகிச்சை க்காக காத்துக்கிடந்தார்கள்.

மருத்துவர்களாகிய நாங்களும் எங்களால் இயன்றவற்றையெல்லாம் செய்துக் கொண்டிருந்தோம்.

சாதாரணமாக நான்கு மணி நேரங்கள் எடுத்துக் கொள்ளும் ஒரு ஆப்ரேஷனை அறுவை சிகிச்சையை நாங்கள் இரண்டு மணிநேரத்தில் முடித்தோம்.

சிகிச்சையின் தரம் பயங்கரமாக அடிவாங்கிற்று ஆனால் எங்கள் கணிப்பின்படி, காப்பாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமானது.

இப்படி விறுவிறுப்பாக நாங்கள் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் எங்களால் இன்னொன்றையும் உணர முடிந்தது. நாங்கள் எட்டிப்பிடித்து சிகிச்சை செய்ய முடியாமல் போனதால் இறந்தவர்களின் எண்ணிக்கை பல்கிப்பெருகி கொண்டே இருந்தது.

அதைக்கண்டு கண்ணீர் சிந்தாமல் இருக்கவியவில்லை.

என்னைப்போலவே என்னுடன் பணிசெய்த திறமைமிகு மருத்துவர்களான மிர், டாக்டர்



பால்மோரிஸ் டாக்டர் பெர் நார்வேயிலிருந்து வந்த தன்னார்வ மருத்துவர்கள் ஜெர்மனியிலிருந்து வந்த மருத்துவர்கள் இவர்கள்யெல்லாம் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

இரவெல்லாம் சிகிச்சை செய்தோம். நாங்களும் தூங்கிட வில்லை. எங்களுக்கு உதவிக் கொண்டிருந்த தாதிப்பெண்களும் தூங்கிடவில்லை.

ஆனாலும் இஸ்ரவேலர்களின் அதிவேக விசைதுப்பாக்கிகளால் பிணமாக்கப்பட்டவர்கள் போக ஊனப்பட்டவர்களை எங்களால் பெரிதாகக் காப்பாற்றிட இயலவில்லை.

பிணங்குவிக்கும் இஸ்ரவேலர்களின் வேகத்திற்கு எங்களால் ஈடுகொடுக்கஇயலவில்லை.

ஒரு நாள் முழுக்க இரவும் பகலும் தூங்கிடவில்லை. உடல் தானாக தள்ளாடும் நிலை. எங்களால் எட்டிப்பிடிக்க முடியாமல், சிகிச்சை தரமுடியாமல் போனதால் எங்கள் கண்களின் முன்னாலேயே பிணமாகும் மழலைகள். அவர்களைப் பார்க்கும் கண்கள் உருக்கும் நீர். நெகிழும் நெஞ்சம் என்னே அவலம் இப்படி அல்லாடிக்கொண்டிருந்தபோது டாக்டர் பெர் என்னிடம் வந்தார்.

சற்றே ஓய்வெடுத்துக்கொள்

கேட்கும் துப்பாக்கிச் சப்தங்களை பார்க்கும் போது காயம் பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகிடும் நிலையே தெரிகின்றது என்றார்

ஆமாம் சற்று ஓய்வு தேவைப்படுகின்றது. நீங்கள் ஓய்வெடுத்தீர்களா என்றேன்.

ஆமாம் சற்று தூங்கி விட்டுத்தான் வந்தேன் என்றார்.

இப்போது வெளிநாடுகளி லிருந்து வந்த இன்னும் சில மருத்துவர்கள் அங்கே வந்தார்கள்.

நாம் இரண்டாகப் பிரிந்து கொள்வோம்.

ஒரு பகுதியினர் சற்று ஓய்வெடுப்போம்.

இன்னொரு பகுதியினர் சிகிச்சையை மருத்துவத்தை தொடருவோம் என்றேன்.

அதேபோல் தாதிப்பெண்களையும் இரண்டு அல்லது மூன்று குழுக்களாகப்பிரிந்து ஓரிரு குழுக்களை ஓய்வெடுக்கச் சொல்வோம் என்றேன்

ஆனால் என்னையும் அறியாமல் அஜீஸா எனக் கேட்டேன் என்ன ஆச்சர்யம் அனைவர் கண்களிலும் கண்ணீர்.

திகைத்துப்போனேன் நான்

பதறியவளாக என்ன ஆச்சு என்றேன்

ஓய்வு என்பது தான் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றது அவள் உழைத்து கொண்டிருக் கின்றார்கள்

வயதையும் காலத்தையும் மிஞ்சி உழைத்துக் கொண்டிருக் கின்றாள் என்று நார்வே மருத்துவர் சொன்னார் தன் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு.

பெண்ணினத்தின் பெரும்பேறே நீ வாழ்க ஏனெனில் என்னைப்போலவே எல்லோருடைய ஆத்மாவிலும் அழகிய இடத்தைப் பிடித்திருக்கின்றாய் உன் அயராத உழைப்பால் என உள்ளூர பெருமிதம் கொண்டேன்.

பின்னர் சற்று ஓய்வெடுக்கச் சென்றேன்.

இரண்டு மணி நேரம் தூங்கி இருப்பேன்.

பெர் வந்து என்னிடம் சற்று வா நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கின்றது என்றார்

நான் உடனேயே எழுந்தேன் என்னவென்று கேட்டேன்.

பதில் சொல்லவில்லை பெர்

நடந்து கொண்டே இருந்தார் நான் அவருடன் சென்றேன் வழியெல்லாம் காஸா மருத்துவமனையின் படிகட்டுகளிலெல்லாம் காயம் பட்டவர்கள் சிதறி கிடந்தார்கள்.

எங்களால் எட்டிட முடியாதவர்களெல்லாம் நாங்கள் பிணங்களாகவே பார்த்தோம்

பிணவறை நிரம்பிற்று

உணவுக் கூடத்தில் எதுவுமில்லை

அங்கேயும் மக்கள் புகுந்து தங்கிடத் தொடங்கிவிட்டார்கள்

காயம்பட்டவர்களை நாங்கள் மெத்த சிரமத்தோடுதான் கடந்து சென்றிட வேண்டியதிருந்தது

அவர்கள் எங்களிடம் தங்கள் குறைகளைச் சொல்லிட முயற்சி செய்தார்கள்

எங்களால் அவர்கள் சொல்லுவதைப் புரிந்திடவும் முடியவில்லை அதேபோல் அவர்களுக்கு ஆறுதல் சொல்லவும் தெரியவில்லை.

நாங்கள் இயன்றதைச் செய்வோம் என அறுவைச்சிகிச்சை செய்யும் அறைக்குள் புகுந்தோம் அங்கே அஜீஸா இன்னும் பல வெளிநாட்டு மருத்துவர்கள் இவர்களெல்லாம் நின்று கொண்டிருந்தார்கள். தாதிப்பெண்கள் பலரும் நின்றுகொண்டிருந்தார்கள்

தாதிப்பெண்களிடம் காயம்பட்டவர்கள். மருத்துவமனையின் வாசலை மிதித்த உடன் கவனிக்கும் படி கேட்டுக்கொண்டாள்

எங்களிடம் உணவுப்பொருள்களும் மருந்துகளும் ஒன்றுபோலவே தீர்ந்து போய்விட்டன. நான் பாலஸ்தீன செம்பிறை உதவி நிறுவனத்திடமும் பாலஸ்தீன் ரெட் கிரஸண்ட் சொஸையிட்டி செஞ்சிலுவை நிறுவனத்திடமும் இன்னும் லெபனான் அதிகாரிகளிடமும் உதவி கேட்க செல்கின்றேன். மூன்று மணி நேரத்திற்குள் வந்துவிடுவேன் அதுவரை மருத்துவமனையை கவனித்துக் கொள்ளுங்கள் எனக்கூறி சென்றுவிட்டாள்

முக்கியமான இடங்களின் அறைகளின் சாவியை அவள் என்னிடம் தந்தாள்

செய்வதறியாது நாங்கள் அவளை அனுப்பினோம்

அவள் மீண்டும் வருவாளா என்பது சந்தேகத்திற்குரியதே இந்த ஐயம் என்னைப்போலவே எல்லோருடைய உள்ளங்களிலும் குடிகொண்டிருந்தது என்பதை அவர்களின் முகங்கள் காட்டின

அஜீஸா நேரே பாலஸ்தீன செம்பிறை உதவி நிறுவனத்திடம் வந்தாள் அவர்கள் தாங்கள் உணவுப் பொருள்களையும் மருந்துகளையும் தயாராக

வைத்திருக்கின்றோம். ஆனால் அதை காஸா மருத்துவமனைக்கு கொண்டுவருவது தான் மிகவும் கடினம். இடையில் இஸ்ரவேலர்களோ அவர்களுக்கு ஏஜண்டுகளாக இயங்குபவர்களோ பார்த்துவிட்டால் நொடிப்பொழுதில் தாக்கி அழித்து விடுவார்கள் என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள்.

அஜீஸா, இல்லை என்ன ஆனாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் நாம் உதவிகளை விரைவு படுத்ததியாக வேண்டும்

காஸா மருத்துவமனை மருத்துவமனையாக இல்லை, வெறும் கட்டடமாகவும் இன்னொரு அகதிகள் முகமாகவுமாக இருக்கின்றது என்றாள்

இந்நிலையில் அஜீஸாவுக்கு மிகவும் அறிமுகமான பாலஸ்தீன் செம்பிறை நிறுவனத்தைச் சார்ந்த பெண் அதிகாரி ஒருத்தி அஜீஸாவை கையைப் பிடித்திழுத்து தனியாக அழைத்துச் சென்றாள் அவள் அஜீஸாவிடம், "அஜீஸா நிலைமை தலைகீழாகப் போய்கொண்டிருக்கின்றது. இஸ்ரேலிய இராணுவம் மட்டும் தான் ஷாப்ரா ஷத்திலாவில் படுகொலைகள் நடத்திக்கொண்டிருக்கவில்லை. இப்போது லெபனால் கிருஸ்தவ அமைப்புகளான கத்தஇப்ஸ் (Khatebs) ஃபாலன்கிஸ்ட்ஸ் (Phalangists)," ஹத்தாத்ஸ் போன்ற அமைப்புகள் கொலைக்களத்தில் நிற்கின்றன.

இந்த அமைப்புகள் அனைத்தையும், இஸ்ரேலிய இராணுவமே இயக்குகின்றது. இதில் ஹத்தாத்ஸ் நீண்ட காலமாக இஸ்ரேலிய உளவுபடையிடம் பணத்தைப் பெற்று இயங்கும் படை. இவர்களின் அடுத்த குறி காஸா மருத்துவமனை தான்.

அதையும் விஞ்சி நீதான் முதற்குறி.

உன்னையும் காஸா மருத்துவமனையையும் அழிப்பதற்கான திட்டங்கள் விரைந்து நிறைவேற்றப் படுகின்றன.

நீ காஸா மருத்துவமனையிலிருந்து வெளியே வந்தது உயிரோடு வந்தது எல்லோருக்கும் ஆச்சர்யம் என சொன்ன அந்தப் பெண் அதிகாரி அஜீஸா பார்த்தாயா உலகெல்லாம் ஒன்றாய் கூடி பாலஸ்தீன மக்களுக்குச் செய்யும் அநியாயத்தை. தாரை தாரையாக வடிந்த கண்ணீரை துடைக்க மாட்டாமல் அஜீஸாவின் கையைப் பிடித்தவளாக நான் ஒன்று சொல்வேன் கேட்பாயா என்றாள்.

அஜீஸாவும் தன் கண்களில் வடிந்த கண்ணீரை துடைத்தவளாய் என்ன? எனக் கேட்டாள்.

நீ நான் சொல்லும் ஓர் இரகசிய இடத்திற்குச் சென்றுவிடு. உன்னை நீ இப்போது காப்பாற்றினால் பின்னால் உன் சேவைகளால் நூற்றுக்கணக்கான பாலஸ்தீன முஸ்லிம்களை காப்பாற்றலாம்.

நீ வாழ்ந்தாக வேண்டும் என்பது சமுதாயக் கட்டாயம். ஆகவே நீ நான் சொல்வதை தயவு செய்து மறுக்காதே என்றாள்.

கண்களில் அணையுடைத்து வந்த கண்ணீரை இரண்டு பேராலும் தடுக்கமுடியவில்லை. நான் எப்படி அந்த மக்களை பிரிய முடியும்?

என் வாழ்க்கையே காஸா மருத்துவமனைதான் அங்கேயே அது முடியட்டும் என்றாள்

அத்தோடு உங்களால் முடிந்த உதவிகளை காஸா மருத்துமனைக்கு அனுப்புங்கள்.

நான் செஞ்சிலுவை நிவாரணக் குழுவிடம் சில மருத்துவ உபகரங்களை பெற்றாக வேண்டும் அங்கே போகின்றேன் எனக்கூறி விரைந்தாள்.

நேரே பக்கத்திலிருந்த செஞ்சிலுவை சங்கத்தின் அலுவலகம் சென்றாள்.

செஞ்சிலுவை சங்க அலுவலகம் சென்ற அஜீஸாவுக்கு அமோக வரவேற்பு காத்திருந்தது.

அஜீஸாவின் சேவைகளை அவர்களும் நன்றாக அறிந்திருந்தார்கள்.

அஜீஸா கேட்ட உதவிகளை தருவதாக தயங்காமல் வாக்களித்தார்கள், ஆனால் அஜீஸாவிடம் நாங்கள் கேள்விபடுவதெல்லாம் உண்மையாகிவிடக்கூடாது என்றே விரும்புகின்றோம்.

ஆகவே நீ பத்திரமாக ஓர் இடத்திலிருப்பது நல்லது என்றார்கள்.

அஜீஸாவின் உயிருக்கும் இணைத்தே இஸ்ரேலிய தீவிரவாதிகள் உலை வைத்துவிட்டார்கள் என்பது மட்டும் தெளிவானது அஜீஸாவுக்கு

செஞ்சிலுவை சங்கத்தினருக்கும் நன்றி சொல்லிவிட்டு அஜீஸா காஸா மருத்துவமனை நோக்கி விரைந்தாள்.

இல்லை மரணத்தின் வாயிலை நோக்கி விரைந்து கொண்டிருந்தாள். யூத தீவிரவாதக் குழுக்களும் காஸா மருத்துமனை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள்.

- தொடரும். இன்ஷா அல்லாஹ்...

33ம் பக்க தொடர்ச்சி

## கர்கரேயை கொலை செய்தது யார்?

எதையும் சாராத ஒரு நிறுவனமோ அல்லது உயர் நிலை கமிஷனோ இதனை விசாரிக்க வேண்டும். இதே கோரிக்கை முக்கிய எதிர் கட்சி தலைவர் L.K. அத்வானி அவர்களால் நான் VII பத்தியில் குறிப்பிட்டு ள்ளபடி கோரப்பட்டுள்ளது.

பிராம்மணிஸ்ட்களை பொறுத்தவரை இதனை மூன்று விதமாக எதிர் கொள்வார்கள். அவர்களுடைய செயல்முறை திட்டத்தின் படி இதைப் பற்றி கவலைப்படாம லிருக்கலாம் (இந்த வழக்கை பொறுத்தவரை அதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் இந்த விஷயம் மிகவும் உணர்ச்சிகரமானது)

அல்லது இந்த புத்தகத்தின் சில உணர்ச் சிகரமான பகுதிகளை கையிலெடுத்துக் கொண்டு மக்களின் ஆவேசத்தை தூண்டி விடலாம்.

அல்லது "இந்து மதத்தில் விடுகதைகள்" The Riddlesof Hindusim என்ற Dr. அம்பேத்கரின் புத்தகத்தின் வழக்கின் போது செய்த தைப் போன்று பொதுவான இந்துக்களின் மனோ நிலையை சோர்வடையச் செய்து அந்த திரைகளுக்கு பின்னால் தங்களை ஒளித்துக் கொள்ளலாம்.

வாசகர்களை நான் கேட்டுக் கொள்வது என்ன வென்றால் இந்த புத்தகத்தை முழுமையாகப் படிக்காமல் எந்த முடிவுக்கும் வர வேண்டாம். மேலும் இந்த புத்தகம் எந்த நோக்கத்தி ற்காக எழுதப் பட்டதோ அதன்படி பிராம்மணீயத்தின் பொய்யான விளம்பரத்தில் வீழ்ந்து விடாமல் அதனை தோல்வியடைய செய்யுங்கள்.

### மூன்றாம் பதிப்பின் முன்னுரை

அக்டோபர் 2009ல் தான் இந்த நூலின் முதல் பதிப்பு வெளிவந்தது. வந்த மூன்று மாதங்களுக்குள், இஃது மகத்தான மாற்றங் களைக் கொண்டு வந்தது.

அதற்கு பின்னால் நடந்த பல நிகழ்வுகள் இந்த நூலின் - முதல் பதிப்பில் சொல்லப்பட்டவற்றை உண்மை என நிரூபித்தன. கிடைத்த தகவல்களின் முடிவாக பல உண்மைகள் வெளிவந்தன. இவ்வாறு வெளிவந்த உண்மைகளை இப்படி பட்டியல் போடலாம்.

1. கர்கரேயின் மரணத்திற்கு முன் இன்னுஞ் சொன்னால் இந்த நூல் வெளிவருவதற்கு முன் - முஸ்லிம்கள் தாம் நாட்டில் நடக்கும் குண்டு வெடிப்புகளுக்கெல்லாம் காரணம் என்றே மக்கள் நினைத்தார்கள். நம்பினார்கள். ஆனால் கர்கரேயின் கொலைக்கு பின், இந்நூல் வெளிவந்தபின், நாடெங்கிலும் குண்டு வெடிப்புகளை நிகழ்த்தியவர்கள் முஸ்லிம்களல்ல என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்தது. அத்தோடு, இந்துத்துவ தீவிரவாதிகள் தாம் இந்தக் குண்டு வெடிப்புகளையெல் லாம் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள் என்ற உண்மை யும் மக்களைச் சென்றடை ந்தது.

இந்நிலையில் தாம் சில பார்ப்பணீய சக்திகள் குண்டு வைப்பவர்கள் முஸ்லிம்கள் தாம் என்பதை மீண்டும் மக்களிடையே பரப்பிட கோவாவில் ஓர் குண்டு வெடிப்பை நிகழ்த்தினார்கள். இந்தக் குண்டு வெடிப்பு தீபாவளி திருநாளின் போது மக்கள் அதிகமாக குழுமும் இடத்திலே நிகழ்த்தப்பெற்றது. இதன் மூலம் முஸ்லிம்களைப் பழிக்கும் படலம் தொடங்கும் என எதிர்பார்த்தார்கள்.

2. மராட்டிய மாநில அரசு ஒரு நாடகத்தை அரங்கேற்றியது. அது பிரதான் என்றொருவரின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து 26/11 என்ற மும்பை தாக்குதல்களை ஆய்வு செய்ய பணித்தது. இதனை பிரதான் ஆய்வுக்குழு என அழைத்தார்கள். இந்த பிரதான் ஆய்வுக்குழு, ஓர் அறிக்கையை தாக்கல் செய்தது. இந்த அறிக்கையின் திருத்தப் பட்ட ஒரு பகுதியை முதலில் மெல்ல வெளியிட்டது. இதனை அந்த அறிக்கையின் ஒரு பகுதி என்றும் அது அரசுக்கே தெரியாமல் வெளிவந்துவிட்டது என்றும் கூறிற்று.

இப்படியொரு நாடகத்தை அஃது நடத்தியதற்குக் காரணம், பிரதான் குழுவின் அறிக்கையின் எந்தப் பகுதியும் வெளியில் யாரிடமுமில்லை என்பதை உறுதி செய்வதே!

***இன்ஷா அல்லாஹ் தொடரும்.............***

# வேர்கள் பதிப்பகம்

| | | |
|---|---|---|
| 1. | சாதி ஒழிந்தது -தலித் இலக்கியத்தின் ஓர் முன்னோடி<br>மூன்றாம் பதிப்பு டி.எம் மணி | விலை 40.00 |
| 2. | ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு -<br>மூன்றாம் பதிப்பு - மு குலாம் முஹம்மது | விலை 60.00 |
| 3. | செந்தமிழ் நாட்டுச் சேரிகள் -<br>டி.எம் மணி | விலை 40.00 |
| 4. | சிறையில் எனது நாட்கள் - ஜைனப் அல் கஸ்ஸாலி (மிஸ்ரி)<br>தமிழில் மு குலாம் முஹம்மது | விலை 90.00 |
| 5. | அஹ்மதாபாத் குண்டு வெடிப்பு உண்மைகள் -<br>மு. குலாம் முஹம்மது | விலை 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்பும் பாட்லா ஹவுஸ் படுகொலையும் -<br>மு. குலாம் முஹம்மது | விலை 10.00 |
| 7. | நாடாளுமன்றத் தாக்குதல் வெளிச்சத்திற்கு வந் த உண்மைகள் -<br>மு. குலாம் முஹம்மது | விலை 15.00 |
| 8. | மால்கம் எக்ஸ் (விரிவாக்கப்பட்ட நான்காம் பதிப்பு)<br>மு. குலாம் முஹம்மது | விலை 80.00 |
| 9. | கர்கரேயை கொன்றது யார்? ( இரண்டாம் பதிப்பு - தமிழ் ) | விலை 150.00 |
| 10. | கர்கரேயை கொன்றது யார்? (மூன்றாம் பதிப்பு - ஆங்கிலம், உருது ) | விலை 300.00 |
| 11. | சாதி ஒழிந்தது - ஆங்கிலம் (முதல் பதிப்பு ) | விலை 40.00 |

விரைவில்

1. பாலஸ்தீன் முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு (விரிவாக்கப்பட்ட பதிப்பு)
2. தாலிபன்களின் பிடியில்... யுவான் ரிட்லி (தமிழில்)
3. நாம் பிரிந்து விட வேண்டாம் - யூசுப் அல் கர்ளாவி
4. நான் ஏன் முஸ்லிமானேன்?

# வைகறை விஷன்

## வீடியோ - சிடி, டிவிடி

1. நாளைய முஸ்லிம் பெண்கள் ( கா.மு. இல்யாஸ் ரியாஜி)
2. இஸ்லாம் தாக்கப்படுவது ஏன்? (மு. குலாம் முஹம்மது)
3. இஸ்லாமிய நாகரிகம் (மு. குலாம் முஹம்மது)
4. முஸ்லிம்கள் பலமும் பலவீனமும் (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
5. இஸ்லாம் - சோதனைகள், சவால்கள், சாதனைகள் (எம்.ஜி.எம்)
6. எதிர்காலம் இஸ்லாத்திற்கே (கா.மு.இல்யாஸ் ரியாஜி)
7. கர்கரேயை கொன்றது யார்? புத்தக வெளியீட்டு விழா (சென்னை, மதுரை, திருச்சி)